கல்கி

KALKI 9.5.93 ரூ. 3.00





காங்கிரஸின் எழுச்சி:

புதிய திட்டம் பலன் தருமா?



சுகன்யா:
ஒரு சந்திப்பு

வியர்வை...





விந்தையூட்டும் வியர்வையின் எதிரி.


வியர்வையினால் உ
வாகிறது வேர்க்குரு
எனவே, வியர்வையை
வெறுப்பதைவிட, ஷவ
டூ ஷவர் கொண்டு
வேர்க்குரு வை
எதிர்த்திடுங்கள். ந
மணமுள்ள, விய
வையின் எதிரி இது
இதன் செயல் பிரமிக்க
வைக்கும் உங்களை
எனவே, வியர்வையை
ஒழித்து, வேர்க்குரு
வையும் ஒழிப்பீர்
ஷவர் டூ ஷவ
கொண்டு.

கலோன் கூ
லாவெண்டர் மற்று
சந்தன நறுமணங்களி
கிடைக்கிறது.

‘‘டீ.வி. பார்க்காத ஆன்ட்டி!’’



* மேரி டேவிட்



* ஜானதன்

ஆம், டாக்டர் மேரி டேவிட்டுக்கு அவர் வசிக்கும் பகுதியில் உள்ள குழந்தைகள் இப்படித்தான் பெயர் வைத்திருக்கிறார்கள்! இவர் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் துறை பேராசிரியை.

''அயல் நாடுகளுக்குப் போகச் சந்தர்ப்பம் கிடைத்த போது, அங்கு குடும்ப வாழ்க்கையே டீ.வி.யால் பாதிக்கப்படுவதைக் கண்கூடாகப் பார்த்தேன். ஒரே குடும்பத்தினர், மாலை வீடு திரும்பியதும் தனித்தனி அறைகளில் ஆளுக்கொரு டீ.வி. முன் முடங்கி விடுவார்கள்! அவரவருக்குப் பசிக்கும் போது தாமே உணவை ஃப்ரிஜ்ஜிலிருந்து எடுத்து, சூடேற்றி, டீ.வி. முன்னால் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இந்த நிலை நமது நாட்டிலும் தோன்ற அதிக நாள் ஆகாது...''

''இந்தச் ச மு தா ய நோக்கில்தான் டீவி வாங்காமல் இருக்கிறீர்களா?''

''அது மட்டுமில்லை; தனிப்பட்ட காரணமும் உண்டு. நான் தீவிர புத்தக ரசிகை. ஒரு புத்தகம் படிக்கும் போது, நானும் ஒரு படைப்பாளி ஆகிவிடுகிறேன்... டீ.வி.யில் எவ்வளவுதான் உயர்வாக நிகழ்ச்சி அமைந்தாலும் இந்த உன்னத அனுபவம் ஏற்படுவதில்லை; என் சிந்தனா சக்தி தூண்டி விடப்படுவதில்லை.''

பணி நிமித்தம் சென்னையில் வசிக்கும் டாக்டர் மேரிதான் டீ.வி. பார்க்காதவர். கேரளாவில் உள்ள அவர் கணவர் டீ.வி. வைத்துக் கொண்டிருக்கிறார்.



* ரங்கமணி

‘‘என் ஒன்பது வயதுப் பேத்தியோ அல்லது பேரனோ டீ.வி. வாங்க வேண்டும் என்று இதுவரை ஒருநாள் கூடக் கேட்டதில்லையே... எங்கள் குடும்பமே டீ.வி. பார்க்காத குடும்பம்...'' என்கிறார் ரங்கமணி கிருஷ்ணசுவாமி.

இவர் குடும்பத்தில் எல்லோருமே இசைப் பிரியர்கள். இசை நிகழ்ச்சிகளின் ஏராளமான கேஸட்டுகளைச் சேகரித்து வைத்துள்ளார்கள். திருமணத்துக்கு முன் கமல் ரசிகையாக இருந்த இவர்கள் வீட்டு மருமகள் கூட இப்போது இசை ரசிகையாக மாறி விட்டார்!

''டீ.வி. பார்த்தால் நேரம் வீணாவதைப் போல் உணர்கிறோம்...'' என்று கூறும் ரங்கமணி, ஒரு கல்யாண விஷயமாகப் பேச ஒருவர் வீட்டுக்குப் போன போது, சிதை எரியும் சினிமா காட்சி டீ.வி. திரையில் தோன்றியதைக் குறிப்பிடுகிறார். ''அந்தச் சமயத்தில் அதை அணைக்கக் கூடத் தோன்றாமல் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்... இப்படி ஓர் அடிமைத்தனம் தேவைதானா?'' என்கிறார் ரங்கமணி.

இந்தக் குடும்பத்தினரின் வைராக்கியம் தளர்வது டீவியில் சிறந்த இசை நிகழ்ச்சிகள் வரும்போதுதானாம். அப்போது மட்டும் அக்கம் பக்க வீடுகளில் போய்ப் பார்க்கிறார்கள்!

சமீபத்தில் ஒரு சிறு விபத்துக்கு உள்ளாகி வீட்டிலேயே இருக்கிறார் 19 வயது ஜானதன். அஞ்சல் வழியில் கல்வியைத் தொடருகிறார். படிப்புக்கு ஒதுக்கியது போக, பிரார்த்தனை, பைபிள் வாசித்தல் என்று நேரம் சரியாக இருக்கிறது. ''டீ.வி. பார்க்க no time...'' என்கிறார் ஜானதன். இவரது இரு மூத்த சகோதரிகளும் டிட்டோ!

ஜானதன் ஃபுட்பால் பிரியர். 'உலகக் கோப்பை நிகழ்ச்சிகள் பார்க்கவாவது டீ.வி. வாங்கலாமா?' என்று ஒரு சமயம் சபலம் தட்டிய போது, 'டீ.வி.யா? அதை நான் பார்ப்பதே கிடையாது!' என்று அமெரிக்க மதபோதகர் பாபி ஃபிலிப் சொன்னது நினைவு வர, ஜானதன் டீ.வி. தேவையில்லை என்றே முடிவெடுத்தார்.

இவர் அம்மாவே சில டீ.வி. நிகழ்ச்சிகளில் தோன்றியிருக்கிறார் எனினும் வீட்டுக்குள் டீவியை இவர்கள் நுழைய விடவில்லை!

– நிர்மலா சக்ரவர்த்தி

படங்கள் : கோபிநாத்

பிளவுபட்டிருந்த காங்கிரஸ் இன்று ஒன்றுபட்டு எழுச்சி பெற்றுள்ளது - சந்தேகமில்லை. ஆனால் திராவிட பாரம்பரியக் கட்சிகளை எதிர்க்கும் நோக்கில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை வகுக்கும் புதிய திட்டத்தின் ஓர் அம்சமாக, பாட்டாளி மக்கள் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு என்ற கருத்து ஏற்கெனவே சர்ச்சைக்குரியதாகி விட்டது. இந்தப் பேட்டியில் அதற்கும் ஒரு விளக்கம் அளிக்கிறார் வாழப்பாடி. சத்தியமூர்த்தி பவனில் த.நா. காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியையும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியத்தையும் ஒருசேர வைத்து,

கல்கி கண்ட சிறப்புப் பேட்டி :

“இந்த சர்வாதிகார ஆட்சியை இனியும்

கல்கி : தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் ஆளும் கட்சியாக உருவாக என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

வாழப்பாடி : இருபத்தியாறு ஆண்டு காலமாக ஒரு மாற்றுக் கட்சியாகத் தமிழக காங்கிரஸ் தன்னை உருவாக்கிக் காண்பிக்கவில்லை என்பதுதான் உண்மை. சரியோ, தவறோ, மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற காரணத்தால், ஏதேனும் ஒரு மாநிலக் கட்சியோடு தேர்தல் உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தற்போது உள்ள சூழ்நிலையில், தி.மு.க.- அ.தி.மு.க. ஆகிய ஆட்சிகளைத் தமிழக மக்கள் நீண்ட காலமாகவே பார்த்திருக்கிறார்கள். மக்கள் மத்தியில், இந்த இரண்டும் அல்லாத காங்கிரசுக்கு ஏன் ஒரு வாய்ப்பு அளிக்கக் கூடாது என்ற எண்ணம் இப்போது துளிர்விட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்ளுவது எங்கள் கடமை. எனவே, தனிப்பட்ட முறையில் என் எண்ணம் என்னவென்றால், தமிழகத்தில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் அல்லாத, மதச் சார்பு அற்ற, முற்போக்கு எண்ணம் கொண்ட கட்சிகள், காங்கிரஸ் தலைமையில் ஒன்றாக இணைந்து ஓர் அணியை உருவாக்குவது, வரக்கூடிய தேர்தல் காலகட்டங்களில் மக்களுடைய நம்பிக்கையை எதிரொலிக்கக்கூடியதாக இருக்கும்.

கல்கி : அப்போதும் கூட, தனித்து நிற்க முடியாது, ஓர் அணி சேர்ந்துதான் நிற்க வேண்டும் என்கிறீர்களா?

வாழப்பாடி : இன்றைக்கு உள்ள நிலைமையில் அதுதான் சாத்தியம். ஒரு சதவிகித



ஓட்டு வித்தியாசம் கூட நிலைமையை ஒரே யடியாக மாற்றிவிடக் கூடும் என்பதைப் பார்த்திருக்கிறோம். ஏதாவது ஓர் அணியில் கூட்டுச் சேர்ந்திருப்பதுதான் நல்லது என்ற சூழ்நிலை இருக்கிறது.

கல்கி : அ.தி.மு.க. உறவு முறிந்ததும், உடனே பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினீர்களா?

வாழப்பாடி : சந்தித்தேன். பா.ம.க.வை விரோதித்துக் கொண்டு ஒதுக்கி வைப்பதை விட, அவர்களைத் தேசிய நீரோட்டத்தில் சேர்த்து அரவணைத்துக் கொண்டு போவது தான் நாட்டுக்கு நல்லது என்று நினைப்பவன் நான். அவர்கள் எல்.டி.டி.ஈ.யை ஆதரித்தவர்களாயிற்றே என்று கேட்பீர்கள். இரண்டு வாரம் முன்னால் கூட மதுரையில் டாக்டர் ராமதாஸ் பத்திரிகையாளர்களிடம் பேசும் போது, ராஜீவ் படுகொலையை முதன் முதலில் கண்டித்து அறிக்கை விட்டவர் தாம்தான் என்றும், எல்.டி.டி.ஈ.யின் பயங்கரவாதச் செயல்களைத் தாம் ஆதரித்ததில்லை என்றும் சொல்லியிருக்கிறார்.



கல்கி : அன்றைக்கு ஒரேயடியாக அ.தி.மு.க.வை ஆதரித்து, இன்று ஒரேயடியாக எதிர்க்க உண்மையான காரணம் என்ன?

வாழப்பாடி : காரணம், அரசியல் உத்திதான். அன்றைக்கு முழுமையாக ஆதரித்தது ஓர் உத்தி என்றால், இன்று எதிர்ப்பதும் ஓர் உத்திதான்! அன்றைக்கு தி.மு.க.வை முழு மூச்சாக எதிர்த்து நின்று தோற்கடிக்க வேண்டிய சூழ்நிலையில், ஒரு நீண்ட காலக் கூட்டணி உருவாக்க வேறு ஒரு மாநிலக் கட்சியுடன் கூட்டுச் சேர வேண்டியிருந்தது. செய்தோம். இன்று நாங்கள் எதிர்ப்பது பழைய

சிக்க முடியாது!”

- வாழப்பாடி, எஸ்.ஆர்.பி. பேட்டி



அ.தி.மு.க.வை அல்ல. ஜெயலலிதா தலைமையில் இப்போது பலம் குறைந்து விட்டது. முப்பது சதவிகிதத்துக்குக் குறைந்து போய் விட்டது!

கல்கி : எப்படிச் சொல்லுகிறீர்கள்?

வாழப்பாடி : பயணம் போகிறோம். மக்களைச் சந்திக்கிறோம். கிராமங்களில் போனால் நிலைமை மாறியிருப்பது தெரிகிறது. அண்மையில் நடந்த பனகல் பார்க் கூட்டம் பிரம்மாண்டமாயிருந்தது. நாங்களே எதிர்பார்க்கவில்லை!

கல்கி : கூட்டத்தை வைத்து ஆதரவு வோட்டுக்களைச் சொல்ல முடியாது என்று கலைஞரே சில முறை சொல்லியிருக்கிறார்...

வாழப்பாடி : நான் சொல்ல வந்தது அதுவல்ல. ஏழு மணிக்கு ஆரம்பித்த கூட்டம் இரவு ஒரு மணி வரை நடந்தது. சாதாரணமாகப் பத்து மணிக்குக் கலைந்து போய் விடும் மக்கள், நள்ளிரவு தாண்டி ஒரு மணி வரை அமைதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதுவும் கூட்டணிக் கட்சியுடன் தொடர்பு முறித்துக் கொண்ட பிறகு! இரண்டாவது, லேடி, காங்கிரசுக்கு வீக்ஸ்பாட். மக்கள் மனத்தில் ஒரு மாற்றம் தெரிகிறது. காங்கிரஸ் பலம் பெருகி, ஒரு மாற்றாக வரக்கூடிய சாத்தியம் உண்டு என்று அவர்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

கல்கி : உறவு முறிய யார் காரணம்?

வாழப்பாடி : சூழ்நிலைதான். காங்

கிரஸ் கட்சி பற்றிய தாழ்வான கருத்துக்களை அ.தி.மு.க. சொன்ன போதும், நாங்கள் சகித்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால் அது எல்லை மீறுகிற நேரத்தில், காங்கிரஸ் ஸ்தாபனம் தன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. தோழமைக் கட்சிதான் என்றாலும் எதிர்க்கட்சி என்ற அளவில் தவறை எடுத்துச் சொல்லவும் முற்பட்ட போது, நியாயமான விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத அ.தி.மு.க. தலைமை எங்களைக் கடுமையாக விமர்சித்தது. பொதுவாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களைக் கூட, அ.தி.மு.க. தலைமை ஜனநாயக ரீதியில் ஏற்கவோ, சகித்துக் கொள்ளவோ தயாராயில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஒரு சர்வாதிகார நாட்டில் சர்வாதிகாரியாக இருந்திருக்க வேண்டியவர், ஒரு ஜனநாயக நாட்டில் முதல்வராக ஆகி விட்டதுதான் துரதிர்ஷ்டம்.

கல்கி : இதை இப்போதுதானே சொல்லுகிறீர்கள்?

வாழப்பாடி : இது நாலு வருடமாகவே தெரியும். சில பல விஷயங்களைச் சகித்துக் கொண்டு போக வேண்டிய சூழ்நிலை இருந்ததால்தான் அவர்களோடு கூட்டணி சேர்ந்து அதை நீடிக்கவும் வேண்டியிருந்தது.

கல்கி : (எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தைப் பார்த்து) இதே கருத்துக்களைத்தான் நீங்களும் சொல்லுகிறீர்களா? அவர் சொல்லுவதை நீங்கள் அப்படியே ஏற்கிறீர்களா?

எஸ்.ஆர்.பி.: எங்களுடைய அனுபவத்தைத்தான் அவர் இத்தனை தூரம் பகிர்ந்து கொண்டிருக்கிறார். ஜனநாயகத்தில் விவாதத்துக்கு இடம் இருக்க வேண்டும். ஜனநாயகத்தின் ஆதாரப் பண்பு அதுதான்... இன்றைக்கு இருக்கிற ஆட்சியில் சகிப்புத் தன்மை கிடையாது. சகிப்புத்தன்மை வேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். தோழமைக் கட்சியாக இருந்து சின்ன விமர்சனம் செய்வதைக் கூட அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கல்கி : இப்போது நீங்கள் கண்டுபிடித்து விமர்சனம் செய்யும் தவறுகள் என்ன?

எஸ்.ஆர்.பி: டான்சி நிலம் வாங்கிய விஷயம். இட் இஸ் இம்ப்ராபர். பதவியில் இருந்து கொண்டே இவர்கள் நிலம் வாங்கியிருக்கிறார்கள். ஸ்பிக் ஷேர்கள் விவகாரத்தில் முறைகேடு. இதை எல்லாம் கட்டிக் காட்டினோம். எந்த இலவசத் திட்டத்திலும் ஊழல் நிறைந்திருக்கிறது. இனி இவர்கள் நீடித்திருப்பது ஆபத்தானது என்பது மக்கள் மத்தியில் பேசப்படும் அளவுக்கு வந்து விட்டது. அதனால்தான் பஞ்சாயத்து, மாநகராட்சித் தேர்தல் என்றாலே இப்போது வேண்டாம் என்கிறார்கள்!

கல்கி : சபைக்கு உள்ளே இருந்து பணியாற்ற வேண்டியதை மறந்து, ஒவ்வொரு பிரச்னையிலும் வெளிநடப்புச் செய்கிறீர்கள் என்று காங்கிரஸ் உறுப்பினர்களைக் குற்றம் சொல்லுகிறார்களே?

எஸ்.ஆர்.பி: சட்டசபையில் மிக மிகப் பொறுமை காட்டினோம். அப்படியும் நாங்கள் வெளியேற்றப்பட்டோம். இருந்தால் தானே பேசுவீர்கள்? - என்று அச்சுறுத்துவது. நேரிடையான உரிமை மீறல் பிரச்னை இருந்தால் கூட விவாதிக்க அனுமதி மறுக்கிறார்கள். நான் ஆளுநர் உரையைத் தொகுத்து உரைப்பதாக இருந்தது. அவை முன்னவர், நிதியமைச்சர் என்னைப் பேச அனுமதிக்கத் தயாராக இருந்தார். எங்கிருந்து சமிக்ஞை வந்ததோ தெரிய வில்லை! என்னைப் பேச அனுமதிக்க வில்லை. ஆக ஜனநாயகத்தின் குரல்வளை நெறிக்கப்படுகிறது.

வாழப்பாடி : பாராளுமன்றத்திலேயே பி.எம். பேசிக் கொண்டிருக்கும் போது, எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று விட்டால், பிரதமர் உட்கார்ந்து விடுவார். அத்வானி பேசிய பிறகுதான் பி.எம். பேசுவார். எதிர்க்கட்சித் தலைவருக்குத் தம் கருத்தை வெளிப்படுத்த முதல் உரிமை கொடுக்கப்படும். இதுதான் பாராளுமன்ற ஜனநாயக முறை.

எஸ். ஆர். பி: இங்கேதான் எதிர்க்கட்சித் தலைவர் வாக்கவுட் பண்ணப் போகிறேன் என்று சொல்லுவதற்குக் கூட மைக் கிடை யாது!

வாழப்பாடி : இப்போது காங்கிரஸ் கட்சி, முழுமையான ஓர் எதிர்க்கட்சியின் கடமையைச் செய்யப் புறப்பட்டிருக்கிறது. பல்வேறு ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஊழல்களை, எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லி விடுவாரோ, இப்போது செல்வக்குமார் வைத்திருந்தது மாதிரி ஆதாரம் ஏதாவது எடுத்துக்காட்டி விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது.

எஸ்.ஆர்.பி: ராமசாமி படையாச்சி மாவட்டம் அறிவிப்புச் செய்தார் முதலமைச்சர். அதில் காங்கிரஸ் என்ற பெயரோ, காங்கிரஸ் அமைச்சராயிருந்தவர் என்ற வார்த்தைகளோ இல்லவே இல்லை. இத்தனைக்கும் செவ்வாய்க் கிழமை கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் ராமசாமி படையாச்சி மாவட்டம் என்று பெயரிட, காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். புதன் கிழமை வருடப் பிறப்பு விடுமுறை. வியாழக்கிழமை முதலமைச்சர் அறிவிப்பைச் செய்கிறார் - அதிலும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுப் புதிய மாவட்டத்துக்குப் பெயர் சூட்டுவதாக!

வாழப்பாடி : கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் அறிவிப்பதாகச் சொல்லியிருந்தால் அது நாணயமான, நேர்மையான செயல்.

கல்கி : உள்கட்சித் தேர்தல் இப்படித் தள்ளிப் போய்க் கொண்டே போகிறதே, எப்போது நடத்தப் போகிறீர்கள்?

பார்க் டவுன்
பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. போன்: 582676; 564354

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	* 5 ஆண்டு
13%	*14%*	*15%*	*17%*	*18%*	*18.5%*	*19%*	*20%*

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம் - 15 ஆண்டுகள்

வைப்புத் தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ. 6,320/-	ரூ. 6,000/-	ரூ. 6,000/-	ரூ. 56,320/-
ரூ. 12,640/-	ரூ. 12,000/-	ரூ. 12,000/-	ரூ. 1,12,640/-
ரூ. 18,960/-	ரூ. 18,000/-	ரூ. 18,000/-	ரூ. 1,68,960/-
ரூ. 25,280/-	ரூ. 24,000/-	ரூ. 24,000/-	ரூ. 2,25,280/-
ரூ. 50,560/-	ரூ. 48,000/-	ரூ. 48,000/-	ரூ. 4,50,560/-

பொற்குவியல் திட்டம்

ரூ 100/- மட்டுமே பிரதிமாதம் செலுத்தி 25 வருட முடிவில் ரூ 3 லட்சம் பெறுவீர்

பென்ஷனர் நலத் திட்டம்

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

ரூ. 10,000/-மும் அதற்கு மேலும்	12 மாதங்கள்	வட்டி 19½%
ரூ. 10,000/-க்கு கீழ்		வட்டி 18½%

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,25,000/- பெறலாம்

ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ. 2,400/- வட்டி விகிதம் ரூ. 1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D. கட்ட வேண்டியதில்லை...

SURESH

கௌரவ ஆலோசகர் :
P. பாலசுப்ரமணியம், B. Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3

(Friday Weekly Holiday)

இயக்குனர் குழுத் தலைவர் :
R. விவேகானந்தன், B. Com.

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours : Week days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி



"ஏம்பா... ஜைன் தோசை இருக்கா?"
"இருக்கு சார்... போடச் சொல்லவா?"
"அவசரப்படாதப்பா! யாருக்காவது ஜைன் தோசை போட்ட பிறகு அதே கல்லுல எனக்கு சாதா தோசை போட்டுக் கொண்டு வா!"
- சீர்காழி வி. ரேவதி

வாழப்பாடி : சேர்க்கப்பட்ட உறுப்பினர்களை உறுதிப்படுத்துவதென்பது ஒரு நீண்ட பிராசஸ். ஜில்லா அளவில் தொகுத்து, பிறகு மாநில அளவில் தொகுத்து, பிறகுதான் தலைமை நிலையத்துக்கு அனுப்ப முடியும். இப்போது இடைத் தேர்தல் இருப்பதால், அது முடிந்த பிறகு உட்கட்சித் தேர்தலை நடத்துவோம். வோரா வந்து பேசி விட்டுப் போயிருக்கிறார்.

கல்கி : இப்போது புதிதாக இன்னொரு அணி - அமைச்சர் தங்கபாலு அணி - இரண்டு மூன்று எம்.எல்.ஏ.க்களுடன் தோன்றியிருக்கிறதே...

வாழப்பாடி : ஒட்டுமொத்தமான ஓர் இணைப்பு உணர்வு ஏற்படுகின்ற வேளையில், இதுபோன்ற சிலர் சுயநல எண்ணத்தோடு செயல்பட்டு, சில பிரச்னைகளை உருவாக்குவது துரதிர்ஷ்டவசமானதுதான். ஆனால் காங்கிரஸ் தொண்டர்கள் இந்த விஷயத்தில் விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். இந்த முறை, இதுபோன்ற வேலைகள் எல்லாம் இங்கே இனி எடுபடாது!

கல்கி : மக்கள் மத்தியில் காங்கிரஸ் மறுபடி பேசப்பட என்ன செய்யப் போகிறீர்கள்?

வாழப்பாடி : நடக்கின்ற ஊழல்களையெல்லாம் எடுத்துக் காட்டுவோம். வளர்ச்சித் திட்டங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஆட்சியாளர்களின் வளர்ச்சித் திட்டங்கள்தாம் இப்போது முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. வேலை இல்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. லஞ்ச ஊழல் காரணமாக தொழிலதிபர்கள் இங்கு தொழில் தொடங்கத் தயங்குகிறார்கள். வறுமை ஒழிப்புக்காக மத்திய அரசு கொடுக்கும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது, அதற்குத் தகுதி படைத்த மக்களுக்குப் போய்ச் சேராமல், நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம், ஆளுகின்ற கட்சியின் ஆட்களும், அதிகாரிகளும் அடிக்கும் கூட்டுக் கொள்ளையாக மாறிவிடுகிறது. அரசுக்கு வரும் வருமானம் என்பது, வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல், பழைய காலத்து ராஜுதர்பாருக்குச் செலவிடுவது போல செலவிடப்படுகிறது!

கல்கி : டம்பாச்சாரி வேலைகள் வேண்டாம் எனில் இலவசத் திட்டங்களை நீங்கள் நிறுத்தி விடுவீர்களா?

வாழப்பாடி : இலவசத் திட்டங்களை நிறுத்த மாட்டோம். ஆனால் அவை மக்களுக்கு முறையாகப் போய்ச் சேருகிறதா என்று பார்ப்போம். வெல்ஃபேர் ஸ்கீம் என்று ஆரம்பித்த சில திட்டங்களை அப்படி நிறுத்தி விட முடியாது. உதாரணமாக எம்.ஜி.ஆர். காலத்தில் இலவச கைத்தறி வேட்டி, சேலை வழங்கும் போது, கோ ஆப்டெக்ஸிலிருந்துதான் வாங்கிக் கொடுப்பார். தேங்கிக் கிடக்கும் கைத்தறி வகைகளை இலவசமாக அரசு வழங்கும் போது, அது நெசவாளர்களுக்கு உதவியாக இருக்கும், அவர்கள் கஷ்டப்படாமல் இருக்க உதவும். ஆனால் இப்போது வெளி மார்க்கெட்டில் வாங்கலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்த பிறகு, அது ஊழலுக்குத்தான் வழிவகுக்கிறது.

கல்கி : அடி மட்டத்தில் கிராஸ்ரூட் லெவலில் - சென்று பணியாற்றுகிறார்களா உங்கள் உறுப்பினர்கள்?

வாழப்பாடி : சட்டமன்ற, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இல்லாத நேரங்களில், தொகுதிகளில் மக்கள் குறைகளைக் கேட்பது அவசியம்தான். பல உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் அலுவலகம் வைத்துப் பணியாற்றுகிறார்கள். ஆனால் இந்த ஆட்சியில் ஏற்பட்ட துரதிர்ஷ்டம், ஆட்சியாளர்களின் தொகுதிகளில் வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று வைத்துப் பணியாற்றுகிறார்களே தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் வந்து கேட்டால் எதுவும் செய்யாதே என்று கலெக்டர்களுக்கு உத்தரவு போடப்பட்டிருப்பது பற்றி ஏற்கெனவே செய்தி வந்திருக்கிறது; படித்திருப்பீர்கள். இதுவரை அரசு இதை மறுக்கவில்லை. ஆகவே எங்கள் உறுப்பினர்கள், மக்களின் கோரிக்கைகளை வாங்கி அரசாங்கத்துக்கு அனுப்பும் போஸ்ட் ஆபீஸ் மாதிரிதான் செயல்பட முடிகிறது.

கல்கி : ஆக சட்டமன்றத்திலும் பணியாற்ற முடியவில்லை. தொகுதியிலும் பணியாற்ற முடியவில்லை. அப்புறம் என்னதான் செய்வதாக இருக்கிறீர்கள்?

வாழப்பாடி : மக்கள் மத்தியில் போய்ப் பணியாற்ற வேண்டியதுதான். நடந்துள்ள தவறுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி அவற்றைச் சரிசெய்ய ஆதரவு கோருவோம். தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளின் ஆட்சியிலும் ஏமாற்றம் அடைந்துள்ள மக்கள் பழையபடி எங்களுக்குப் பேராதரவு தருவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

தொகுப்பு : சாருகேசி
அட்டை வண்ணப்படம் மற்றும்
புகைப்படங்கள் : கோபிநாத்

பயங்கரவாத நாடு-'பாக்' மீது முத்திரை!



● கடக் : வென்றவர் தோற்றார்!

மேமன் சகோதரர்கள் எங்கே இருக்கிறார்களோ என்னவோ, அவர்கள் ஆரம்பித்து வைத்த குண்டு வெடிப்புத் தொடர் கதை நீண்டு கொண்டே போகிறது. இதுவரை 3800 கிலோ RDX வெடி மருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. 9000 கிலோ அமோனியம் நைட்ரேட்; மற்றும் பல வகை வெடி மருந்துகள், எறி குண்டுகள்; ராய்காட்டில் 26 ராக்கெட்டுகள்! ராஜீவ் காந்தியைக் கொல்லத் தேவைப்பட்டது நூறு கிராம் RDXக்கும் குறைவு. பம்பாயின் தொடர் குண்டு வெடிப்புக்குத் தேவைப்பட்டது 25 கிலோ RDX மட்டுமே என்னும் போது, இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள வெடி மருந்துகளின் அளவு எவ்வளவு, அதனால் விளையக்கூடிய நாசம் எந்தகையது என்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

பாகிஸ்தான் மீது குற்றம் சுமத்துவது தவறல்ல என்றாலும் இவ்வளவு பெரிய அளவில் நடந்துள்ள சதிக்கு அந்த நாடு மட்டுமே காரணம் என்று நம்புவதற்கில்லை என்ற கருத்தும் பரவி வருகிறது. மேமன் சகோதரர்கள் நேரடியாக பாகிஸ்தான் செல்லவில்லை என்பதோடு, இன்று ஆப்கானிஸ்தானில் இருக்கலாம் என்ற அனுமானமும் உள்ளது. IOC எனப்படும் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பில் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவை பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக முத்திரை குத்தி ஒதுக்கும் அமெரிக்காவின் திட்டத்தை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று பாக். முயற்சி எடுத்துள்ளது. நியூயார்க் உலக வர்த்தக கேந்திரத்தில் முஸ்லிம் அடிப்படை வாதிகள் நடத்திய தொடர் குண்டு வெடிப்புக்கும் பம்பாய் சம்பவத்துக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்க, பாகிஸ்தானின் கை இருந்தாலும் அந்தக் கைக்கு ஆணை பிறப்பித்ததில் வேறு பலருக்கும் பங்கிருந்திருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது.



● RDX : கண்டுபிடிக்கப்பட்டதில் சிறு பகுதி!

சதிகாரர்களின் குண்டு ஒருபுறமிருக்க, அரசியல் குண்டுகளுக்கும் பஞ்சமில்லை. உயர்நீதி மன்றம் தேர்தல் வழக்குத் தீர்ப்பு ஒன்றின் இடையில் பவாரைக் குறை கூறிக் கண்டித்திருப்பதால் அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற வேட்டுச் சத்தம் அதிகமாகவே கேட்டது. ஆனால் அரசியல் சட்ட நிபுணரான பால்கிவாலா போன்றவர்கள், ''இது அந்துலே வழக்கு போன்றதல்ல; ராஜினாமா தேவையில்லை'' என்று கூறி பவாருக்குத் தைரியம் அளித்திருக்கிறார்கள்.


என்ன, ''எதிர்த்தரப்பு வேட்பாளர் பாட்டில் பணம், புடைவை, வேஷ்டி, சைக்கிள் எல்லாம் தந்தால் வாங்கிக் கொள்ளுங்கள்; ஆனால் வோட்டை மட்டும் எங்கள் வேட்பாளருக்குப் போடுங்கள்'' என்று நண்பர் கடக் சார்பில் (காங்கிரஸ்) தேர்தல் பிரசாரத்தின் போது பவார் பேசியதுதான் தவறாகப் போய் விட்டது.

சட்டப்படி குற்றமாகவே இருக்கலாம்; ஆனால் தேர்தல் களத்தில் நடக்காத ஒன்றை பவார் பேசி விடவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

பத்திரிகைகளுக்கும் இது தலைவலி சேர். பாரதிய ஜனதா கட்சியையும் ஹிந்து தீவிரவாதத்தையும் எதிர்த்து எழுதியதைத் தொடர்ந்து பம்பாயின் பல பகுதிகளில் ''இந்தியா டுடே'' அக்னியே ஸ்வாஹா! தொடர்ந்து ''வீக்லி''. இது சிவாஜியையும் ஜான்ஸி ராணியையும் அவர்கள் இமேஜைத் தகர்ப்பது போல் விமர்சிக்கப் போக, எதிர்ப்பு, தடை உத்தரவு, பிரதிகள் போலீஸாரால் பறிமுதல் இத்யாதி. டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ், தனது வாராந்திரிக்காக முதல் பக்கத்தில் மன்னிப்புக் கோரியது.

– அம்ருதா பார்த்தசாரதி

ஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம்
ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அதிஷ்டானம்
திருவேற்காடு சென்னை - 600 077.



உலக க்ஷேமத்திற்கு 21-ஆம் ஆண்டு ஸ்ரீசத சண்டி மஹாயாகம் ஆரம்பம் 1.6.93, 4.6.93 விசாக பௌர்ணமி அனுஷ நக்ஷத்திரத்தில் மதியம் மஹா பூர்ணாஹுதி - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மஹாஸ்வாமிகளின் நூற்றாண்டு ஜெயந்தியும், கலைமாமணி Bombay Sisters ஸ்ரீமதி C. சரோஜா, ஸ்ரீமதி C. லலிதா அவர்கள் பாடிய ஸ்ரீயோகாம்பிகை ஸுப்ரபாதம், ஸ்ரீயோகாம்பிகை மாலை பூஜா அரங்கேற்ற ஆண்டு விழா, தலைமை தாங்குபவர் ஸாஹித்ய கர்த்தா, ஸாஹித்ய பூஷணம், சங்கீத கலாநிதி மணி, சர்வஜ்ஞோபகாரி சிதம்பரம் Dr. V.V. ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர் D.Litt. புதுக்கோட்டை புவனேஸ்வரி பீடம், ஆஸ்தான வித்வான் கவிதா ரத்னம், மந்த்ர, ஸாஸ்த்ர பாஸ்கர ஸாக்த ஸ்ரீ Dr. K. வைத்ய நாத ஸாஸ்திரி ஸர்வஸாதகம்.

3.6.93 மாலை புதுக்கோட்டை புவனேஸ்வரி பீடம் ஸ்ரீமத் சாந்தானந்தா ஸ்வாமிகள் ஸ்தாபிக்க பெற்ற ஸ்ரீசக்ர பூர்ண மகாமேருவிற்கு விசேஷ நவாவர்ண பூஜை. ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடம் மகா சந்நிதானம் அளித்த ஸ்ரீ சக்ர மாலையை அம்பாளுக்கு அணிவித்து மஹா தீபாராதனை நடைபெறும்.

ஒரு ஸங்கல்ப ஹோமத்திற்கு ரூ 200/- அனுப்புகிறவர்களுக்கு யாக சாலை பிரஸாதத்துடன், ஸ்ரீ வித்யா பூஜாக்ரமம் மலர் மேற்படி கேலண்டரும் தனித் தபாலில் அனுப்பப்படும்.



நன்கொடை மற்றும் ஸங்கல்பத்திற்கு ஹோம கமிட்டி ஸ்ரீயோகாம்பிகை அதிஷ்டானம், திருவேற்காடு, சென்னை - 77. என்ற முகவரிக்கு அனுப்பவும்.

குழுத் தலைவர் தவத்திரு அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள், உபதலைவர் அம்பிகை அடிமை ஸ்ரீ. N. சங்கரன், ஸ்தாபகர், அதிஷ்டானம், திருவேற்காடு. காரியதரிசி, ஸ்ரீ M.V. ஸ்வாமிநாதன், B.Com.

“பேச்சு, மூச்சு, கனவு, கற்பனை எல்லாமே டென்னிஸ்!”

டென்னிஸ் ரசிகர்கள், சமீபத்தில் சென்னையில் நடந்த ரமேஷ் vs ரமேஷ் போட்டியை மறந்திருக்க மாட்டார்கள். 'ரமேஷ் கிருஷ்ணனுடன் இறுதிச் சுற்றில் ஆடும் இந்த ரமேஷ் யார்?' என்று பலர் யோசித்தும் இருப்பார்கள். அதே போல் பெண்கள் இறுதிப் போட்டியில் வென்ற நிருபமாவும் வியப்புக் கலந்த கவனத்தைக் கவர்ந்திருக்கிறார்.

கிளாசிகல் டென்னிஸ் போட்டியில் (மிக அதிகச் செலவில் இந்தியாவிலேயே முதன் முதலாக நடத்தப்பட்ட போட்டி இது) ஆடிய இவ்விருவருமே கோவைவாசிகள்; உறவினர்களும் கூட! ரமேஷின் சித்தப்பா மகள் தான் நிருபமா. இருவருக்குமே குரு அவரவர் தகப்பனார் தான்!


இருவரையும் பேட்டி காணும் போது ஏதோ குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது போல் தான் தோன்றுகிறது.


''ரமேஷ்! நீங்க ஒரு இன்ஜினீயர் இல்லையா? கோவை ஜி.ஐ.டி. தானே?''

''ஆமாம், பி.ஈ. மெகானிகல். தென் இந்திய ரயில்வேயில் - போத்தனூரில் வேலை.''

''இன்று தேசிய மட்டத்தில் நாலாவது நிலையில் இருக்கீங்க. எப்ப இந்த ஆட்டத்தில் ஆர்வம் ஏற்பட்டது?''

''பத்தாவது வயசிலேயே ஏற்பட்டுப்





போச்சு. அப்போ ராம்நாஸ்தான் குரு. அப்புறம் அப்பா. ஒரு வேடிக்கை என்னன்னா அப்பா கணபதியை அந்த நாளில் கிரிக்கெட் வீரர் என்ற முறையிலேதான் பலருக்கும் தெரியும். அப்புறம்தான் டென்னிஸ்ஸில் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டு, அது எப்படியோ எங்கிட்டயும் தொத்திக்கிட்டது. இளமையில் அப்பாவுக்கு இல்லாத ஒரு பெரிய வசதி எனக்கு இருக்கு. எதிர்த்தரப்பில் ஆட எனக்கு வீட்டிலேயே ஒருத்தர் கிடைச்சிருக்கார்! அப்பாவைத்தான் சொல்றேன். பார்ட்னராக ஆடிப் பழக என் தம்பி இருக்கான்.''

''நிருபமா! உங்க கேஸ் எப்படி? லெவன்த் படிக்கிறீங்க இல்ல...?''

''ஆமா, பெர்க்ஸ் ஹையர் செகண்டரி ஸ்கூல்லதான். எனக்கும் அப்பாதான் கோச். அவரும் கிரிக்கெட் வீரராயிருந்து டென்னிஸுக்குத் தாவியவர்தான்! எனக்கு எதிரா ஆடி டென்னிஸ்ஸின் நுணுக்கங்களையெல்லாம் கற்றுத் தருகிறார். என் அண்ணா கணேஷும் பிரமாதமா டென்னிஸ் ஆடுவார்!''

''மிஸ்டர் வைத்தியநாதன், மகளுடைய முன்னேற்றத்துல வேற எந்த விதத்துல இன்ட்ரஸ்ட் எடுத்துக்கறீங்க?''

''டென்னிஸ் சம்பந்தப்பட்ட வீடியோ கேஸட்டுகளைத் தேடிக் கண்டுபிடிச்சு வாங்கி வந்து போட்டுக் காட்டறதோட, விளக்கிச் சொல்லுவேன். வீடியோ இன்னிக்கு விளையாட்டு வீரர்களுக்கு வரப்பிரசாதம். ஒரே ஷாட்டை திரும்பத் திரும்பப் போட்டுப் பார்த்து ஸ்டடி பண்ணலாம். ஸ்லோமோஷன்லயும் ஆராயலாம்.''

''நிருபமா! நீங்க பார்ஸிலோனா போய் இந்தியாவுக்குப் பதினைந்தாவது இடத்தைப் பிடிச்சுக் கொடுத்தீங்க இல்லையா?''

''ஆமா, பதினாறு வயதுக்கு உட்பட்டவர்களின் ஆட்டம்.''

''சரி, இப்படி அடிக்கடி டென்னிஸ் ஆடப் போயிட்டா படிப்பு என்ன ஆறது?''

''பரீட்சைக்கு ரெண்டு மாசம் முன்னாடி உட்கார்ந்து பிராணனை விட்டுப் படிப்பேன். எப்படியோ ஃபஸ்ட் கிளாஸில் பாஸ் பண்ணிடுவேன்.''

''பரீட்சைக்கு முன்னால் அவளுக்கு டியூஷன் வைச்சுடுவேன்'' என்கிறார் வைத்தியநாதன்.

''ஒரு நாளைக்கு நாலு மணி நேரம் டென்னிஸ் பயிற்சின்ற போது படிக்க ஏது நேரம்? பாட்டு வாத்தியார் கூட ஏற்பாடு செய்தேன். இவளுக்கும் ரொம்ப ஆசைதான். ஆனா களைச்சுப் போய் வரவளைப் பாடச் சொல்ல வாத்தியாருக்கே மனசு வராது! நடக்காத காரியம்னு விட்டுட்டோம்.''

ஒரு தந்தைக்குரிய பெருமிதம், கோச்சின் உற்சாகம் - இரண்டும் முகத்தில் பளிச்.

கணபதி, வைத்தியநாதன் இருவருக்கும் நமது பாராட்டைத் தெரிவிக்கும் போது ரமேஷ் இடைபுகுந்து சொல்கிறார் :

''ஆரம்ப நாட்களில் நான் சிறுவனாக இருந்த போது அப்பா ஆபீஸுக்குப் போய் விட, அம்மாதான் என்னை ஒவ்வொரு மேட்சுக்கும் அழைத்துப் போய், ஆடி முடியும் வரை காத்திருந்து அழைத்து வருவா. இடையிடையே ஹார்லிக்ஸ் கொடுத்துத் தெம்பூட்டி...''

''ஸோ... தி ஸீக்ரட் ஆஃப் யுவர் எனர்ஜி ஹார்லிக்ஸா?''

''அதோட அம்மாவின் அன்பு. அதே போல இன்று என் ஒய்ப் விஜயலக்ஷ்மி...'' என்று கூறும் ரமேஷ், தாய்மைப் பொலிவுடன் அருகில் அமர்ந்திருக்கும் இளம் மனைவியைப் பார்க்கிறார். சென்ற வருஷம் ஆகஸ்ட்டில் இவர்கள் திருமணம் நடந்தது.

''ரமேஷின் பேச்சு, மூச்சு, கனவு, கற்பனை எல்லாமே டென்னிஸ், டென்னிஸ், டென்னிஸ்தான்'' என்கிறார் திருமதி ரமேஷ் பெருமிதத்துடன்.

''நீங்கள் சந்தித்த எதிர்பாராத சம்பவம் ஏதாவது?'' - ரமேஷிடம் கேட்கிறோம்.

''யெஸ்... எத்தனையோ வெளிநாடுகளுக்கெல்லாம் கூடப் போய் வந்துட்

டேன். ஆனா, மறக்க முடியாத சம்பவம்னா சேலத்துக்கு அருகே நடந்ததுதான். அங்கே தானே ஹௌரா - கொச்சின் மெயில் தடம் புரண்டது?''

''அடக் கடவுளே! நீங்க அதிலே இருந்தீங்களா?''

''கல்கத்தா டோர்னமெண்ட் முடிஞ்சு கோவை திரும்பிக்கிட்டிருந்தோம். திடீர்னு தூக்கி எறியப்பட்டோம். ரயில் தலைகீழ். ஒரே இருட்டு. நல்ல காலம், எங்க கோச்சலை யாருக்கும் பலமான அடிபடலை. அதிர்ச்சி தான். மீட்புப் பணிக்கு நாலைந்து மணி நேர மாச்சு. அதுவரை வௌவால் மாதிரி தொங்கிக்கிட்டிருந்தோம்...''

''எதிர்காலம்...?''

''நிருபமா இன்னும் பல படிகள் ஏற வேண்டியிருக்கு. ஆனா அரசுப் போற தில்லே. இன்னும் ஏழெட்டு வருஷங்களுக்கு இவளை முழு மூச்சா டென்னிஸில் ஈடுபடுத்துவது என் லட்சியம்.''


''அப்பா! ஆசையோடு சொல்றீங்க. ஆனா செலவு? இன்னும் எத்தனை நாளைக்கு சொந்தச் செலவிலேயே பல இடங்களுக்குப் போய் வர முடியும்?'' என்கிறார் நிருபமா, தந்தையிடம் பரிவோடு. ''ரமேஷை எடுத்துக்குங்க; ரயில்வே அணிக்காக அவர் போட்டியிடும் போது செலவுகளை ரயில்வே ஏற்றுக் கொள்ளுகிறது.''

''நிருபமா போன்ற இளம் ஆட்டக்காரர்களுக்கு ஸ்பான்ஸர்கள் செலவு ஏற்க முன்வந்தால் நன்றாயிருக்கும்'' என்கிறார் வைத்தியநாதன். ''நானும் இவளுடைய பிரைஸ் பணத்தையெல்லாம் இவள் பேரிலேயே போட்டு, இவளுக்காகவேதான் செலவு பண்றேன். ஆனாலும் அது போறலை.''

''நீங்க என்ன சொல்றீங்க, ரமேஷ்?''

''நிருபமாவின் ஆதங்கம் எனக்குப் புரியுது'' என்கிறார் ரமேஷ். ''பிரைஸ் தொகையிலே கூட ஆண்களுக்குத் தருவதிலே பாதிப் பணம்தான் பெண்களுக்குத் தராங்க. இது சரியில்லே. சிரமமும் செலவும் எல்லாருக்கும் ஒண்ணுதான். உத்யோகத்தில் இல்லாத, மாணவப் பருவ விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் அரசாங்க உதவியை மட்டுமே எதிர் பார்த்துக் கொண்டிருக்காமல், நல்லா முன்னுக்கு வரக்கூடியவங்களைத் தேர்ந்தெடுத்து தனியார் துறையிலும் ஸ்பான்ஸர்ஷிப் தந்து ஊக்கப்படுத்தலாமே!''

சந்திப்பு, கட்டுரை : விமலா ரமணி
படங்கள் : சாரி



ஐசிஎஸ்

பெனிபிட் பண்ட் லிமிடெட்

221, சத்தியமூர்த்தி சாலை, இராம்நகர்,
கோயமுத்தூர் - 641 009. ☎ 37463



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

50 ஆண்டுகளுக்கு
மேலான
அரிய சேவை

டெபாசிட் திட்டங்கள்

திட்டம்	குறுகிய கால டெபாசிட்			பிக்சட் டெபாசிட் திட்டம்			
காலம்	1 நாள் முதல் 3 மாதங்கள்	3 மாதங்கள் முதல் 6 மாதங்கள்	6 மாதங்கள் முதல் 12 மாதங்கள்	25 மாதங்களுக்கு	36 மாதங்களுக்கு	48 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு
வட்டி விகிதம் ஆண்டுக்கு	15%	16%	17%	18.5%	19%	19.5%	20%
வாடிக்கையாளர் வசதிக்கேற்ப 1 மாதம், 3 மாதம் மற்றும் 6 மாத கால இடைவெளிகளிலும் வட்டி விகிதம் வழங்கப்படும்.		வழங்கும் வட்டி விகிதங்கள்	ஆண்டுக்கு ஒருமுறை	18.5%	19%	19.5%	20%
			6 மாதத்திற்கு ஒருமுறை	17.5%	18%	18.5%	19%
			3 மாதம் அல்லது மாதத்திற்கு ஒருமுறை	16.5%	17%	17.5%	18%

குமுலேடிவ் டெபாசிட் திட்டம்

- 45 மாதங்களில் இரு மடங்கு
- 68 மாதங்களில் மூன்று மடங்கு
- 90 மாதங்களில் நான்கு மடங்கு

டெபாசிட் தொகை ரூ.	முதிர்வு அடையும்போது பெறும் தொகை		
	45 மாதங்கள்	68 மாதங்கள்	90 மாதங்கள்
1000	2000	3000	4000
5000	10000	15000	20000
7500	15000	22500	30000
10000	20000	30000	40000

கமிட்சம் வைப்புத் திட்டம்


ரூ. 10,000/- = ரூ. 21,000/- (45 மாதங்களில்)

இத்திட்டத்தில் ரூ.10,000/- செலுத்தி 45 மாதங்களில் ரூ.21,000/- பெறுவீர்!
உங்களுக்கு கிடைப்பதோ இரட்டிப்பு ஆதாயத்துடன் ஓர் ஆயிரம்!
இத்திட்டத்தில் ரூ.10,000/-ம் அதன் மடங்கில் பணம் செலுத்துவோர் மட்டுமே பங்கு பெற முடியும்.

ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத தவணைத் தொகை ரூ.	காலக்கெடுவில் பெறவுள்ள முதிர்வுத் தொகை				
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
100	1320	2880	4720	6480	10040
250	3300	7200	11800	16200	25100
500	6600	14400	23600	32400	50200

ரூ.5 செலுத்தி உறுப்பினராகி பயன் பெறுவீர்! செழுமை தரும் சேமிப்புத் திட்டங்கள்!
ஐஸ்வர்யத்தின் அட்சயபாத்திரம் ஐசிஎஸ்!



ஆசிரியர் பயிற்சி கல்லூரி-களுக்கு அனுமதியில் அதிகார துஷ்பிரயோகம் - உயர்நீதி மன்றக் கண்டனம்.
மழையா இது? மேளம் கொட்டி மன்னர் தெளிக்கிறா-ராங்க...
அ.தி.மு.க. அரசு
என்னங்க, உங்களுக்கு சௌக்யமா போய்ச் சேர்ந்தீங்களா?
சௌக்யம் ஒரு கேடா? இதுக்குள்ளே 525 ரூபா, 35 பைசாக்கு — பேசிட்டே... வைச்சுத் தொலை, வயிறு எரியுது!...
பா.ம.க. வோட கூட்டணியைப் பிரதமர் வரவேற்கிறார்...
வாழப்பாடி
வரவேற்கலே, நல்லதுன்னுதான் சொன்னார்...
யோசிக்கிறார்... கூட்டணி வேணுமா, வேண்டாமான்னு...
என்னை அவர் குழப்பிட்டாரா, நான் அவரைக் குழப்பிட்டேனா, ஒரே குழப்பமா இருக்கு...



கல்கி



1993
மே 9
மலர் : 51
இதழ் : 41
ஸ்ரீமுக
சித்திரை 26

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

விமான விபத்தும் தேசிய ஆபத்தும்!

விமானம் கடத்திச் செல்வதில் அடுத்தடுத்து இரண்டு முயற்சிகள் நடந்து, இரண்டும் தோல்வியுற்றன. நாடகத் திரை விழுந்து விட்டாலும் நடந்ததை அசைபோட வேண்டிய கடமை நமக்கு உண்டு. அதுபோலவே சமீபத்திய விமான விபத்தையும் ஆழ்ந்து நோக்க வேண்டும்.

முதல் கடத்தல் முயற்சியில் ஹேர் டிரையரை துப்பாக்கியாக எண்ணச் செய்து, விமானம் கடத்தியவனின் சாகசம் நம்மை வியக்கத்தான் வைக்கிறது; பயணிகளின் பதற்றம், 'ஐயோ பாவம்' என்ற அனுதாபத்தைப் பெறுகிறது. இரண்டாவது நிஜ நாடகத்தில் கடத்தல் முயற்சியை முறியடித்து, பயங்கர வாதியைப் பலிவாங்கிய அதிரடிப் படை நம் பாராட்டைப் பெறுகிறது; கில்லின் 'தில்'லைப் போற்றுகிறோம். தப்பிய பயணிகளின் 'திக்திக்' அனுபவத்தை நாமும் பகிர்ந்து கொண்டு, 'ஏதோ இந்த மட்டோடு போயிற்றே' என்று ஆறுதல் சொல்கிறோம்.

இது போதாது; நிகழ்ச்சிகளை இன்னும் பலமாக அலச வேண்டும். விமானம் கடத்திய பயங்கரவாதி, ஹேர் டிரையரை துப்பாக்கி என்று நம்பச் செய்வது எவ்வாறு சாத்தியமாயிற்று? மற்றொரு பயங்கரவாதி, காயமடைந்து பாண்டேஜ் கட்டியிருப்பதாக நடித்து, அந்த பாண்டேஜுக்குள் துப்பாக்கியை ஒளித்துக் கொண்டு விமானம் ஏறுவது எவ்வாறு அனுமதிக்கப்பட்டது? ஏர்போர்ட் செக்யூரிட்டி என்ன ஆயிற்று? பாகேஜ் எக்ஸ்ரே, மெடல் டிடெக்டர் மூலம் பயணிகள் சோதனை என்றெல்லாம் இருந்தும் என்ன பயன்? யோசித்தால் கிடைக்கும் விடை அதிர்ச்சி அளிப்பதாக இருக்கும்.

நம்மிடம் எல்லாம் இருக்கிறது; ஆனால் செய்நேர்த்தியில்லை. திறம்படச் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இதனை உருவாக்க வேண்டிய மனச்சாட்சி இல்லை. விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளும் ஊழியர்களும் உளவுத் துறையும் திறம்பட இயங்கியிருந்தால் விமானக் கடத்தல் நிச்சயம் தவிர்க்கப்பட்டிருக்கும். கவனமாகச் செயல் படாததற்குக் காரணம், ஏனோ தானோ மனப்பான்மை, அசிரத்தை, ஒருவேளை லஞ்ச ஊழலும் கூட.

அடுத்தாற்போல் நடந்த விமான விபத்தில் சதித் திட்டம் இல்லை, பயங்கரவாதம் இல்லை என்பது பெரும் ஆறுதல். ஆனால் விபத்து ஏன் நடந்தது? கமிஷன் விசாரணை நடக்கும். நஷ்டஈடு கணிசமாகத் தரப்படும். விசாரணையின் முடிவில் அறிக்கை உருவாகும்; புழுதி படிந்து உறங்கும். ஒரு விமான விபத்தில் பலியாகிறவர்களின் உயிர் ஒரு ரயில் அல்லது பஸ் விபத்தில் மரணமடைகிறவனுடைய உயிரை விட உயர்ந்ததல்ல. சோகம் என்பது உறவினர் அனைவருக்கும் ஒரே மாதிரியானதுதான். ஆனால் ஒன்று. விமான விபத்தில் மரிப்பவர்களில் பெரும்பாலோர் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவக்கூடிய முக்கியஸ்தர்கள். அதனால் பேரிழப்பு சில குடும்பங்களுக்கு மட்டுமின்றி, நாட்டுக்கும்தான்.

விமானம் விழுந்து நொறுங்கியதற்கு ஓவர்லோடு காரணம் என்பது ஓர் அனுமானம். விமானம் பழசாகிப் போனது, விரைந்து மேலேறும் திறன் அதற்கு இருக்கவில்லை என்பது மற்றொன்று. 'விமான ரன்வே அருகே சாலை, அதில் லாரி, அதில் உயரமாக பஞ்சுப் பொதி, விமானம் அதில் மோதி...' என்று விளக்கங்கள். இருக்கட்டும். விமானத்தைச் சரியாகப் பராமரிக்காதது யார் குற்றம்? அல்லது, பழுதுபார்த்துப் பராமரிக்க முடியாத அளவுக்குப் பழசாகிப் போன விமானம் ஏன் சர்வீஸில் இருந்தது? ஓவர்லோடு ஏற்றப்பட்டது எனில் அதற்கு யார் பொறுப்பு? விமான ரன்வேக்கு மிக அருகே ஏன் சாலைப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது?

இதற்கு முன்பு ஒருமுறை ஒரு பைலட் பம்பாய்க்குப் பதில், டில்லி நோக்கிப் பயணப்பட விமான நிலைய கண்ட்ரோல் அதிகாரிகளால் திருத்தப்பட்டிருக்கிறார். இன்னொரு சமயம் போதையில் வந்த பைலட் அதற்குரிய சோதனையை ஏற்க மறுத்து விடு திரும்பியிருக்கிறார். இவையும் சமீபத்திய நிகழ்ச்சிகளே.

ஆக, நமது அடிப்படைக் கோளாறு, பணத்தாசை பிடித்து மனச்சாட்சியை விற்று விட்டோம். செய்வன திருந்தச் செய் என்ற மூதுரையை மறந்தே விட்டோம். வெகு வேகமாகப் பரவி வரும் இந்த தேசிய நோயைத் தடுத்து நிறுத்த ஒரு சீரிய தலைமை தேவை.



தெருநாய் வெறி நாய் ஆகும் போது...

குழந்தைகளை அழைத்துக் கொண்டு உயிரியல் பூங்காவுக்குப் போனார் கார்த்திக். சிறுமி ஆனந்திக்குக் குரங்குகளைப் பார்த்ததும் ஒரே குஷி. கூண்டினருகில் சென்று கொஞ்சம் சேஷ்டை பண்ண, குரங்குக்குக் கோபம் வந்து இவள் கையைப் பிடித்துக் கடித்து விட்டது. ரத்தக் காயம்!

''உடனே டாக்டரிடம் போய் ரேபிஸ் ஊசி போடுங்க'' என்றார் அருகிலிருந்த ஒருவர். ''நாய்க் கடிக்குத்தான் ஊசி போடுவாங்க; குரங்குக்கு என்ன? சும்மா ஆன்டிஸெப்டிக் மருந்து தடவி, கட்டுப் போடுங்க ஸார், போதும்'' என்றார் இன்னொருவர்.

கார்த்திக்குக் குழப்பமாகி விட்டது. ரிஸ்க் எடுக்க வேண்டாம் என்று குடும்ப டாக்டரிடம் ஓடினார். சிறுமி ஆனந்திக்குச் சிகிச்சை அளித்தபடியே டாக்டர் பல விஷயங்களை விளக்கினார் :

பூனை, குரங்கு, குதிரை, வௌவால் என்று எது கடித்தாலும் அவற்றுக்கு ரேபிஸ் இருந்தால் கடிபட்டவருக்கும் வர வாய்ப்பு உண்டு. பாதுகாப்பு ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். ஏனென்றால் கடித்த மிருகத்திடம் ரேபிஸ் கிருமிகள் இல்லை என்று நம்மால் உறுதியாகக் கூற முடியாது. முக்கியமாக எச்சில் மூலம் தான் இந்த நோய் பரவி, உற்பத்தியாகிறது. ரேபிஸ் வந்து விட்டால் மரணம் தான் முடிவு.

நாய்க்கடியோ அல்லது வேறு எந்த மிருகங்களின் கடியோ, எதுவானாலும் முதலில் செய்ய வேண்டியது, கடிபட்ட இடத்தை நிறையத் தண்ணீர் விட்டு சோப்புப் போட்டுச் சுத்தம் பண்ணுவதுதான். அப்புறம் ஆன்டிஸெப்டிக் தடவலாம். கட்டுப் போடவே கூடாது. ம ரு த் து வ ர் இதற்குத் தையலும் போடக் கூடாது. ரேபிஸ் எதிர்ப்பு ஊசிகள்தான் ஆறு போட வேண்டும். (முன் காலம் மாதிரி வயிற்றைச் சுற்றி 14 ஊசிகள் தேவையில்லை.)

சிகிச்சை முடிந்து சிறுமி ஆனந்தியைத் தட்டிக் கொடுத்து விட்டு டாக்டர் சொன்னார் : ''தைரியமா இருந்தியே, பேஷ்! ஆனா, இந்தத் தைரியத்தை டாக்டர் மாமாகிட்டத்தான் காட்டணும்; மிருகங்களிடம் அசட்டுத் தைரியத்துடன் விளையாடக் கூடாது, புரிஞ்சுதா!''

பில் கொடுத்தார் டாக்டர். பெற்றுக் கொண்ட கார்த்திக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆபீஸில் தந்து விடுவார்கள்; என்றாலும் ரொம்ப ஜாஸ்தி இல்லையோ?

அவர் பிரமிப்பைப் பார்த்து விட்டு டாக்டர் சொன்னார் : ''என்ன யோசிக்கிறீங்க...? ரேபிஸ் மருந்து பிரான்ஸ் நாட்டிலேர்ந்து இறக்குமதியாகிறது. விலை அதிகம். வரிகள் எக்கச்சக்கம். இங்கே தெரு நாய்களோ ஏராளம்! இந்த நிலையை யோசித்துப் பார்த்து மந்திரிங்கதான் சரியான முடிவெடுக்கணும்.''

மருத்துவத் தகவல்கள் :
டாக்டர் வ. நம்பி
கட்டுரை வடிவம் : எஸ்.வி.என்.

மாயக்குதிரை



12

மேஜர் சுதாகர் தம்பிடமிருந்த மிகக் கொஞ்சமான ஷுகர் கம்ப்ளைண்ட்டிற்காக ஸ்புட்னிக் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்து கொண்டார். ஓமனா என்கிற மலையாள நர்ஸ் கொஞ்சம் நட்பாகப் பழகுவதைக் கவனித்துக் கொஞ்சம் கொஞ்சமாக விவரங்களை அவளிடமிருந்து சேகரித்தார். அவருக்குப் பணிவிடை செய்யும் சாக்கில் வந்த ரங்கா, ஆஸ்பத்திரி முழுவதும் சுற்றினான். கிரே அண்டர்கிரவுண்ட் ஃப்ளோரில் இருந்த மெடிகல் ஸ்டோரில் கனகசபை என்கிறவனை தோஸ்த் பிடித்துக் கொண்டு சூர்யாவுக்கு அளிக்கப்பட்ட மருந்து விவரங்களைச் சேகரித்தான். ஸோடியம் பெனோஃபார்பிடோன், க்ளோர்ப்ரோமெஸின், ஸ்கோபோலமைன் ஹைட்ரோப்ரோமைட், பிலோகார்பைன், ஐயோடால்பின், ஃபெனால்...

சுதாகர் அவன் தந்த விவரங்களைப் பார்த்து மகிழ்ச்சியாக ''சபாஷ்'' என்றார்.

''இதை வைச்சுக்கிட்டு என்ன செய்யறது?'' என்றான் ரங்கா.

''அப்ப ரேபீஸ் பொய் இல்லை.''

''சரிதான். சீதைக்கு ராமன் சித்தப்பா.''

''ரங்கா. ரசிகர்களைத் திருப்தி படுத்தணுமே? ஒண்ணு செய், பில்லு சூர்யா பேர்லதானே இருக்கும்? அதை எடுத்துக்கிட்டு வா!''

''பல்லைப் பேத்துருவாங்க. இது கிடைச்சதே காவிரித் தண்ணி மாதிரி.''

''இந்த மருந்தெல்லாம் ரேபீஸுக்குத் தானே?''

''அதே!''

''இது சூர்யாவுக்குக் கொடுத்த மருந்து தான்னு எப்படி நிரூபிக்கிறது? ஒரு நிரூபணம் வேணுமே?''

''எவிடென்ஸ் பத்தி கென்னி சொல்றது இதான். ''தி மென்டல் டிஸ்டன்ஸ் பிட்வீன் 'மே பி' அண்ட் 'மஸ்ட் பி' இஸ் லாங் அண்ட் டிவைட்ஸ் வேக் கஞ்சக்சர் ஃப்ரம் ஷ்யூர் கன்க்ளூஷன்ஸ்'' அதாவது நிச்சயமில்லாத மற்றும் நிச்சயமான...

''ரங்கா, வேண்டாம். எனக்கு 'பிபி' ஏறுது.''

''சில விஷயங்களை நிரூபிக்கலைன்னா பரவாயில்லை சுதா. மூளை எதுக்கு இருக்கு?''

''சரி, என்ன பண்ணலாம்கற?''

''மன்ற ஆட்களைக் கூப்பிட்டு, ''இதோ பாருங்க தம்பிகளா! உங்கள் அருமை சூர்யா இறந்தது ராபிஸ்னாலதான். இதோ இந்த மருந்தையெல்லாம்தான் அவருக்குக் கொடுத்தாங்க. அதுல எந்த விதமான சந்தேகமும் வேண்டாம். போய்ட்டு வாங்க'ன்னு சொல்லி அனுப்பிச்சிருங்க...''

''நாய் கடிச்சதைப் பத்தி நாம எதுவுமே சொல்லலை...?''

''சொல்ல முடியாது. ரொம்ப ரிமோட்.''

''அவ்வளவுதானா?''

''இதுதான் நம்ப லிமிட்.''

''சரி. கடைசியா ஒண்ணு செய். ஒரு டாக்டர்கிட்டே இந்த மெடிஸன் லிஸ்டைக் காட்டி ஒவ்வொரு மருந்தும் எதுக்குன்னு விலாவரியாக் கேட்டுட்டு வா!''

கிருஷ்ணா டாவின்சி



''சரி. கலவரம்'' என்றான் ரங்கா.

பிளாக்கி குதிரையின் எஜமானன் துரையின் புகைப்படம் அவன் வேலை செய்த கிண்டி ரேஸ் கோர்ஸில் கண்டெடுக்கப்பட்டு, அதன் பிரதி உடனே விவரங்களுடன் அதிராம்பட்டின போலீஸ் சரகத்திற்கு அனுப்பப்பட்டது. மறுநாள் காலை பத்து மணிக்குக் கடைவீதியில் ஓரங்கி வாங்கிக் கொண்டிருந்த துரை இரண்டு கான்ஸ்டபிள்களால் அமுக்கப்பட்டான்.

''டேய், நீதானடா துரை?''

''ஆமாங்க. துரை வேலு.''

''குதிரைக்காரன்தானே நீ?''

''இல்லீங்க. கர்ச்சீஃப் ஹேரால் வேலு...''

''சட். மெட்ராஸ்லதானேடா இருந்த?''

''ஆமாங்க.''

''என்ன வேலைடா செஞ்ச?''

''அ...து...வந்துங்க... குதிரை டிரெய்னருங்க.''

''அதானே பார்த்தேன்...''

''ஐயா, கழுத்து வலிக்குதுங்க...''

''ஸ்டேசனுக்கு வாடா!''

''ஐயோ! எதுக்குங்க?''

''சும்மாதான். வேலை முடிச்சுட்டுக் கமுக்கமா இங்கே வந்துட்டீங்களாக்கும்?''

''ஐயா, எஜமான், என்ன சொல்றீங்க?''

''டேய், அழுவாதடா! வாடா!''

எஸ். பி. சண்முகம் அவனைச் சந்திக்கும் வரை லாக்கப்பில் அழுதபடி அமர்ந்திருந்தான் துரை. கதவு திறக்கப்பட்டு, ''டேய், வாடா! ஐயாகிட்டே போ!''

''ஐயா! எஜமானே!'' துரை தலைமேல் கும்பிட்டபடி பக்தன் போல் ஓடி வந்து, சண்முகத்தின் பளபளப்பான பூட்ஸ் காலடியில் விழுந்தான்.

''ஏய், எழுந்திரு!''

சண்முகம் கண்களில் உக்கிரத்துடன் கையில் லத்தியை உருட்டியபடி அவனைப் பார்த்தார். துரைக்குச் சகலமும் நடுங்கியது.

''டேய், சூர்யாவுக்கு நீதானேடா ஹார்ஸ் ரைடிங் டிரெய்னர்?'' என்றார்.

''ஆ...மா...ங்...க...'' என்றான் பயத்துடன்.

''அவரு செத்துப் போய்ட்டாரு தெரியுமா?''

''தெரியுங்க... ஐயய்யோ!.. தங்கமான தலைவருங்க...''

''அழுகையை நிறுத்துடா. அந்தக் குதிரை செத்துப் போச்சில்லை?''

''ஆமாங்க. திடீர்னு செத்துப் போச்சுங்க...''

''அது எப்படிடா திடீர்னு செத்துப் போகும்? என்ன ஆச்சு அதுக்கு?''

''நாய் கடிச்சிருச்சு போல எஜமான். ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டு ஓடினேன். ஊசி



நடிகை : நான் எப்பவும் என் கணவரோட அனுமதி இல்லாம எதையும் செய்ய மாட்டேன்!

நிருபர் : அப்படியா?

நடிகை : ஆமாம். இப்பக் கூட அவரை விவாகரத்து செய்ய அவரோட அனு மதிக்காகத்தான் காத்துக் கிட்டு இருக்கேன்.

- என். உஷாதேவி



போட்டாங்க. ஆனா செத்துப் போயிடுச் சுங்க..."

"நாய் கடிச்சது உனக்குத் தெரியுமா?"

"ஐயா, தெரியாதுய்யா!"

"பின்ன எப்படிடா அதுக்கு நோய் வந்தது?"

"தெரீங்க..."

"டிரெய்னிங் முடிஞ்சு தினமும் குதிரையை என்னடா செய்வ?"

"வீட்டுக்குக் கூட்டிப் போயிருவேங்க. பின்னால சின்னதா லாயம் வைச்சிருந்தேன். அதுல கட்டிப் போட்டுடுவேன்..."

சண்முகம் அவனை ஆத்திரமாக எட்டி உதைத்தார். அவன் தடுமாறி விழுந்து அலறி னான்.

"ராஸ்கல்! உன் குதிரைகிட்டேயிருந்து தான் சூர்யாவுக்கு நோய் பரவிச்சு தெரி யுமா?"

"ஐயய்யோ...! யஜமான்..!"

அவனை சட்டைக்காலர் பிடித்து நிமிர்த் தினார். வலிமையான கையினால் கன்னத் தில் மூர்க்கமாக அறைந்தார். அவன் முகம் நடுங்கியது. வாயிலிருந்து ரத்தம் கசிந்தது. மறுபடி, மறுபடி, அறைந்தார்.

"டேய், உனக்கு ஏதுடா பணம்?"

"பணமா...? ஐயோ!..."

"லாட்டரி அடிச்சதா உனக்கு? பொய் சொல்லாதே! போலீஸ்கிட்டே பொய் சொல்லாதே! டங்குவாரை அறுத்திடு வோம். சொல்லு! சொல்லுடா... எங்கே யிருந்து கிடைச்சது பணம்?"

"எஜமான்! சத்தியமா லாட்டரியில பணம் கிடைச்சது எஜமான்!"

"எவ்வளவுடா?"

"இருபதாயிரங்க. பூடான் லாட்டரி!"

"பொய் சொல்லாதே!"

"சத்தியமாங்க. ஏஜண்டுகிட்டே கேட்டுப் பாருங்க... உதயம் தியேட்ட ராண்ட இருக்குது கடை... யம்மா!.. இந்த அடி அடிக்கிறீங்களே?"

"மதன்ராஜைத் தெரியுமாடா உனக்கு?"

"நடிகரு? அவரா?"

"வேற யாருடா? முட்டாள்..."

"அவருக்கு ஒருமுறை குதிரை ஓட்ட சொல்லிக் கொடுத்தேங்க. அப்பப் பார்க் கங்க..."

"குதிரை சூர்யாவைக் கடிச்சதா?"

"இல்லீங்க. குதிரை கடிக்கறதில் லைங்க. நாய்தாங்க கடிக்கும். குதிரை கடிக் கிற..."

"வாயை மூடுறா. இன்ஸ்பெக்டர், இவன்கிட்டே ஒரு ஸ்டேட்மெண்ட் வாங் குங்க. எமகாதகன் இவன். கன்ல பொய் தெரியுது..."

"ஐயய்யோ! எஜமான்!"

"லாட்டரி அடிச்சிதுங்களோ!"

"சத்தியமாங்க! கடவுளே! சாமி!"

"ஸ்டேட்மெண்ட் வாங்கிட்டு... வேண் டாம்! நான் மேலிடத்துல பேசிடறேன்... டேய், குதிரைக்கு நோய் இருக்குதுன்னு தெரிஞ்சும் சூர்யா கூடப் பழக விட்டியா?"

"இல்லீங்க. இல்லீங்க... தெரியா துங்க!"

"இவனைக் கைது பண்ணிடலாம்."

"எஜமான்! வேண்டாம்! வேண்டாம்!"

"இவனை மெட்ராஸ் கூட்டி வர ஏற்பாடு செய்யுங்க. அந்த லாட்டரி கடை யில விசாரிக்கலாம். டேய், சூர்யா கூட இந்தக் குதிரையைப் பழகச் சொல்லிப் பணம் கொடுத்தது யாருடா?"

அவன் தலையில் அறைந்து கொண்டு, "கடவுள் சத்தியமா அப்படி எதுவும் நடக்க லீங்க. யம்மா! நான் என்னத்தைச் சொல்லு வேன்!"

"யாரு? மதன்ராஜா? சொல்லு!"

அவன் குத்துக்காலிட்டு அமர்ந்து அழ ஆரம்பிக்க, எட்டி உதைத்தார்.

"சொல்லுடா! யாரு பணம் கொடுத் தது?"

அவன் மயக்கமாகி விழும் வரை அடித் தார். பிறகு கர்சீஃபினால் முகத்தைத் துடைத் துக் கொண்டு கிளம்பினார்.

கூமிஷனர் முத்துக்குமரன் அவர் சொல் வதையெல்லாம் கவனமாகக் கேட்டு, தம் மீசையை மெல்லத் தடவி, "தெக்லி ஜென்ஸ்ல வருது. மே பி, இன்டென்ஷனல்! லாட்டரி விழுந்தது வேற உண்மைங்கறீங்க. சண்முகம்! உங்க 'இன்ஸ்டிங்ட்' என்ன சொல்லுது?" என்றார்.

"குழப்பமா இருக்கு ஸார்! தினமும் குதிரையை வீட்டுக்குப் பின்னால கட்டிப் போடுவானாம். அப்ப ஏதாவது நாய் அதைக் கடிச்சிருக்க நூறு சதவீத வாய்ப்புகள் இருக்கு..."

''பின்ன?''

சண்முகம் சில வினாடிகள் யோசித்து ''ஓப்பன் அண்ட் ஷட். அவ்வளவுதான் ஸார்! குதிரைக்கு நாய் கடிக்க ராபிஸ் வந்திருக்கு. சூர்யா அதன் மேல ஏறி பிராக்டிஸ் பண்ணும் போது அவரையும் தொத்திக்கிச்சு.''

''சூர்யாவை எப்ப நாய் கடிக்கதுங்கற கேள்வி போய், குதிரையை எப்ப நாய் கடிக்கதுன்னு புதுக் கேள்வி வந்தாச்சு'' என்றார் கமிஷனர்.

''ஏதாவது 'அரஸ்ட்' இருந்தாத்தான் ஸார் ஜனங்க அடங்குவாங்க. நோய்னு தெரிஞ்சே குதிரையைப் பழக விட்டது தப்புன்னு சொல்லி துரையைக் கைது பண்ணி பத்திரிகையில அறிவிச்சிடலாம்... தர் இஸ் சர்ட்டன்லி நோ ப்ளாட். முடிஞ்சுது.''

''ஒரே ஒரு கேள்வி''

''என்ன ஸார்?''

''குதிரைகிட்டேயிருந்து சூர்யாவுக்கு எப்படி ராபிஸ் வந்தது?'' என்றார் கமிஷனர்.

''ஐ ஹாவ் நோ ஆன்ஸர்!'' என்றார்.

அன்றிரவு சண்முகத்திற்குச் சாப்பிட்ட பின் மனம் அமைதியாக இல்லை. பொது மக்கள் திருப்திக்காக ஒரு அப்பாவியைத் தண்டிக்கிறோமோ என்று மன உளைச்சலாக உணர்ந்தார். அவனைப் போட்டுப் புரட்டி அடித்ததன் காரணம் எது? அவருடைய இயலாமையா? செயற்கையான காரணங்களை உருவாக்குவது என்ன ஒரு கோழைத்தனம்! ஏன்? உன் கையில் அதிகாரம் இருக்கிறது என்பதினாலா? கமிஷனர் கேட்ட ஒரே ஒரு கேள்வி! சூர்யாவிற்கு எப்படி ராபிஸ் தொற்றியது?

எஸ். பி. சண்முகம் படுக்கையில் படுத்தபடி ஏ. ஆர். டி. ஆடம்ஸின் 'டிராபிக்கல் டிஸிஸஸ்' என்கிற புத்தகத்தில் 'ஹைட் ரோஃபோபியா' என்கிற அத்தியாயத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். ஜியாக்ரஃபிகல் டிஸ்ட்ரிப்யூஷன், ஏட்டியாலஜி, ஸ்ட்ரெய்ன்ஸ் ஆஃப் வைரஸ் என்று வரிசையாகப் படித்தபடி வந்தவரின் பார்வைக்கு அந்த வரிகள் வந்தது.

''The virus as a rule is introduced into a wound or abrasion of the skin contaminated by the saliva of an animal...

(தொடரும்)

'நாகரிகம்'

தேவகாந்தன்

காதி கிராமோத்யோக் பவன் மண்டபத்தில் அந்த இலக்கிய விழா காலை ஒன்பது மணிக்கே ஆரம்பித்து விட்டிருந்தது. மனம் ஈடுபடும்படிக்கு முதல் அமர்வான கருத்தரங்க நிகழ்ச்சிகள் அமையவில்லை. அத்துடன் காலையில் எதுவும் சாப்பிடாத வயிறு வேறு கொதித்துக் கொண்டிருந்தது. காண்டீனுக்குப் போய் காப்பி குடித்து விட்டு வந்தாலென்ன என்று யோசித்தேன்.

ஆர்வத்தோடோ, ஆர்வமின்றியோ எல்லோரும் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கையில், நான் மட்டும் எழுந்து சென்று ஒரு சலனத்தை ஏற்படுத்துவதா என்று நினைக்க ஒருமாதிரியாக இருந்தது.

எனவே, தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் கூட்டிக் கொண்டு போகலாமே என எண்ணிச் சுற்றிவரப் பார்வையை வீசினேன்.

பார்வையின் சமாந்தரத்தில் மனிதர்களின் முகங்கள். அறிமுகம் அற்றவர்கள். தெரிந்த முகம் ஒன்றுகூடக் கண்ணில் தென்படவில்லை.

சற்று மேலே பார்வை படர்ந்த போது....

அநேகமாக எல்லாமே தெரிந்த முகங்கள். தேசத் தலைவர்கள், தியாகிகள், விடுதலை வீரர்கள்! காந்திஜி, நேரு, லஜபதிராய், கோகலே, திலகர், அம்பேத்கார், பகத்சிங், பாரதி, வ.உ.சி., ராஜாஜி, விஜயலட்சுமி பண்டிட், கஸ்தூரிபா, சாரதாதேவி, இன்னும் ஆனந்த குமாரசுவாமி,. தாகூர் படங்கள்.

அந்த முகங்கள் சூழ்ந்திருந்த நிலையில், ஒரு கூட்ட நிகழ்ச்சியின் இடையிலே எழுந்து செல்லும் பண்பீனத்தைச் செய்ய மனம் பிடிக்கவில்லை.

எனவே, காத்திருந்தேன்.

இந்தளவு மனநொய்மை காரணமாய்ப் பல கஷ்ட நஷ்டங்களைப் பலமுறை அடைந்திருக்கிறேன். ஆனால், இவற்றால் மனநாகரிகத்தோடு இருக்க வேண்டுமென்ற என் விருப்பம் என்றும் மாறியதில்லை.

மேலும் ஒரு பதினைந்து நிமிட நேரத்தில் அந்தப் பேச்சாளர் தம் நீண்ட உரையை முடித்து வணக்கம் கூறிச் சென்றார். அவசரமாக எழுந்து காண்டீனுக்கு நடந்தேன். மண்டபத்தைவிட்டு வெளியேறு முன்னர் என் பெயரை அழைத்துக் கொண்டு, யாரோ என் பின்னால் ஓட்டமும் நடையுமாக வந்தார்கள்.

திரும்பிப் பார்த்தேன்.

தெரிந்தவர்தான். வெங்கட் என்று பெயர். இலக்கியக் கூட்டங்களில் பார்த்துப் பேசிய சிநேகிதம்.

''எங்க, சார்?'' என்றார்.

''காப்பி சாப்பிட்டு வரலாம்னு பார்க்கிறேன்.''

''அதுதானே! எங்க, புறப்பட்டுட்டீங்களோன்னு நினைச்சேன். சரி, வாங்க. நானும் காப்பிக்குத்தான்.''

இருவரும் நடந்தோம்.

காண்டீனில் கூட்டமாயிருந்தது.

எதிர்த்தாற் போல் அந்த ரோடுக்கு அப்பாலுள்ள கடைகளிலும் கூட்டம்தான். ஆயினும், விதியோரத்தில் நின்றபடி காப்பி சாப்பிடுகிற சுகமே தனியல்லவா? நாங்கள் ரோடைக் கடந்து கடையை அடைந்தோம்.

நண்பர் விஷயதாரி. பல்வேறு இலக்கிய, அரசியல், நாட்டு நடப்புகளையும் தெரிந்து வைத்திருந்தார். எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளக்கூடிய இடத்தில்தான் வேலை பார்த்தார் போலிருக்கிறது.

உண்மையில் அவர் எங்கே வேலை செய்தாரென்று எனக்குத் தெரியாது. ஷூ, பாண்ட், அரைக் கை வெள்ளை சர்ட். கையிலே பழையகாலத்து இன்சூரன்ஸ் ஏஜண்டுபோல ஒரு பேக். ஹஸ்த பூஷணம்!

அவரோடு பேசிக் கொண்டிருந்தால் பொழுது பறந்துவிடும். நாங்கள் பல்வேறு விஷயங்களையும் பேசியவாறே மரநிழலில் நின்று காப்பி குடித்தோம். இடையில் எனக்கும் நண்பருக்கும் பழக்கமான, நண்பருக்கு மட்டும் பழக்கமான, இன்னும் சிலர் வந்து சேர்ந்து கொண்டனர். நண்பர்

அவர்களுக்கும் காப்பிக்கு ஆர்டர் கொடுத்தார்.

சாகித்ய அகாதமி பரிசு கொடுபட்டிருந்த காலமாதலால், எமது சம்பாஷணையின் பொருளும் அதுவாகத்தான் இருந்தது. சுவாரஸ்யத்துக்குக் கேட்பானேன்?

காப்பி குடித்து முடித்த சிலர் சிகரெட் வாங்கிப் புகைத்தனர். நண்பர் வெற்றிலை வாங்கிப் போட்டுக் கொண்டார்.

நான், நண்பர், இன்னும் சிலரும் விழா மண்டபத்தை நோக்கி நடக்கத் தொடங்கினோம். சிலர் இன்னும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

மண்டப வாசலில் பேச்சை நிறுத்திக் கொண்டு, நாங்கள் உள்ளே வருகிற நேரம், அவசரமாக என்னருகே வந்து, ''காப்பிக்கு நான் பணம் கொடுத்தேனா சார்?'' என்று கேட்டார் நண்பர்.

நான், ''தெரியலியே!'' என்று பதிலளித்தேன்.

''ஆபீஸ் கான்டீனில் அக்கவுண்டுக்கு சாப்பிட்டுச் சாப்பிட்டு.... எங்கயாவது காப்பி, டீ குடிச்சா பணம் கொடுக்காமப் போயிடுவேன் சார். பின்னர் யாரையாச்சும் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்'' என்று சொல்லியவாறு வந்தார் அவர்.

'இதை கடையைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னாடி நீங்க கேட்டிருக்கணும். இப்ப கேட்டு என்ன பண்றது?' என்று சொல்ல நினைத்தேன். ஆனால், சொல்லவில்லை.

நண்பர் தமது இடத்திலும், நான் முன் பக்கமாக எனது சீட்டிலுமாய்ச் சென்று அமர்ந்தோம்.

ஒரு மணியளவில் கருத்தரங்கம் நிறைவு பெற்றது. மறுபடி இரண்டரை மணிக்குக் கவியரங்கு.

சாப்பிட்டு வரலாம் என நினைத்து வீதியில் இறங்கி நடந்தேன்.

யாரோ பின்னால் ஓடிவருகிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்ப்பதற்கு முன்னரே, ''வாங்க, கபம் தியேட்டர்ப் பக்கமா



போய்ச் சாப்பிட்டு வரலாம்'' எனக் கூறிக் கொண்டு என்னோடு சேர்ந்து கொண்டார் நண்பர் வெங்கட்.

மதியச் சாப்பாட்டுக்குத் தனியே போகத்தான் விரும்பி னேன். நண்பர் வந்து சேர்ந்து கொண்டதால் சிறிது யோசித்தேன். ஆயினும், மறுப்புச் சொல்லாமல் கூட்டிச் சென்றேன்.

தியேட்டருக்கு அண்மையில் இருந்த ஓட்டல் ஒன்றிலே இருவரும் சாப்பிட்டோம்.

சாப்பிட்டு முடிந்த நண்பர் தமது பழைய 'இன்சூரன்ஸ் ஏஜண்ட்' பேக்கை தூக்கிக் கொண்டு கை கழுவிவிட்டுப் பழையபடி பக்கத்தே வந்து அமர்வார் என எதிர் பார்த்தேன். ஆனால் அவரோ, ஓட்டல் வாச லுக்குப் பக்கத்தே இருந்த வெற்றிலை பாக்குக் கடையிலே ஒருவருடன் ஏதோ விஷயம் பற்றிப் பேசிக் கொண்டு அங்கேயே நின்று விட்டார்.

''கூப்பிடலாமா?' யோசித்தேன்.

பண்பாகப் படவில்லை.

ஆயினும், பண விஷய மல்லவா? நானே முழு பில்லையும் கொடுக்கிற நிலை வந் தால்....?

பஸ்ஸுக்குப் பணமின்றி அங்கிருந்து ஐந்து ஆறு கிலோ மீட்டர் தூரத்தை நடந்துதான் வீட்டுக்குச் செல்ல வேண்டி நேரிடும்.

நான் யோசித்து முடிப்பதற்குள் பில் வந்துவிட்டது.


பதினெட்டு ரூபாய்!

அப்பாடா! சரி, இருபது ரூபாய் இருக்கிறதுதானே! பஸ்ஸுக்கு மீதிப் பணம் போதும் என்ற எண்ணத்துடன் இருபது ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டுக் கைகழுவி வந்தேன். இரண்டு ஒற்றை ரூபாய் நாணயங்களைக் கிண்ணத்தில் கொண்டு வந்து மேசையில் வைத்தார் சர்வர். பஸ் டிக்கட்டுக்கு ஒன்றே கால் ரூபாய். எனவே, இரண்டு நாணயங்களையும் எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, சர்வரின் முக மாறுபாட்டைப் பொருட்படுத்தாமல் வெளியே நடந்தேன்.

கடையிலிருந்து புறப்பட்ட போதும் சரி, வழியிலும் சரி, பில் பற்றி மட்டுமல்ல; வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் கூட நண்பர் வெங்கட் மூச்சு விடவில்லை.

எனக்கு பற்றிக் கொண்டு வந்தது. கடக்கட நாலு வார்த்தை கேட்க நினைத்தேன். ஆயினும், என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

பதினெட்டு ரூபாய் எனக்குச் சாதாரண



மான தொகையில்லை. அதுமட்டுமல்ல, வெங்கட் கூட வராதிருந்தால் நான் சாப்பாடு கூட எடுத்திருக்க மாட்டேன். டிபனோடு முடித்திருப்பேன். நாளைய தேவைக்கு ஒரு பத்து ரூபாய்ப் பணம் பாக்கெட்டில் இருந்திருக்கும்.

எனக்கும் பெருந்தன்மை உண்டுதான். ஆனால், இந்தளவு பெரிதாகப் பெருந்தன்மை காட்ட என்னால் முடியாது.

'இனி என்ன செய்வது? கறந்த பால் மடிக்கேறுமா?' என்று என்னை நானே ஆறுதல் படுத்திக் கொண்டேன்.

மூன்று மணியளவில் கவியரங்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

வழக்கம் போல் முன் பக்க வரிசையில் சென்று அமர்ந்து கொண்டேன்.

கருத்தரங்கைப் போலன்றிக் கவியரங்க நிகழ்ச்சிகள் சுவையாக இருந்தன.

எனக்குப் பிடித்தமான கவிஞர் ஒருவர் கவிதை படித்துக் கொண்டிருந்தார். அந்த கவி வெள்ளத்தில் நான் மூழ்கிப் போயிருந்தேன்.

யாரோ தோளில் தட்டினார்கள்.

பின்னே வெங்கட்.

''அந்த மணியாச்சே! வாங்க சார், போய்க் காப்பி சாப்பிட்டு வரலாம்'' என்றார்.

''காப்பியா? உங்களுடனா? வேண்டாம், வெங்கட்!' மனத்துள் உறுமினேன் நான். .பின்னர் நிதானமாக, ''காப்பி சாப்பிடுவதை மட்டும் நீங்க எப்போதும் மறக்க மாட்டீங்க போலிருக்கிறதே!'' என்றேன்.

அவர் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு விட்டார்.

நண்பரின் மனத்தைப் புண்படுத்தி விட்டதற்கான வருத்தம் இதயத்தில் வியாபித்தது. அதே வேளை திடீரென மண்டபத்தில் கரகோஷம்.

மேடையை நோக்கித் திரும்பினேன்.

கவிஞர் விடை பெற்றுச் சென்று இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்தார்.

நானும் கைதட்டினேன். பிறகு நண்பர் பக்கம் திரும்பினேன்.

அங்கே....

நண்பர் வேறொரு நண்பரின் தோள் மேல் கைபோட்டுக் கொண்டு காண்டீனை [illegible] போய்க் கொண்டிருந்தார்!

கலைஞன்



கண்ணைக் கவரும் கமல், காதைக் கவரும் இளையராஜா. மற்றதெல்லாம் அநாவசியம் என்கிற உன்னதமான சிந்தாந்தத்தின் விளைவு : கலைஞன்.

ரொம்ப நாளைக்கப்புறம் 'மைக்' பிடிக்கும் கமல். ஜிகினா டிரெஸ்ஸில் ஜிகினா இல்லாத நடிப்பு. வரிசையாக அவரது ரசிகைகள் அல்லது வெறியைகள் கொல்லப்படுவதும், இன்டர்வல் வரை கமல்தான் கொல்கிறார் என்று நம்பச் செய்வதிலுமே படம் நகர்கிறது.

புதுமுகம் பிந்தியா. அதிகம் பேசாத (வாய்ப்பில்லாத) மெழுகு பொம்மை. முற்றிலும் மாறுபட்ட அந்தக் கர்நாடக இசைப் பாடலின் போது அந்தக் கண்களில் கொஞ்சும் மழலை... தியேட்டரில் ஒன்ஸ் மோர் கேட்காதவன் மனுஷனே இல்லை.

காட்சி அமைப்புகளில் என்னதான் கவிதை தெரிந்தாலும், ஏழாம் வாய்பாட்டையொத்த கதை. ஒரு நாலாங்கிளாஸ் பையன் சுலபமாகக் கண்டுபிடித்து விடக் கூடிய சஸ்பென்ஸ். சாட்சாத் தமிழ் சினிமா கிளைமாக்ஸ்.

முதல் பாராவை மறுபடியும் படியுங்கள். அந்த சித்தாந்தத்தை ஏற்பவர்களுக்கு படம் ஜோர்; மற்றவர்களுக்கு போர்!

- ஆர்.பி.ஆர்.



"எதையும் புதுமையா பண்ணணும்னு நினைக்கிறது தப்பில்லே; அதுக்காக இப்படியா?"

"ஏன் என்ன ஆச்சு?"

"கல்யாண ரிசப்ஷனுக்குப் புது மாமியார் - மருமகள் சண்டையை அரங்கேத்தி வைக்கிறாங்களாம், அழைப்பிதழிலேயே புரோகிராம் போட்டிருக்காங்க!"

- பி.ஜி.பி. இசக்கி

6

ராமனையும், ராதாவையும் சுமந்து கொண்டு சென்ற ஸ்கூட்டர் கடற்கரையை ஒட்டிய சிறிய சாலையில் ஊர்ந்து நின்றது.

ஆடி மாதக் காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. கைகளால் முகத்தை மறைக்கும் கூந்தல் இழைகளையும், நழுவிக் கொண்டிருக்கும் சேலைத் தலைப்பையும் தடுத்துக் கொண்டே நடந்தாள் ராதா.

''உன்னை எதுக்காக இங்கே கூட்டிண்டு வந்திருக்கேன் சொல்லு பார்க்கலாம்?'' - ராமன் உரத்த குரலில் உற்சாகத்துடன் கேட்டான்.

''தெரியலையே.''

''சை! ஒரு சினிமா நட்சத்திரத்தோட அந்தரங்க காரியதரிசியா இருந்துண்டு என்ன பிரயோசனம்! கொஞ்சம் கூடக் கற்பனை கிடையாது உனக்கு, ராது.''

''கற்பனைன்னு ஒண்ணு இருந்திருந்தா உங்களை விரும்பியிருக்க மாட்டேன் ராம்!'' கலகலவென்று சிரித்தாள்.

''ஓ! அப்போ எதைப் பார்த்து என்னை விரும்பினே?''

சாய்ந்து கிடந்த அந்தப் பெரிய படகின் மேல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

''உங்க புத்திசாலித்தனம்... திறமை... நீங்க அலட்டிக்காம வேலையை மேற்பார்வை பார்க்கிற தன்மை...''

''அப்போ, என் பர்ஸனாலிடி?''

''ஆங்! அது ரெண்டாம்பட்சம்தாங்க. எனக்கு வெளித் தோற்றங்களிலே மயக்கம் கிடையாது!''

''நம்பறேன்! இல்லையானா பூஜ்யாவோட பங்களாவுக்கு வர்ற அத்தனை அழகான நடிகர்களையெல்லாம் விட்டுட்டு என்னை விரும்பியிருக்க மாட்டே.''

ராமன் மனதுக்குள் சிரித்தான். விகவம் தான் அவனை எப்படியெல்லாம் மாற்றி விட்டான்! விகவம் கூறியதை நினைத்துப் பார்த்தான்.

'வாழ்க்கையில நாம் சில லட்சியங்களை அடைய விரும்பினோமேயானா, அதுக்காகச் சில நேரங்களில் சில உண்மைகளை மறைக்க வெக்கறதில் தப்பில்லை ராமா. இன்ஃபேக்ட், சின்னச் சின்னப் பொய்கள்தான் வாழ்க்கையின் முன்னேற்றப் படிகள்!'

ராதாவிடம் கூறியிருந்த பொய்களை நினைத்துப் பார்த்தான். தன்னைப் பற்றி இவள் இவ்வளவு உயர்ந்த அபிப்ராயங்கள் வைத்திருப்பதன் காரணம், இந்தப் பொய்கள்தான். ஏன் இப்படியெல்லாம் பொய்

ஆபஸ்தம்பன்



சொல்ல வேண்டும்? அவனுக்கு அன்பு - உண்மையான அன்பு - தேவையாக இருந்தது. விகவம் அவனுக்கு வேலை போட்டுக் கொடுத்ததன் காரணம், கேவலம் அவன் மீது விகவம் வைத்திருந்த அன்பு என்று அவனால் நம்ப முடியவில்லை. நித்யாவைப் பழிவாங்கும் ஒரே எண்ணத்தில்தான் விகவம் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான் என்பதை அவன் இப்போது உணர்ந்து விட்டிருந்தான். ஆனாலும் விகவத்தால் அவன் அந்தஸ்து உயர்ந்ததையும் அவனால் மறுக்க முடியவில்லை.

'ராமனைப் பிடித்தால் போதும். விகவத்தின் தயவு கிடைக்கும்' என்று பலர் அவன் காதுபடச் சொல்லியதைக் கேட்டிருக்கிறான். இப்பொழுது இவனுக்கும் சில மேல்மட்டத்துத் தொழிலதிபர்கள், சில அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பசையுள்ள வியாபாரிகள் - பரிச்சயமாகி விட்டிருந்தார்கள். அரசாங்கத்துக்கும் ஓரிரு வேலைகள் செய்து கொடுக்கத் தொடங்கியிருந்தார்கள். சில இரவுகளில் விகவத்துடன் 'டிஸ்கஷன்களில்' ஈடுபடும் சாக்கில் மதுவையும் ருசி பார்க்கத் தொடங்கியிருந்தான்.

''என்னங்க இங்கே கூட்டிட்டு வந்துட்டுப் பேசாம இருக்கீங்க? பூஜ்யாகிட்டே சித்தியை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகணும்னு பொய் சொல்லி விட்டு வந்திருக்கேன். என்ன விஷயம்னு சொல்லுங்களேன்?''

''நம்ம விஷயம்தான் ராது. அம்மாகிட்டச் சொல்லிட்டேன். பச்சை விளக்குக் காட்டிட்டாங்க. நீ உங்க வீட்டுல பேசிட்டியா?''





அவள் பதிலேதும் கூற வில்லை.

"பேசாம இருந்தா என்ன அர்த்தம் ராதா?"

"எங்கப்பா 'பிரெஸ்' ஒண்ணுல புரூஃப் ரீடரா இருக்காரு. ரெண்டு தம்பிங்களிலே பெரியவன் பத்தாவது படிக்கிறான். சின்னவன் எட்டாவது. தங்கச்சி மூணாவது படிக்கிறா. இதுக மூணுமே சித்தியோட பசங்க. எங்கம்மா தவறிப் போனப்ப எனக்கு வயசு ஏழு. சித்தி வேலை நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாங்க. ஏன்னா, எனக்கு பூஜ்யா மாசம் நானூறு ரூபா கொடுக்கறா. அதை அப்படியே சித்தி கையில கொடுத்துடறேன். என்னோட சாப்பாடு, காப்பி - எல்லாம் பூஜ்யா வீட்டுலதானே."

"சை! கேவலம் இந்த நானூறு ரூபாயா பிரச்னையாப் போயிடுத்து? நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் மாசம் ஐநூறு ரூபாய் வீட்டுக்கு அனுப்பிடு. ஐ கேன் அஃபோர்ட் இட்! என்ன?"

அவள் அவனை ஒரு தேவனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

"நிஜமாகவா?"

"ஆமாம் நிஜமாகவேதான். உனக்காக என்னால இது கூடச் செய்ய முடியாதா என்ன? ராதா.. உன்னோட அன்பினாலதான் என் வாழ்க்கையில் புது அர்த்தமே ஏற்பட்டிருக்கு. ராதா... ஐ நீட் யூ ஸோ... மச்."

அவள் விழிகள் பனித்தன. "நன்றி ராம்!" என்றவாறே அவன் கையைப் பற்றியிழுத்துப் புறங் கையில் முத்தமிட்டாள்.

இந்த கடற்கரைப் பேச்சு முடிந்த ஒன்றரை மாதங்களில் இருவரின் திருமணமும் நடந்தது. இருவரும் தேனிலவுக்காக ஊட்டிக்குச் சென்றார்கள். ராதாவின் பார்வையில் ராமன் விசுவரூபமெடுத்த திருமால் போலவே தோன்றினான். பார்வதி அவளை மிகவும் பிரியத்துடன் நடத்தினாள். ஜாதி வித்தியாசம் அந்த வீட்டில் பாராட்டப்படவில்லை. பார்வதியால் சுபாவத்திலேயே எல்லோரிடத்திலும் அன்பு செலுத்த முடியும். அவளுக்கு எல்லோருமே நல்லவர்கள்.

துர்காவைப் பற்றி நல்ல அபிப்பிராயம் எதுவுமே அவள் மனதில் எழவில்லை. எம்.எஸ்ஸி., பட்டதாரியான ஒரு பெண்ணின் பொழுதுபோக்குகள், விருப்பு வெறுப்புகள் எல்லாம் மிகக் கேவல மானதாக இருந்தன.

அது போலவே, நித்யாவைப் பற்றி ராமன் தாறுமாறான விஷயங்களைக் கூறியிருந்ததால் அவளைச் சந்திக்கும் முன்னரே அவள் மீது விரோத பாவம் ஏற்பட்டிருந்தது. அதிலும் "ராமனை வளர விடாமல் அமுக்கியவள்" என்ற எண்ணம் நெஞ்சினுள் ஆழமாகப் பதிந்து வெறுப்பை ஜனிக்க வைத்திருந்தது.

புகுந்த வீட்டில் அவளுக்கு வேலை எதுவும் இருக்கவில்லை. தபால் மூலம் எம்.ஏ. ஆங்கில இலக்கியத்தைப் பாடமாகப் பயிலலானாள். புத்தகங்கள் படிக்கப் படிக்க அறிவுத் தாகம் அதிகமானது. ராமன், தான் கொடுத்த வாக்குப்படியே மாதம் ஐநூறு ரூபாய்க்கான டிராஃப்டை அவளிடம் கொடுத்து வந்தான். அவளுக்குத் தேவையான புத்தகங்கள் வாங்கிக் கொள்ள, கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்தான். ஆடம்பரப் பொருள்கள் மீதும் துணிகள் மீதும் அதிகம் மோகம் இல்லை என்பதால் அவளால் அவனுக்குப் பெரிய செலவு எதுவுமிருக்கவில்லை.

அறிவுத் தாகம் கொண்டுள்ள பெண்களின் வாழ்வில் ஒரு சுய கட்டுப்பாடு இருக்கும். அவளிடம் இருந்தது. உயர்ந்த சிந்தனைகள் அவள் மனதில் ஊற்றெடுத்தன. ராமனை அவள் நாளுக்கு நாள் அதிகம் நேசிக்கலானாள். ஒரோர் கணம் இந்த அன்பு வெள்ளம் அவள் இதயத்தையே பிளந்து விடும் போல் தோன்றியது.

அவன் திறமைக்கேற்ற புகழ் அவனை வந்தடைய வேண்டும் என்று விரும்பினாள். கட்டடக் கலை பற்றிய புத்தகங்களைப் படித்தாள். நூலகங்களுக்குச் சென்று ஓவிய, சிற்ப, கட்டடக் கலை குறித்து வேறு வேறு நகரங்கள், கலாசாரங்கள் - இவைகளின் படைப்புக்கள் பற்றிப் படிக்கப் படிக்க அவள் மனத்தில் பிரமிப்பு ஏற்பட்டது.

இனிமேல் ராமனிடம் இது குறித்து நிறையவே பேச வேண்டும் என்று நிர்மானித்தாள். ஆனால், இது பற்றியெல்லாம் அவள் பேச முயலும் போதெல்லாம் அவன் பேச்சை திசை மாற்றுவது ஏன் என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரோர் சந்தர்ப்பத்தில் அவனுக்குக் கோபம் ஏற்படுவதையும் பார்த்தாள். அர்த்தமில்லாமல் வரும் கோபம் அவளுக்கு வருத்தத்தை அளித்தது. அவர்களிருவருக்கிடையே மெலிதாகத் திரை ஒன்று ஏற்பட்டு வருவதை அவளால் உணர முடிந்தாலும், சுலபமாக ஏற்றுக் கொள்ள முடிய

சிலந்தியா, சும்மாவா!

●● சிலந்திக்கு வலைபின்ன உதவும் பிசின் போன்ற இழை, ஆறு துவாரங்களின் வழியாக வெளி வரும் அதன் எச்சிலே. காற்றுப்பட்டதும் உறுதியாகி விடுகிறது. அதே கனமுள்ள எஃகு இழையுடன் ஒப்பிட்டால் சிலந்தி இழை ஐந்து மடங்கு அதிக பாரத்தைத் தாங்கக் கூடியது!

●● சாதாரணமாக மஞ்சள் நிறத்தில் காணப்படும், 'கிரேப் ஸ்பைடர்' எனப்படும் சிலந்தி, இடத்திற்குத் தகுந்தாற்போல நிறத்தை மாற்றிக் கொள்ளும்.

●● 'மெக்ஸிகன் டாரட்டுலா' அமெரிக்காவில் வாழும் 'ப்ளேக்விடோ' ஆகியன மனிதர்களைக் கொல்லும் அளவு விஷம் உள்ளவை.

●● 'வலைகந்தரி' தான் பெரிய வலைபின்னும் சிலந்தி. கோளவடிவில் வலை 6 அடி உயரம் வரை இருக்கும்!

●● ஆப்பிரிக்காவின் தென் பகுதிகளில் காணப்படும் பறவைத்தின்னி சிலந்தி தன் உணவாகச் சிறு பறவைகளையும் கன்டெலிகளையும் சிக்க வைத்து உண்ணும்!

●● 'சூர்ய சிலந்தி'யின் வேகம் மணிக்கு 27 கிலோமீட்டர்!

●● காங்கோ காடுகளில் வசிக்கும் பறக்கும் சிலந்தி பறந்துக் கொண்டே வலை பின்னுகிறது! 2-3 முட்டைகளிலிருந்து 3000 முட்டைகள் வரை இடுகின்றன!

●● சிலந்தி விஷத்திலிருந்து உயிர்காக்கும் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு அவுன்ஸ் விஷத்தின் விலை சுமார் 8 கோடி ரூபாய்!

ஆதாரம் : 'தர்மயுக்' தகவல் : எஸ். ஆலன்

வில்லை. இது உண்மையான அன்பு இல்லையா? ஒருவித கண்மூடித்தனமான அபிமானம் தன் கண்களை மறைத்து, இதயத்தை மரத்துப் போகச் செய்து விட்டதோ, என்றெல்லாம் கூட எண்ணினாள்.

அது ஒரு மார்கழி மாத இரவு. வேப்பமரத்து இலைகள் ஆடி அசைந்து, குளிர்ந்த காற்றை அறையினுள் வீசிக் கொண்டிருந்தன. 'ஸ்டார் டஸ்ட்' பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு பிரபல இளம் நடிகனின் 'காஸனோவா'ப் பயணங்களில் ராமன் மூழ்கிக் கிடந்த போது, ராதா அந்த ஆங்கிலப் பத்திரிகையுடன் உள்ளே நுழைந்தாள்.

''இதைப் பார்த்தீங்களா?'' என்றே அந்தப் பத்திரிகையை விரித்துப் பிடித்து 'ஸ்டார் டஸ்டை' மறைத்தாள்.

அவன் ஒரு கணம் எரிச்சலுடன் அவளைப் பார்த்தான்.

''சை! என்ன இது ராது!''

''ப்ளீஸ் ஒன் மினிட் பாருங்களேன்.''

அவன் வேண்டா வெறுப்புடன் அந்தப் பத்திரிகையின் பக்கங்களைப் பார்த்தான்.

''இது என்ன தெரியுமா? டில்லியில் இருக்கற பெல்ஜியன் எம்பஸி பில்டிங். இதை டிஸைன் பண்ணினவர் ஸதீஷ் குஜ்ரால் என்ற ஓவியர். இவங்க ஓவியக் கலையில கை தேர்ந்தவங்க. இன்ஜினீயரிங் எல்லாம் படிச்சதில்லை. எட்டு வயசுலேயே ரெண்டு காதுமே கேட்காம போயிருந்தார். எத்தனை அழகா 'டிஸைனை'க் கன்சீவ் பண்ணியிருக்கார்னு பாருங்களேன்.''

''சே! என்ன அவலட்சணமா இருக்கு! பார்க்கச் சகிக்கலை!''

''என்னங்க இது? இதைப் போய் நல்லா இல்லைங்கறீங்க. என்ன கம்பீரம்! என்ன ஒரிஜினாலிடி! அக்காவோட பொம்மைத் தொழிற்சாலையின் காண்டாமிருகத் தோற்றத்தை நீங்கதான் ஐடியா பண்ணினீங்கன்னு சொன்னீங்க. இப்பத்தான் நீங்க சுதந்திரமா இருக்கீங்க இல்லை? விகவம் சாருக்கு உங்க மேல நல்ல அபிமானம் இருக்கு. கிராண்ட் ஸ்கேல்ல ஏதாச்சம் டிஸைன் பண்ணுங்களேன் - ப்ளீஸ்.''

''நீ சற்று வாயை மூடிண்டு இருக்க மாட்டே? இது என்ன தொண தொணன்னு... படிக்க விடாமே...''

அவன் உரக்கக் கத்தினான். தனது போலித்தனங்கள் வெட்ட வெளிச்சமாகி விடக் கூடாதே என்ற பயத்தில் கோபம் பலமாகப் பெருகியது.

அவள் அதிர்ச்சியுடன் புத்தகத்தை மூடிக் கொண்டே பின்னால் நகர்ந்தாள்.

''இதோ பாரு! நீ எனக்கு மனைவியாக மட்டும் இருந்தால் போதும். அனாவசியமா என்னோட வேலை விஷயத்துல எல்லாம் தலையிடாதே. உனக்கு என் மேல் உண்மையான பிரியம் இருந்தா...''

அவள் பதறிப் போனாள் -

''என்ன பேச்சுங்க இது?'' அவள் விழிகளில் குபுக்கென்று நீர் நிறைந்தது.

அவன் சட்டென்று நிதானித்தான்.

''சாரி ராது.''

அவன் கைகளைப் பற்றியிழுத்து அணைத்துக் கொண்டான். மனத்தில் பட்ட வலியில் அவள் மௌனமாகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவன் கைகள் அவளைச் சுற்றிக் கொண்டன. இதழ்கள் முரட்டுத்தனமாகப் பதிந்தன. அவள் வேறு எங்கோ இருந்தாள். இதயத்தின் மூலையில் ஏதோ ஒன்று முள்ளாகக் குத்தியது. இவனுக்குள் வேறொரு ராமன் இருக்கிறான். ஆனால் அவன் இவளைக் கவர்ந்தவனில்லை என்று உள்ளுணர்வு கூறியது. அவன் மெல்ல மெல்ல அவள் உடலைத் தனதாக்கிக் கொண்டிருந்தானே தவிர, அவள் இதயம் விலகி விலகிப் போய்க் கொண்டிருந்தது.

(தொடரும்)

சுகன்யா: ஒரு சந்திப்பு

'சக்கரைத் தேவன்' படப்பிடிப்பு நடக்கும் ஒதுக்குப்புறமான, மரப் படிகள் கொண்ட மாடி பங்களா. க்ரேனில் ராஜராஜன். நகம் கடித்தபடி டைரக்டர் பன்னீர். 'டேப்'பில் இளையராஜா.

'வாசப்பூவின் தேனே
வண்ணநிலாவே மானே!'

விஜயகாந்தின் கொஞ்சல் பிடியில் - வெட்க விளம்பில் சுகன்யா. சமீபத்திய வெற்றிகளில் ஒரிரு சுற்று கூடியிருக்கிறார். பிரேக்கின் போது சந்தித்துப் பேசும் சில நிமிஷங்களில் :

''அடிப்படையில் ஒரு டான்ஸரான உங்களால் எப்படி சினிமாவின் 'தையா தக்கா'க்களைப் பொறுத்துக் கொள்ள முடிகிறது?''

''இது ஒன்றும் பெரிய விஷயமாக எனக்குப் படவில்லை. சாஸ்திரப்படி உள்ள பரதநாட்டியம்தான் சினிமாவில் வர வேண்டும் என்றால் அது நடக்கிற காரியமில்லை. தவிரவும் பரதம் மட்டும்தான் ஆடுவேன் என்றெல்லாம் கொள்கைகள் ஏதும் எனக்கு இல்லை. சினிமாவில் வரும் நடன அசைவுகளை - அவை என்னதான் இலக்கணம் மீறி இருப்பினும் நான் ரசிக்கிறேன். சொல்லப் போனால் பாடல் காட்சிகள் சிறப்பாக அமைய, நான் கற்ற பரதநாட்டியம்தான் எனது சினிமா டான்ஸுக்கு துணையாய் அமைகிறது.''

''எந்த வகையில்?''

''சினிமா நடனம் என்பது கதம்ப சாதம் மாதிரி. சகலமும் கலந்திருக்கும் அதில். அதற்காக அத்தனை வகை நடனங்களையும் கற்றுக் கொள்ளுவது சாத்தியமில்லை. ஆனால் பரதநாட்டியம் - மற்ற யாவற்றுக்கும் அடித்தளமாக இருக்கிறபடியால், பரதம்



"என் லட்சியத்தைச் சொன்னால் கிண்டல் பண்ண மாட்டீர்களே? ஆர்ட் ஃபிலிமில் நடிக்க வேண்டுமென்பதுதான்!"



ஒழுங்காகத் தெரிந்தால் போதும். எதையும் மானேஜ் பண்ணி விடலாம்.''

''சினிமாவுக்கு வந்துவிட்டபடியால் ஒரு முழு நேர டான்ஸராக முடியாதது குறித்து ஏதேனும் வருத்தம்...''

''ஆரம்பத்தில் லேசாக இருந்ததென்று நினைக்கிறேன். இப்போது இல்லை. ஏனெனில் அடிப்படையில் எனக்குக் கலை ஆர்வம் இருந்தது. அதை ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்தும் ஆர்வத்தில், அப்போது எனக்குச் சாத்தியமாகியிருந்த பரதநாட்டியத்தைப் பிராக்டிஸ் பண்ண ஆரம்பித்தேன். ஒரு விபத்து மாதிரிதான் சினிமாவுக்கு வந்தேன். துறை தான் வேறே தவிர, அடிப்படை உணர்வு ஒன்றுதான். ஸோ, பெரிய வருத்தம் ஒன்றும் இல்லை. ஆனால், இதிலேயே ஏதாவது நல்ல டான்ஸ் ஸீக்வன்ஸ் வரும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஸ்பெஷல் இன்ட்ரஸ்டோடு பண்ணுகிறேன்.''

''இன்றைய தேதியில் தமிழ் சினிமாவில் ஹீரோயின்களுக்கு, கலர் கலராக டிரெஸ் பண்ணிக் கொண்டு வந்து, ஷோ-கேஸ் பொம்மை மாதிரி நிற்பது தவிர, வேறு வேலையே இல்லையே?''

''என்ன பண்ணுவது? தமிழ் சினிமா உலகம் ஹீரோக்களைச் சார்ந்து நிற்பது இன்று - நேற்றைய வழக்கமில்லையே! இருந்தாலும் அவ்வப்போது ஹீரோயின் ஓரியன்டட் படங்களும் வரத்தான் செய்கின்றன. என் அதிர்ஷ்டம், என்னை யாரும் டம்மி ஆக்குவதில்லை. உதாரணத்திற்கு புது நெல்லு புது நாத்தில் - கதை என்னவோ ஹீரோவையும், அவன் குடும்பத்தையும் சுற்றித்தான். மெயின் கதைக்கு மூன்றாம் மனுஷியான எனக்கு டைரக்டர் தம் திறமையால், படம் முழுக்க வரும்படியாகவும் கதையில் எனக்கு ஏதோ வலுவான கேரக்டர்



இது கல்பனா வரைந்த படம். 'சாதாரணமாக, பெண்ணுக்கு இரண்டு முகம் உண்டு. ஒன்றுதான் வெளியே தெரியும். இன்னொரு பக்கம் அவளுக்கு மட்டுமே தெரிந்த ஒன்று. Nobody else can identify it' – இது படம் குறித்த கல்பனாவின் விளக்கம்.

இருப்பது போலவும் அமைத்திருந்தார். அதே மாதிரிதான் சின்ன கவுண்டரும். கதை முழுக்க அந்த கவுண்டர் கேரக்டரைப் பற்றியது. ஆனால் எப்படியோ அதில் நானும் பலர் பேசும்படி சிறப்பானதொரு கேரக்டர் பண்ணியிருப்பதாகத் தெரிவது டைரக்டரின் சாமர்த்தியம்!''

''ஆனாலும், 'சின்ன மாப்ளே' போன்ற படங்களில் நடித்த போது, நீங்கள் வீணாக்கப்பட்டிருப்பதை உணர்ந்தீர்களா?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. அது ஒரு மாதிரியான இன்னஸன்ட்+ ஹ்யூமரஸ் கேரக்டர். படமே ஜாலி படம் தான்! அதில் நான் எப்படி கனமான கேரக்டரை எதிர்பார்க்கலாம்? தவிர, இந்த மாதிரி ரோலில்தான் நடிப்பேன்; இதில் நடிக்க மாட்டேன் என்றெல்லாம் நான் எப்படிச் சொல்ல முடியும்?''

''ஸோ, எப்படிச் சொன்னாலும் நடிக்கத் தயார்?''

''அப்படியல்ல. கொஞ்சமாவது என்னை வெளிப்படுத்தும் விதமாக இருக்க வேண்டும். தவிர என்னால் ஆபாச ட்ரெஸ்களில் எல்லாம் நடிக்க முடியாது. முதலிலேயே அதையெல்லாம் விசாரித்துக் கொண்டு விடுவேன்.''

''சின்ன கவுண்டரில் வரும் பம்பர சீன், திருமதி பழனிச்சாமியில் அந்த பாட்டு சீன்... இவையெல்லாம் ஆபாச லிஸ்டில் சேராதா?''

''மைகாட்! பம்பர சீன்... அதை எப்படி ஆபாசம் என்பீர்கள்? அதில் ஒரு அழகுணர்ச்சி தெரியவில்லையா?''

''ஓ.கே. அதை வேண்டுமானால் ஒப்புக் கொள்ளலாம். திருமதி பழனிச்சாமி...?''

''யெஸ். அது தப்புத்தான்! பண்ணும் போது வித்தியாசமாகத் தெரியவில்லை. காட்சிக்குத் தேவை என்று டைரக்டர் சொன்னதால் செய்தேன்! பிறகுதான் ஜனங்கள் அந்தக் காட்சியை ஒப்புக் கொள்ளாதது புரிந்தது. அதுதான் ஃபர்ஸ்ட் அண்ட் லாஸ்ட். இனிமேல் உறுதியாக அந்த மாதிரி பண்ண மாட்டேன்.''

''போகட்டும். உங்கள் இலட்சியம்?''

''கெஸ் பண்ணாதீர்கள். ஒரு ஆர்ட்-ஃபிலிமில் நடிக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. ஆனால் என்னை மாதிரி கமர்ஷியல் நடிக, நடிகையரை ஆர்ட் ஃபிலிம் இயக்குநர்கள் அணுகவே தயங்குகிறார்கள். அதுதான் ஏனென்று புரியவில்லை. ஒரு வாய்ப்புக் கிடைத்தால் என்னை நிரூபிப்பேன்.''

சந்திப்பு : பா. ராகவன்

வண்ணப்படங்கள் : ப்ரவீண்குமார்

படம் : கோபிநாத்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-93

முதல் பரிசு ரூ. 1500/-

இரண்டாம் பரிசு ரூ. 1000/-

மூன்றாம் பரிசு (இருகதைகளுக்கு) ரூ. 1000/-

பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதைக்கும் ரூ. 125/- அறிமுக எழுத்தாளருக்கு போனஸ்.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதி மொழி தேவை
- அறிமுக எழுத்தாளர்கள் போட்டி முடிவு வரை வேறு எந்தப் பத்திரிகைக்கும் எழுத மாட்டேன் என்ற உறுதி மொழி அளிக்க வேண்டும்.
- நடுவர் குழு பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும்
- உறை மீது அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடவும்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறைகள் அனுப்புதல் அவசியம்.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம்.
- கடிதப் போக்கு வரத்து கிடையாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

கடைசி தேதி : ஜூன் 15





சொந்த வீடு

வீடு கட்ட ஆரம்பிக்கும் போது, மன கக்குள் எத்தனை உற்சாக அலைகள்!

அரை கிரவுண்டுதான் கிடைத்தது. அதுவே யானை விலை குதிரை விலை. மேலே வீடும் கட்ட வேண்டுமா?

அதைரியப்படுத்தவென்றே சிற்சில மனிதர்கள்.

'என்னங்க... உங்களால முடியுமா... பில்டிங் மெடீரியல்ஸ் இப்ப என்ன விலை தெரியுமா?'

'அதெல்லாம் சரிப்பட்டு வராதுங்க. காண்ட்ராக்டுல விட்டா.. பணம் ஏகத்துக் குச் செலவாவும்..'

'அது மட்டுமில்லே.. நீங்க பர்சனலா நேர்ல போயி.. கவனிக்கணும். இல் லேன்னா... திருட்டுப் போவும். கலவை சரி இருக்காது. குவாலிட்டி இருக்காது.'

இவருக்கு தைரியம் போய் விட்டது. பற்றாக்குறைக்கு ஆபீஸ் வேலையாக இவரை டூர் வேறு அனுப்ப முயன்றார்கள்.

"வேணாம்னு சொல்லிப் பாருங் களேன்..."

"எப்படி முடியும்? நான் பார்க்கற சீட் அது. பத்து வருஷமா பிரச்னை. கிட்டத் தட்ட நாப்பது அம்பது லட்சத்துக்கு மேல டிஸ்பியூட். இப்ப கஸ்டமர் ஒரு வழியா சம ரசமா வரான். நான் மறுத்தா வேற வினையே வேணாம்... அடுத்த வேளை சோத்துக்கு உங்க அண்ணன் வீட்டுக்குத்தான் போக ணும்."

மனிதருக்கு எப்போது உணர்வுகள் மாறுகின்றன என்றே புரிந்து கொள்ள முடி யாது. திடீரென்று சீறுவார். திடீரெனக் குழைவார்.

"இப்ப மனை பூஜை வேற போட ஏற்பாடு பண்ணியாச்சு. லோனுக்கும் சொஸைட்டில எழுதிப் போட்டு, வந்திரும் போல இருக்கு. இப்பப் போய் டூர்னா..."

"என்ன பக்கத்துல நெய்வேலிதானே.. சனி, ஞாயிறு வரலாம். மத்த நாள்ல என்ன பண்றது?"

எனக்குள் லேசான தயக்கம்.


"வேணா, நான் பார்த்துக்கட்டுமா?"

என்னைக் கேலியாகப் பார்த்தார். இத்தனை சங்கடங்களையும் மீறி அவ ருடைய 'நகைச்சுவை' பீறிட்டது.


"நீயா! நீ என்ன பார்ப்பே? எப்படியெல் லாம் ஏமாத்தறான்னு பார்க்கவா!"

"இல்லே... வந்து... யாராவது போகணும். புரியுதோ புரியலையோ, ஒரு அக்கறுத்தல், மிரட்டல் மாதிரி... என்னால முடியும்னு தோணுது..." என்றேன் இந்த முறை உறுதி ஏறிய குரலில்.

"ஒண்ணும் வேணாம், பேசாம இரு.. நீ நடுவுல புகுந்து குட்டையைக் குழப்பாதே.



சம்பா



நான் வேற மாதிரி ஏற்பாடு பண்றேன்...'' என்றார்.

நிலைமை என்னவோ எதிர்பார்த்த மாதிரி நடக்கவில்லை. லேபர் காண்ட்ராக்டில்தான் விட்டிருந்தோம். சிமெண்ட், இரும்பு எல்லாம் காண்ட்ராக்டர் கொடுக்கிற கடைகள் ஒன்றில் நம் விருப்பத்திற்குத் தேர்வு செய்யலாம்.

இவரால் ஒரு வாரம் பயணத்தைத் தள்ளிப் போட முடிந்தது. நானும் கூடவே போனேன்.

''நீ எதுக்கு வெட்டிக்கு அலையறே?''

''வரேனே... வீட்டுல சும்மாதானே இருக்கேன்'' என்றேன் புன்னகை மாறாமல்.

''வரட்டும் ஸார். வீடு கட்டறவங்க, பொதுவா காண்ட்ராக்டர் பாடுன்னு விடறது எனக்குப் பிடிக்காத விஷயம். ஒவரோட ஈடுபாடும் ரொம்ப அவசியம்...'' என்றார் காண்ட்ராக்டர்.

'இது என்ன... அது ஏன்... இதை எதுக்கு வாங்கணும்' என்று, குறுக்குக் கேள்விகள் கேட்டதில் காண்ட்ராக்டருக்கு வராத கோபம் இவருக்கு வந்தது.

''உனக்கு என்ன புரியப் போவுது... ஏன் தொல்லை பண்றே?'' என்றார் கோபமாக.

''மொட்டையா இப்படி வாங்கறதுக்கு, ரெண்டு விவரம் தெரிஞ்சுக்கலாமே...'' என்றேன்.

அவருக்குச் சமாதானம் ஆகவில்லை.

வீட்டில் தனிமையில் இஷ்டத்துக்குத் திட்டித் தீர்த்தார்.

''எல்லாம் உன்னால்தான்.. நமக்கெல்லாம் வாடகை வீடுதான் லாயக்கு. இதோ பார்... எதுக்கு வெட்டி வம்பு? பேசாம வாடகை வீட்டுல காலம் தள்ளிரலாம் இந்தத் தலைவலிக்கு...''

நான் பேசவில்லை. எல்லாக் கணவர்களுக்கும் வடிகால் தத்தம் மனைவிமார்கள். நீதான் நீதான். உன்னால்தான் என்று ஏசுவார்கள். ஏசட்டுமே..

ஊர் கிளம்பிப் போய் விட்டார்.

இரண்டு பேரும் இயக்கக்கூடிய பேங்க் அக்கௌண்ட். முதல் தவணையாகக் கிடைத்த பணம். முதல் வாரம் சனி, ஞாயிறு வந்து விட்டுப் போனவரால் அடுத்த இரு வாரங்கள் வர முடியாத சூழ்நிலை. அதைவிட எதிர்பாராதது ஒரு மாதத்தில் முடியாமல் போன வேலை, அடுத்த மாதத்திற்கும் இழுத்துக் கொண்டது.

ஃபோன் பேசி.. 'என்ன செய்யலாம்' என்று ஒருமுறை கேட்கப் போக.. நெய்வேலியில் அவர் அலறியது இங்கு கேட்டது.

''என்னை என்ன பண்ணச் சொல்றே? வேலையை விட்டுட்டு வந்திடவா? வந்து சட்டி தூக்கறேன்...''

பேசாமல் நின்றதும் மறுபடி அலறினார்.

''இனிமே எனக்கு போன் பண்ணாதே. ஸ்டாப் ஆல் தி நான்சென்ஸ். எப்ப முடியுதோ அப்ப கட்டிக்கலாம். டெல் தி காண்ட்ராக்டர் டு குவிட் தி ஜாப். புரியுதா...''

க்ஷணத்தில் தீர்மானம். பேசாமல் ஃபோனை வைத்தேன். இறுக்கமான மனதுடன் வந்தேன்.

மாலையில், வீட்டுக்கு காண்ட்ராக்டர் வந்து விட்டார்.

''என்ன சொன்னாருங்க?''

''என்னைப் பார்த்துக்கச் சொன்னாரு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் வந்திடுவாராம். சொல்லுங்க. இப்ப உங்க தேவை - பிளான் என்ன?''

உள்ளூர பதற்றம்தான். ஆனாலும் ஒரு துணிவு.

அப்பா கொடுத்த ஊக்கம். 'உன்னால முடியும்டி ராஜாத்தி' என்று மகனைப் போல வளர்த்தார். நான் ஒரே பெண் அவருக்கு.

காண்ட்ராக்டர் என்னை அவநம்பிக்கை

சொன்னால் நம்புங்கள்!

யாய்ப் பார்த்தார்.

''சிமெண்ட் அடுத்த லோடு வரணும். பத்து நாள் விடாம வேலை இருக்கு. நீங்கதான் கவனிக்கணும்.''

''சரி எப்ப டியூட்டிக்கு வருவாங்க?''

தேவைப்படுகிற விவரங்களை விசாரித்துக் கொண்டேன். நேரே போய் நின்றேன். கடையில் தகவல் சொன்னேன். சிமெண்ட் லோடு ஸ்பாட்டில் வந்து இறங்கியது. அம்மு ஒத்துழைத்தாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு சாவியை எதிர் வீட்டில் தந்து விட்டுப் பள்ளிக்கூடம் போனாள்.

சின்னச் சின்ன இடறல்கள். ஆனாலும் சரிசெய்யப்பட்டன. காண்ட்ராக்டரிடம் அடித்துச் சொல்லி விட்டேன். 'நேரில் தின சரி ஒருமுறையாவது வர வேண்டும். இல்லை என்றால் போனாவது செய்ய வேண்டும்.'

'நான் பணம் தருகிறேன். இதன் லாப நஷ்டம் எனக்கு...' என்று வலியுறுத்திய அதே நேரம்... 'இது உன் வேலை... உன் படைப்பு.. இதில் ஜெயித்தால் உன் மதிப்பு போகும். வேறு நண்பர்களை அறிமுகப் படுத்த மாட்டேன்...' என்ற மிரட்டலையும் சாத்வீகமாகக் கலந்தேன்.

'பெண்' என்கிற பச்சாதாபமும்.. 'பெண்தானே' என்ற அலட்சியமும் யார் யாரிடம் வெளிப்பட்டாலும் சுதாரித்து சூழ் நிலையைச் சாதகமாக்கிக் கொண்டேன்.

இவர் வந்த போது, பாதி வேலை முடிந்து விட்டது.

வந்த அன்று எதுவும் பேசாமல் படுத்து விட்டார்.

காலையில் எழுந்ததும், ''வீட்டைப் பார்க்கப் போலாமா?'' என்று அவரையும் அழைத்துக் கொண்டு, எங்கள் வீட்டில் அடியெடுத்து வைத்த போது, அவர் முகம் மாறிப் போனது.. என்னது...''

''ஏதோ எனக்குத் தெரிஞ்ச வரை...'' என்றேன்.

''ஓஹோ...'' என்று முனகினார்.

சுற்றிச் சுற்றி வந்து, முரண்பாடாக ஏதாவது பார்வையில் படுகிறதா என்று நோட்டமிட்டார்.

குறை தோன்றவில்லை. அல்லது அதை விட வியப்பு அவரைத் தாக்கியிருக்க வேண்டும்.

''ஸோ... உன்னால முடியும்னு காட்டறே...''

''...நம்ம வீடுதானேங்க...''

காண்டிராக்டர் புகழ்ந்ததும் இவரைப் பாதித்து விட்டது. ஆனால் வெளிப்படையாய்க் காட்டவில்லை.

''எனக்கு வர முடியலே... போன்லேயே சொல்லிட்டேன். நீ பார்த்து என்ன முடிவு எடுத்தாலும் சரின்னு...''

''ரொம்பப் பொறுமை ஸார்... மேடம்...''

கிரஹப் பிரவேசத்தன்று குழந்தை அம்முவுக்குப் பட்டுப் பாவாடை ஜொலித்தது. எங்களுக்கு மட்டும் சாதாரண உடை. செலவை சுருக்கிட்ட சிக்கன நடவடிக்கை.

வரிசையாய் உறவினர்கள்... நண்பர்கள் - ஆபீஸ் மனிதர்கள்.

ஹோமப் புகை மூட்டம். கண் எரிச்சலை மீறி மனசில் குளுமை. சற்றே பெருமிதம். சுய கர்வம்.

வரவேற்றுக் கை குலுக்கியதில் நெஞ்சு நிறைந்திருந்தது.

ஒரு பக்கம் ஹாலில் டிபன் பரிமாறப் பட்டது. பரிசுப் பொருட்களில் வந்த புதுமையான விநாயகர் ஓவியம் ஹாலில் மாட்டப்பட்டது.

''கையைக் குடுடா... சாதிச்சுட்டே...''

யாரோ நெருங்கிய நண்பராம். பற்றிக் குலுக்கினார் இவரை. சிரித்துக் கொண்டார்.

நான் மௌனப் புன்னகையுடன் நின்றேன்.

''ஃபர்ஸ்ட் கிளாஸ்... அமர்க்களம்டா... இந்த பிளான் எனக்கு வேணும்...'' மறுபடியும் பாராட்டுக்களைத் தூவிய போது, இவரிடம் லேசான மாற்றம்.

பரவசப்பட்டிருந்த நண்பரை நிதானப் படுத்தினார்.

என் பக்கம் திரும்பினார்.

''எல்லாம் இவளால்தான்...'' என்றார் மென்மையாக, ஆனால் அழுத்தமாக.

அந்த நிமிஷம் பரிபூரணமாய் முழுப் பெருமையும் அவருக்குப் போய் விட்ட மாதிரி உணர்ந்தேன்... ஆனால் குதூகலத்துடன்!

பிச்சைக்காரர் முன்ஷிக்கு வயது 51. பதினைந்து வருடங்களுக்கு முன்பு உத்தரப்பிரதேசத்திலிருந்து வந்து அகமதாபாத் நகரில் பிச்சை எடுக்கத் தொடங்கினார். பிச்சைத் தொழில் மூலமாக இவர் சம்பாதித்திருக்கும் சொத்து இரண்டு வீடுகள்; பாங்கில் கணிசமான தொகை - வைப்பு நிதியாக. இவரது மாத வருமானம் ரூ. 3000/-! விருப்பமான விஷயங்கள் இரண்டு : ஒன்று சுவையான உணவு. இரண்டு (ஆச்சரியப்படாதீர்கள்!) கவிதைகள்!

வருமானத்தில் ஒரு பகுதியை உத்தரப்பிரதேசத்தில் தாம் விட்டு வந்த குடும்பத்துக்கு அனுப்பி விடுகிறார். தவிர, கால் பாகம் இன்னொரு முக்கியமான நபருக்காகச் செலவாகிறது! யார் அவர்? இவரது இரண்டாவது மனைவிதான்!



ஆதாரம் : சன்டே

தகவல் : எல். ஆலன்

பாண்டியன் மகள்

17. விரும்பி விழுந்த வலை

சிறு துரும்பு எப்படி சில நேரங்களில் பார்வையையே மறைத்து விடுகிறதோ, அப்படி ஆலயத்தின் உள்ளிருந்த பட்டர்களைப் பற்றி மார்க்கியன் அலட்சியமாக நினைத்திருந்தது, பெரும் தீங்காக மாறி, அவன் திட்டத்தையே அடியோடு குலைத்து விட்டது.

எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவனும், ஒரே சமயத்தில் தனது பெரும் வாளினால் ஐந்தாறு வீரர்களைச் சமாளிக்க வல்லவனுமான மார்க்கியன், திடமாகவும் அலட்சியமாகவும் தன் கையைப் பற்றி, அப்புறமோ இப்புறமோ அசையவொட்டாமல் செய்து விட்ட பட்டரை வியப்புடன் ஏறிட்டு நோக்கினான். பிறகு அவன் பார்வை தாழ்ந்து தன்னைப் பற்றியிருந்த அவர் கரத்தையும் அதில் தென்பட்ட வாள் வடுக்களையும் கண்டது. தன்னை விட உயரமான அவர் தோற்றத்தையும், குறுக்கே முப்புரிநூல் ஓடிய அவர் சிவந்த மார்பையும் கண்டவன், அவரது மற்றொரு கரம் உலக்கை போல் இருந்ததையும் அவருக்கு ஆயுதமேதும் அவசியமில்லை என்பதையும் புரிந்து கொண்டான். அவரது தோள்களின் திண்மை, அளவற்ற பயிற்சியில் ஈடுபட்டவர் என்பதைக் காட்டவே, இவர் பட்டர் வேடமிட்ட வீரரோ என்ற சந்தேகமும் தோன்றியது அவன் மனதில். ஆனால் சற்றுமுன் வரை அவர் உச்சரித்துக் கொண்டிருந்த பாசுரங்களும், முகத்தில் தெரிந்த சாந்தமும், நெற்றியில் பெரிதாக இட்டிருந்த திருமண்ணும் அவனைக் குழப்பின.

அம்மங்கையும் கார்குழலியும் அவரை வணங்கியதையும் அவரது கனிந்த முகத்தில் மலர்ந்த முறுவலையும் கண்டவன் மனதில், திடீரென்று தான் கேள்விப்பட்டிருந்த பெயர் ஒன்று உதயமாகவே, குழப்பம் மறைந்து அந்த இடத்தைப் பெரும் திகில் ஆக்கிரமித்துக் கொண்டது.

"காஞ்சியின் பெரும் கவி எப்போது இங்கு வந்தார்?" என்ற அம்மங்கையின் குரலில் வியப்பு மிதமிஞ்சி ஒலித்தது எனில், அதுவே மார்க்கியனின் முகம் வெளுக்கக் காரணமாயிற்று.

"நீங்கள் வருவதற்கு இரு தினங்களுக்கு முன்!" என்றவர் கவிநாராயண பட்டராகத் தான் இருக்க வேண்டும் என்பது புரியவே, மார்க்கியன் செய்வதறியாது திகைத்தான். அதே நேரத்தில் வெளியில் வாட்கள் மோதும் ஒலி பெரிதாக ஒலித்தது.

குழந்தையிடமிருந்து விளையாட்டுப் பொருளைப் பறிப்பது போல அவன் கையிலிருந்த வாளைப் பிடுங்கிய பட்டர், அதனை அருகில் நின்ற ஆலய பட்டரை நோக்கி நீட்டினார். ஆலயபட்டரின் முகத்தில் ஏற்கெனவே இருந்த பீதி இன்னும் அதிகரித்தது.

"பட்டரே, அஞ்ச வேண்டாம்! இதைச் சற்று பிடித்திரும்!" என்ற நாராயண பட்டர், மார்க்கியன் மீதான தமது பிடியை நழுவ விடாமலே மூடியிருந்த கதவைத் திறந்தார்.

வாட்களுடன் வாட்கள் மோதிய ஒலிகளும் புரவிகளின் கனைப்பொலிகளும் வீரர்களின் அலறல்களும் அழகர் ஆலயத்து முகப்பை, சிறு போர்க்களமாக மாற்றியிருந்தன.

விக்கிரமன் பாண்டிய, ஈழ வீரர்களுக்கு இடையே தன் பெரும் புரவி மீது அமர்ந்து வாளைச் சக்கராயுதமாகச் சுழற்றிக் கொண்டிருக்க, உடன் காவலுக்கு வந்திருந்த சோழ வீரர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது. தனது வீரர்கள் தன் கண்ணெதிரே ஒவ்வொருவராக அழிக்கப்படுவதைக் கண்டான் மார்க்கியன்.

நாழிகை நேரமே நடைபெற்ற அந்தச் சண்டை முடிந்த போது, விழுந்து கிடந்த பாண்டிய வீரர்களிடையே மாறவர்மன் காணப்படவில்லை. தப்பி விட்ட ஒரு சிலரில் அவனும் ஒருவன் என்பதும், இனி தன் கதி அதோகதிதான் என்பதும் புரிந்ததால், நீண்ட பெருமூச்சொன்றை வெளியிட்டான் மார்க்கியன்.

கார்குழலியின் நிலை விவரிக்க இயலாததாயிருந்தது. இத்தனை அபாயங்கள் ஏற்படும் என்பதை எதிர்பார்த்துத்தான் அன்று விக்கிரமன் மதுரை செல்ல வேண்டும் என்ற தனது வேண்டுகோளுக்கு இசைவு தரத் தயங்கினான் என்பது அப்போதுதான் புரிந்ததால், குற்ற உணர்வு மேலிட, அவள்

ஹிஷ்வக்சேனன்



அவள் விழிகள் அவனை
ஏறெடுத்து நோக்கின...

குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தாள். பட்டரைக் கண்ட வினாடியிலேயே அச்சத்தை உதறி விட்டிருந்த அம்மங்கையோ ஆர்வத்துடன் விக்கிரமனின் போர் முறையை ரசித்துக் கொண்டிருந்தாள்.

சண்டை முடிந்ததும் ஆயுதத்தையும் மெல்லிய கவசத்தையும் கழற்றி, அருகில் நின்ற வீரனிடம் கொடுத்த விக்கிரமன், சன்னிதியை நோக்கி நடந்து வந்தான். பட்டரை அணுகி வணங்கியவன், மார்க்கியனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டுக் கைதட்டி வீரர்களை அழைத்தான். பட்டரின் அகரப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற மார்க்கியனைச் சோழ வீரர்கள் கைகளைப் பின்புறமாகப் பிணித்து நடத்திச் சென்றனர். தலைகுனிந்து நின்றிருந்த கார்குழலியையும் அருகில் நின்ற அம்மங்கையையும் பார்த்த விக்கிரமனின் பார்வையில் குறும்பு கொப்பளித்தது.

தயங்கியபடியே விக்கிரமனை நெருங்கிய அம்மங்கை, ''அண்ணா! என்னை மன்னித்து விடு. மதுரைக்கு எங்களை அழைத்து வருவதில் இத்தனை ஆபத்துக்களிருப்பதை நான் அறியவில்லை'' என்றாள்.

விக்கிரமன் பதில் கூறுமுன் கவியின் குரல் ஒலித்தது. ''விக்கிரமனுக்கு ஆபத்து என்றால் தேன் கனவை போன்றதாயிற்றே! அதுவுமின்றி நீங்கள் இங்கு வந்ததால்தானே பாண்டியர் கார்குழலியைப் பற்றி அறிந்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிய வந்து, இந்த மார்க்கியனையும் பிடிக்க முடிந்தது'' என்றார் கவி.

''இவர்களைப் பற்றி உனக்கு முன்னமே தெரியுமா அண்ணா?'' - அம்மங்கை வினவினாள்.

''தெரியும். மதுராந்தகன் முன்பே எனக்கு ஓலையனுப்பியிருந்தான். ஜெயந்தன் இந்த அழகர் ஆலயத்தின் பின்புறக் காட்டில் இவர்கள் மறைந்திருந்ததைக் கண்டறிந்தான். எப்படியும் நீ அழகரைக் காண விரும்புவாய் என்று ஊகித்த பட்டர் முன்னதாகவே இங்கு வந்து விட்டார்!'' - சுருக்கமாக விளக்கினான் விக்கிரமன்.

அடுத்த இரு நாட்களையும் அரண்மனையிலேயே கழித்த அம்மங்கைக்கு, விக்கிரமன் ஏன் உறையூருக்குத் திரும்புவது பற்றி எதுவும் கூறாமலிருக்கிறான் என்பது புரியவில்லை. அதிக நாட்கள் காஞ்சி வரதனைப் பிரிந்து இருக்க விரும்பாத கவியும் இன்னும் மதுரையை விட்டு நகரவில்லையென்பதும் அவளுக்கு வியப்பாக இருந்தது. விக்கிரமனை அது பற்றிக் கேட்டபோதெல்லாம் குறும்புச் சிரிப்பொன்றுதான் பதிலாகக் கிடைத்தது.

மதுரையில் அனைவரும் தாமதிக்கும் காரணத்தைக் கண்டிப்பாக ஜெயந்தன் அறிந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்த அம்மங்கை, மூன்றாவது நாள் காலையில் எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தவனை அரண்மனைக் கூடத்திலேயே மடக்கினாள்.

''ஜெயந்தா!'' என அழைத்த அவள் குரலில் சற்றுக் கடுமை கலந்திருந்தது.

''என்ன இளவரசி?''

''நாம் என்று உறையூருக்குத் திரும்புகிறோம்?''

''தெரியாது இளவரசி.''

''ஏன் இன்னும் மதுரையிலேயே இருக்கிறோம்?''

''தெரியாது இளவரசி.''

''பட்டர் ஏன் இன்னும் காஞ்சிக்குத் திரும்பவில்லை?''

''அவரைத்தான் கேட்க வேண்டும், தேவி.''

அவன் கோபத்துக்கு மசிய மாட்டான் என்பதை உணர்ந்த அம்மங்கை தொனியை மாற்றிக் கொண்டாள் :

''ஜெயந்தா, ஏன் இன்னும் மதுரையில் காத்திருக்கிறோம்? என்னிடம் சொல்லக் கூடாதா?''

ஜெயந்தன் மனம் சற்று இளகியிருக்க வேண்டும். கணப் பொழுது சிந்தித்தவன் கூறினான் : ''எதற்காக என்று கேட்காதீர்கள்...''

''பிறகு?''

''யாருக்காக என்று கேட்பது பொருந்தும்.''

அம்மங்கையின் வியப்பு உச்சநிலையை எட்டியது. 'விக்கிரமனும், காஞ்சி வரதராஜப் பெருமானை விட்டுப் பிரியவே மனமில்லாத பட்டரும் யாரோ ஒருவருக்காக மதுரையில் காத்திருப்பதாவது? அப்படிப்பட்ட நபர் யாராக இருக்கும்?'

''யாருக்காக ஜெயந்தா?''

''தெரியாது இளவரசி.''

அருள்வாக்கு

பால் வேண்டும் என்றால் பசுவை வைத்துப் போஷிக்க வேண்டும். பசுவை வைத்துப் போஷித்தால் பால் கிடைப்பது மட்டுமின்றிச் சாணமும்தான் கிடைக்கும்; வைக்கோல் கூளமும்தான் சேரும். அப்படியே கர்மப்பசுவை வளர்த்தால்தான் சீலம் என்ற பால் வரும்; அதோடு, சாணம், கூளம் போல் விரும்பத் தகாதவை என்று சிலருக்குத் தோன்றுகிற சில விளைவுகளும் உண்டாகலாம். சாணத்தையும் கூளத்தையும் சுத்தப்படுத்தி விட்டுப் பசுவைப் போஷித்து வருவதே புத்திசாலித்தனம். சடங்குகளின் உண்மைப் பயனை இவ்விதமே பெற வேண்டும்.

உண்மையான ஆத்ம தியானத்துக்குச் சடங்கு வேண்டாம் என்பது போல் ஈசுவரன் என்ற மூர்த்தியும் வேண்டாம்தான். ஆனால் அது உயர் நிலையில்தான். ஆரம்பத்திலேயே வேண்டாம் என்று இருக்க முடியாது. முதலில் ஈசுவரன் மிகவும் தேவை. அதற்கு எந்த

னையோ காரணங்கள். குறிப்பாக ஒன்றைச் சொல் கிறேன். நன்மை எல்லாம் நிறைந்த மூர்த்தியாக நமக்கு ஓர் உத்தம உதா ரணம் தேவைப்படுகிறது. தொன்றுதொட்டு ஈசுவ ரனை இப்படிப்பட்ட அனந்த கல்யாண குண மூர்த்தியாகத்தானே பாவித்து வந்திருக்கி றோம்? 'ஈசுவரன்' என்ற வுடன் அவரிடம் கெட்ட குணம் எதுமே இருக்காது என்று தானே நமக்கு நிச்சயமாகத் தோன்று கிறது? அழகு, கருணை, சக்தி, ஞானம் எல்லா வற்றிலும் பூரணமாக ஒன்று உண்டு என் றால் அது ஈசுவரன் என்ற கருத்துத் தான். மனோ தத்துவப்படி நாம் எதை நினைத்துக் கொண்டேயிருக்கிறோமோ



அதுவே ஆகிறோம். ஈசு வரனின் கல்யாண குணங் களையே எண்ணுவதால் நம்மிட முள்ள தோஷங் கள் நீங்கி நாமும் நல்ல வர்களாகிறோம்.

எனவே சடங்கு, பூஜை இவற்றால் உண்டாகிற மற்ற பலன்களோடு, அவை நம்மை நல்லவர்க ளாக்க மிகுந்த உதவிபுரி கின்றன; காரியமற்ற தியான யோகத்தில், ஞான விசாரத்தில் நம்மைச் சேர்க்க நிரம்ப உபகாரம் செய்கின்றன.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய சுவாமிகள்.

கோபத்தில் காலைத் தரையில் உதைத்த அம்மங்கை, முகம் சிவந்து ஒளிரத் திரும்பி தன் அறையை நோக்கி நடந்தாள்.

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்ற ஜெயந்தனது முகத்தில் புன்னகை படர்ந்தது.

மாலைக் கதிரவன் மதுரை அரண் மனையின் மேன்மாடத்து நிலா முற்றத்தில் தன் பொன்னிறக் கதிர்களைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். நந்தவனத்திலிருந்து கிளம்பிய நறுமணத்தைச் சுமந்து வந்த தென்றல், முற்றத்தின் வழவழப்பான தரை யில் தவழ்ந்தும் தூண்களைச் சுற்றி வளர்ந்திருந்த கொடிகளுடன் விளையாடி யும் நடமாடியது. ஒரு தூணைப் பற்றிக் கொண்டு தனிமையில் பெரும் சிந்தனையி லாழ்ந்து நின்ற கார்குழலியையும் அந்தத் தென்றல் ஒரு கொடியென்று எண்ணியிருக்க வேண்டும். அவள் கருண்ட கூந்தலையும் மேலாடையையும் அசைத்துப் பார்த்த தென்றல், மலர்களின் நறுமணத்தை செண் பக மொக்குப் போன்ற அவள் நாசிகளில் நிரப்பி, அவள் சிந்தனையைக் கலைக்கப் பார்த்துத் தோல்வியே கண்டது.

தென்றலால் சாதிக்க இயலாத காரி யத்தைப் பின்புறமிருந்து ஒலித்த குரல் ஒன்று சாதித்தது.

''பாண்டிய இளவரசிக்குச் சிந்தனை பலமாயிருப்பதாகத் தெரிகிறது!''

குரல் வந்த திசையைச் சட்டென்று திரும்பி நோக்கிய கார்குழலி, அங்கு விக்கிர மன் நிற்பதைக் கண்டு பார்வையைத் தாழ்த் தினாள். அவள் இருதயம் அடித்துக் கொண்ட ஒலி செவிகளில் கேட்டது!

மாலை நேரத்துப் பொன்னிறக் கதிர்கள் பாய்ச்சிய ஒளியில் அவள் ஒரு பக்கக் கன்னம் சிவந்து பளபளத்தது.

செதுக்கிய சிலையாக நின்றவளிடம் விக்கிரமன் கேட்டான்: ''என்னிடம் பேசுவ தில்லையென்று விரதமா?''

''அப்படியொன்றுமில்லை'' – முணு முணுப்பாக வந்தது பதில்.

''பிறகு, ஏன் இந்த மௌனம்?''

''என்னால் உங்களுக்கு எத்தனை சிரமம்?''

கடகடவென்று நகைத்த விக்கிரமன், ''சிரமமொன்றுமில்லை கார்குழலி. நீதான் எனக்குப் பேருதவி செய்திருக்கிறாய்!'' என்றான்.

அவள் பெயரை விக்கிரமன் உச்சரித்த விதம் அவள் உடலை ஒருமுறை சிலிர்க்க வைத்தது. மனம் உவகையால் பொங்க, முகம் இன்னும் சிவந்தது.

''நான் உங்களுக்கு உதவி செய்திருக்கி றேனா?'' வியப்புடன் வினவினாள்.

''ஆம். மாறவர்மனுக்கு உதவ வந்த ஈழத்து உபதளபதியொருவனைப் பிடிக்க உதவினாயே. கவிநாராயணபட்டரே அதைக் குறிப்பிட்டாரே!''

''ஆலயத்தில் கவி கூறியது அப்போ திருந்த மனநிலையில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.''

உரையாடல் தொடர்வது அவள் தயக் கத்தையும் வெட்கத்தையும் சற்று அகற்றி யிருக்க வேண்டும். விக்கிரமன் நிதானமா கவே அவளுக்கு விளக்கினான்.

அவன் கூறியவற்றை விடக் கூறாதது அதிகம் என்று அவள் மனதில் பட்டது.

''இதற்கு கவி நேரிடையாக வர வேண் டுமா? உங்களால் சாதித்திருக்க முடி

யாதா?''

''நீயும் உன் தாயும் இருப்பது அவர் பொறுப்பில். அவரது பொறுப்பு தீரும் வரை உங்களிருவரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அவர் நேரிடையாகவே ஏற்று நடத்துவார்.''

''அவர் பொறுப்பு எப்போது தீரும்?''

விக்கிரமன் விழிகளில் ஆர்வம் படர்ந்தது. குரலிலும் அது பூரணமாகத் தொனித்தது.

''உனக்குத் திருமணமாகும் போது!'' என்றான்.

ஏற்கெனவே சிவந்து போயிருந்த அவள் முகம் இன்னும் கன்றிச் சிவந்தது.

''அதற்காகத்தான் இன்னும் மதுரையிலேயே தங்கியிருக்கிறாரா?''

''இருக்கலாம். பாண்டிய வம்சத்தில் உனக்குத் தகுந்த மணாளனைத் தேட அவருக்கு அவகாசம் வேண்டாமா?''

விக்கிரமனின் வார்த்தைகள் அவள் இதயத்தைத் தைத்தன. அதில் வேதனை வடியத் தொடங்கியதை விழிகளில் பொங்கிய நீர் நிரூபித்தது.

விக்கிரமன் அவள் மனம் புண்பட்டு விட்டதை உணர்ந்தான்.

இரண்டே எட்டில் அவளை நெருங்கியவன், அவள் மலர்க்கரங்களைத் தன் வலிய கரங்களால் இறுகப் பிடித்தான். அவளுக்கு உடல் சிலிர்த்தது. அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தி, தன் விழிகளுடன் உறவாட விட்டான்.

நீர் ததும்பி நின்ற அகன்ற இரு கரு விழிகள் அவள் உள்ளத்தை அவனுக்குப் புலப்படுத்தின.

''கார்குழலி!'' - அவன் அவளை அழைத்த குரலில் மென்மை பின்னியிருந்தது.

''ம்...''

''உங்கள் வம்சத்தில் உனக்குத் தகுந்தவன் யாரும் கவிக்குக் கிடைக்கவில்லையாம்!''

அவள் விழிகள் அவனை ஏறெடுத்து நோக்கின.

''எனவே சோழ வம்சத்தில் வரன் பார்த்திருக்கிறார்!''

கார்குழலியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. வானவீதியில் மேகங்களினூடே பறந்தாள் அவள். கனவு ஏதேனும் காண்கிறோமா என்ற நினைவும் தோன்றியது அவளுக்கு. நனவுலகத்தில் விக்கிரமன் தன் கரங்களைப் பற்றியபடி எதிரே நிற்பது தெரிந்ததும், மெல்ல அவன் நெஞ்சில் சிரம் பதித்தாள்.

''மன்னர் இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே'' என்றாள், சற்றுக் கவலை தோன்ற.

''ஒப்புக் கொண்டு விட்டார்!'' சட்டென்று வந்தது விக்கிரமனின் மறுமொழி. என் தாய் மன்னருக்கு ஓலை அனுப்பினாள். மன்னரிடமிருந்து பதிலும் வந்து விட்டது.''

தான் அறியாமல் பின்னப்பட்ட இன்னொரு வலை இது என்பதைப் புரிந்து கொண்ட கார்குழலி, அந்த வலையில் சிக்கத் தனது மனம் மகிழ்ச்சியுடன் விழைந்து துள்ளுவதையும் உணர்ந்து இழைந்தாள்.

அவர்களிடையே புகுந்தது இன்னொரு குரல்.

''ஆகா! அப்படியா சேதி?'' என்று கேட்டுக் கொண்டே முற்றத்தின் உள்ளே வந்த அம்மங்கை, கண்களை உருட்டி விழித்து, இடையில் கைகளைத் தாங்கிய படி நின்றாள்.

சட்டென்று விக்கிரமனை விட்டு விலகிய கார்குழலி, தலைகுனிந்து முகம் மீண்டும் சிவக்க நின்றாள்.

விக்கிரமன் பதில் கூறினான், ''அப்படித்தான் சேதி!''

கார்குழலியை நெருங்கி அணைத்துக் கொண்ட அம்மங்கை, ''அடிகள்ளி, என்ன மாயம் செய்து என் அண்ணனை மயக்கினாய்?'' என்றாள் பொய்க் கோபத்துடன். ''பிறகு உன்னைப் பேசிக் கொள்கிறேன்'' என்றவள், விக்கிரமனை நோக்கித் திரும்பினாள்.

''அண்ணா! நாம் இன்னும் ஏன் மதுரையிலேயே இருக்கிறோம்?'' என்று வினவினாள்.

''முக்கியமான ஒருவருக்காகக் காத்திருக்கிறோம்'' என்றான் விக்கிரமன்.

''யார் அவர்? உன்னை உறையூரில் வந்து காண மாட்டாரா?''

''இல்லை. அவர் இங்கிருந்து நேராக மன்னரைக் காணச் செல்ல வேண்டும். அவர் கொண்டு வரும் செய்தியும் மிக முக்கியமானது. அதை அறியத்தான் காத்திருக்கிறோம்.''

விக்கிரமன் கூறி முடிக்கவும் அரண்மனை வாயிலில் பெரும் ஆரவாரத்துடன் பல புரவிகள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

(தொடரும்)

''அவரு பத்திரிகைக்கு ஜோக்ஸ் எழுதுவாரு.''

''சைவமா? அசைவமா?''

''அப்படின்னா?''

''வெறும் ஜோக்கா, 'கடி' ஜோக்கான்னு கேட்டேன்!''

– பி. ஜி. பி. இசக்கி



அரைமணி நேரம் செலவிடத் தயாரா?



ஆம்... உங்களது முன்னேற்றத்திற்காக, தினசரி அரைமணி நேரம் செலவிடத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் மேற்கொண்டு படியுங்கள்!...

★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை உங்களது முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக இருக்கிறதா?

★ பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற முடியவில்லையே என்று வருத்தப்படுகிறீர்களா?

★ கவலையை விடுங்கள்... நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அடைய உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் ஒதுக்கினால் போதும்!

ஆம். இந்த அரைமணி நேரத்தில் நீங்கள் தினசரி மேற்கொள்ள வேண்டிய பயிற்சியினை மிகவும் எளிய முறையில் சொல்லித் தந்து, நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாட தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கிறோம்.

எனவே, ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்பயிற்சியின் மூலம் நிச்சயம் நிறைவேறும்.

என்ன? பயிற்சிக்காக தினசரி அரை மணி நேரம் செலவிடத் தீர்மானித்து விட்டீர்களா?

அப்படியானால், உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சியாக ஒரு ஐந்து நிமிடம் செலவு செய்து ஒரு போஸ்ட் கார்டில் "நான் ஆங்கிலம் கற்க விரும்புகிறேன்" என்று எழுதி, .

விவேகானந்தா கல்வி நிலையம்,
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள் பயிற்சி பற்றிய விவரங்களை உங்களுக்கு உடனே அனுப்பி வைக்கிறோம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

NAGA

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

செய்தி

"**நா**ன் அவசரமா திருவாரூர் போகணும். நீ கொஞ்சம் சொன்னாத் தேவலை. இந்தா நம்பர்... ம்.. பிடி... நா வரட்டுமா.. குழந்தைகளை பஸ் ஸ்டாண்டுல நிறுத்தி வச்சுட்டு வந்திருக்கேன்..." பணத்தைத் திணித்து விட்டு சுந்தரமூர்த்தியின் மாமா விரைந்தார்.

பாபு இன்னும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. நண்பன் சுந்தரமூர்த்தியின் மாமா இருக்கும் தெருவில் யாரோ ஒருவர் (பெயர் கேட்கவில்லை) அதிகாலையில் இறந்திருக்கிறார். இதைச் சென்னையில் வசிக்கும் அவரது மகன் சீனுவாசனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆபீஸ் திறந்து முழுசாய்ப் பதினைந்து நிமிடம் ஆகவில்லை. அதற்குள் வெளியே கிளம்பினால் அக்கவுண்டண்ட் முகம் சுளிப்பார். யார் எப்போது வெளியே போனாலும் காப்பி சாப்பிடத்தான் என்பது அவர் ஊகம்.

தொலைபேசிக்குரிய சென்னை நிறுவனம், அயல்நாட்டு கூட்டுத் தயாரிப்பைச் சேர்ந்தது. அழகு சாதனங்கள் உற்பத்தி. சீஃப் கெமிஸ்ட் சீனுவாசன் என்று கூப்பிட வேண்டும்.

இந்த நாளில் யாரும் தந்தியே கொடுப்பதில்லை. விரல் சொடுக்கில் சென்னையும், டில்லியும் கிடைத்து விடுகின்றன. விஞ்ஞானம்!

"என்னய்யா... வந்ததுமே கனவு காண ஆரம்பிச்சுட்டே.." ஏறக்குறைய இடித்து நகர்த்திக் கொண்டே யாரோ போனார்கள்...

நான்கு கட்டடம் தள்ளி எஸ்.டி.டி. பூத் இருக்கிறது.

பாவம் அந்த சீனுவாசன். என்ன உத்தியோகம் பார்த்து என்ன, கடைசி நேரத்தில் அப்பாவுடன் இருக்க முடியவில்லையே... காலஞ் சென்ற கனவான் பையனுக்கு என்று ஏதாவது சொல்ல நினைத்திருக்கலாம்.

பாபுவுக்குத் துக்கமாய் இருந்தது. புறப்பட்டான்.

எஸ்.டி.டி. பூத்தில் மிகப் பெரிய வரிசை நின்றிருந்தது. இது மார்க்கெட்டை ஒட்டிய பகுதி... பாதிப் பேர் வியாபாரிகளாகத் தான் இருப்பர்.

வரிசை நகர்வதாகத் தெரியவில்லை.

வசந்தா கல்யாண மண்டபத்தில் ஒரு பூத் இருக்கிறது. அடுத்த தெருதான்... இங்கு நிற்கும் நேரத்தில் அங்கு சொல்லி விட்டு ஆபீஸ் வந்தே விடலாம். புறப்பட்டான்.

பாவம் சீனுவாசன்.. திடீரென்று செய்தி சொன்னால் வெருவாய்த் திக்குமுக்காடிப் போவான். நகரத்தின் எந்த மூலையில் அவன் குடும்பம் இருக்கிறதென்று தெரியவில்லை. ஆபீஸ்காரர்கள் துக்கம் விசாரிப்பதைக் கடந்து, அவன் மனைவி குழந்தைகளை அழைத்துக் கொண்டு, பஸ்ஸோ ரெயிலோ பிடித்து வர வேண்டும். ஸ்கூலுக்குப் போகும் குழந்தைகள் என்றால் அது ஒரு தனி அலைச்சல்...

"யூனிட் நேத்து நைட்டுலேர்ந்து வேலை செய்யலை சார். போனே டெட்டா இருக்கு. நானும் ஆளுங்க வருவாங்கன்னு பாத்துக்கிட்டிருக்கேன்..." பூத் ஆள் கையிலிருந்த நாவலை விட்டுக் கண்ணை எடுக்காமலே பதில் சொன்னான். அவன் அசுவாரசியமாய்ச் சொன்னது பாபுவுக்கு எரிச்சலைத் தந்தது..

தெருக்காரர்கள் எவ்வளவு நேரம்தான் பிரேதத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள்... எத்தனை பேர் சமைக்காமல் இருந்திருப்பார்கள்... அந்தத் தெருவில் கோயில் இருந்தால் சுவாமியும் பட்டினி கிடக்க நேரிடும்..

"வேற எங்க இருக்கு?"

"மார்க்கெட் தெருவுல இருக்கு.. அங்கே போங்க."


"அங்கிருந்துதான் வரேன்..."

"அப்ப கொறநாடு போக வேண்டியது தான்!"

கொறநாடா... இரண்டு கி.மீ.

பதில் பேசாமல் பாபு போனான்... ஒரு மணி நேரம் பர்மிஷன் போடலாம்... தலைவலிக்கு ஒரு காப்பி அடித்தால் தேவலை.. இந் நேரம் இந்தியா காபி குஞ்சன் நாயர் வந்து விட்டுப் போயிருப்பான்...

"**எ**ன்னது பர்மிஷனா... இப்பத் தான் எங்கியோ பட்டினப்பிரவேசம் போயிட்டு வந்தே.. இருப்பியும் பர்



மிஷனா. எல்லா வேலையும் ஆபீஸ் நேரத்துலியே முடிச்சுக்க... மூவ்மெண்ட்ல சைன் பண்ணிட்டுப் போ...'' அக்கவுண்டண்ட் சிடுசிடுத்தார்.

விஸ்வநாதனிடம் ஸ்கூட்டர் கேட்டான் பாபு. பாபுவின் ஸ்கூட்டர் மெகானிக்கிடம் சிகிச்சைக்காகப் போயிருக்கிறது.

''ரிசர்வ்ல இருக்கு. ஒரு லிட்டர் போட்டுக்கயேன், வர்றச்சே...''

விஸ்வநாதன் கைப் பையைத் துழாவினான். பாபு பரவாயில்லை என்பது போல் நகர்ந்தான்.

முதலில் கொறநாடு பூக். அப்புறம் தான் எல்லாம். ஈ மொய்க்க அங்கு ஒரு பிணம் காத்திருக்கிறது. உரிய காலத்தில் அதற்குரிய கடைசிச் சடங்கை அது ஏற்றுக் கொள்ள வேண்டும், சேதாரம் இல்லாமல்...

கண்ணாடி அணிந்து ஸ்கூட்டரைக் கிளப்பினான். வெண்ணெய் போலப் போனது. கொஞ்ச தூரம்தான். திடீரென விலுக்கென்று குலுக்கலுடன் வண்டி நின்றது. மயிரிழையில் பின்னால் வந்த வாகனம் விலகிப் போனது. பாபுவுக்குக் குப்பென்ற உணர்வு.

உதைத்து, சாய்த்து எல்லாமும் பார்த்தாயிற்று.. இரண்டு முறை உறுமி விட்டு, பின்பு அது கூட வீண் என்பது போல் ஸ்கூட்டர் மௌனமானது.

பெட்ரோல் இல்லையா... குச்சியை டாங்கில் விட்டுப் பார்த்ததில் நனைந்து வெளிவந்தது. இருக்கிறது. அப்புறம் என்ன கேடு.. ஸ்பார்க் ப்ளக் கோளாறா... வண்டியில் டூல்ஸ் பெட்டி இலை என்பது பிரித்த பின்பே தெரிந்தது.

சீனுவாசா... என்னால் தாமதமில்லை. இன்றைக்கு எல்லாமுமாய்ச் சேர்ந்து சதி பண்ணுகிறது. சுந்தரமூர்த்தி மாமா ஏன் என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும்...

என்னால் ஒரு காரியத்தை உருப்படியாய்ச் செய்ய முடியும் என்றுதானே..

அதோ ஒரு ஒர்க் ஷாப் இருக்கிறது... விஸ்வநாதனுக்கென்று பிரத்யேகமான மெகானிக் உண்டு. இதரரிடம் வண்டியை விடுவதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான். ஆயினும் அவசரத்திற்குப் பாபமில்லை.

''ஒயர் கட் ஆயிருக்கு சார்... போயிட்டு அரை மணி நேரம் கழிச்சு வாங்க, ரெடி பண்ணிடலாம்...''

எப்படியும் எழுபத்தைந்திலிருந்து நூறு ஆகலாம்... பாபுவின் மனக் கண்ணில் காலையில் சண்டை போட்ட மனைவி வந்தாள். மளிகைச் செலவுக்காக நூறு ரூபாய் கேட்டதில் பூசல் எழுந்தது. சிக்கனமாய் இருக்கத் தெரியவில்லை, வாரி இறைக்கிறாய் என்று இரைந்தது நிரடிற்று.

அசந்தர்ப்பமாய் அவள் இந்தக் காட்சியைக் காண நேரிட்டால்... ஒன்றும் சொல்ல மாட்டாள். சிலர் பேசிக் கொல்வார்கள். அவள் பேசாமலே குற்றமுள்ள நெஞ்சைக் குறுகுறுக்க வைப்பாள்.

கொறநாடு போகும் பஸ் என்றுமே கர்ப்பிணிதான். வியர்வையில் கண்ணாடி வழுக்கியது. எந்தக் கையால் அதைச் சரி செய்வது... கூட்டம் அழுத்துவதில் பிடித்துக் கொள்ள இன்னும் இரண்டு கை இருந்தால் கூடத் தேவலைதான்.

யாரோ முழங்கையை நகர்த்தியதில் கண்ணாடி சரியாய் ஆன போதும் முகத்தில் நச்சென்று குத்தியது.

இறங்கியதும் ஒரு நிமிடம் நின்று பூரண விடுதலையை அனுபவித்தான். தலையை இன்னும் வலித்தது.

அங்கிருந்த பூத் ஆளில்லாமல் வெறிச்சிட்டது. இந்த பூவிட்டும் செத்து விட்டதா...

''என்ன சார்... மெட்ராசுக்கா.. லைன்ல ஃபால்ட் இருக்கு... காலையிலேர்ந்து வர்றவங்களைத் திருப்பி அனுப்பவே நேரம் சரியா இருக்கு... எதுக்கும் பாருங்க...'' பக்கத்து டீக்கடையிலிருந்து வந்த அவன் போனை நகர்த்தினான்.

ஒவ்வொரு நம்பராகச் சுற்ற எதிரில் நம்பர் சிவப்பில் மின்னியது.

''ஹலோ...'' ஆ.. கிடைத்து விட்டது.

''ஈஸ் திஸ் மெகாலே இண்டியா...?'' பாபுவுக்கு நெஞ்சினுள் ரயில் ஓடியது..

''இல்லே!'' தகர டப்பாவில் கல்லைப் போட்டுக் குலுக்கியதைப் போல ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''ராங் நம்பர்!'' பாபு முனகினான்.

''அதான் சொன்னேனே சார்...!''

வெளியில் வந்த போது வெயில் உறைத்தது.

ஏதோ ஒரு வேகத்தில் கொறநாடு வரை பஸ் பிடித்தாகி விட்டது... திரும்பிப் போக சாமான்யமாய் பஸ் கிடைக்குமா... பர்மிஷன் இன்னும் பத்து நிமிடந்தான் பாக்கி இருக்கிறது.

ஆனது ஆயிற்று... இன்று எப்படியும் சீனுவாசன் என்ற அந்த முகந்தெரியாத இளைஞன் தன் தந்தையாரின் மரணச் செய்தியை என் வாயால்தான் கேட்க வேண்டும். காரியம் ஆகும் வரை எந்த முயற்சியும் முற்றுப் பெற்றதாக அர்த்தமாவதில்லை.

''இன்னும் ஒரு தடவை ட்ரை பண்றேனே!''

பூத் இளைஞன் மாட்டுக் கொட்டிலிலிருந்து நேரே வந்த ஏக கிறிஸ்துவைப் பார்க்கும் அதிசயத்துடன் பாபுவைப் பார்த்தான்.

ஒவ்வொரு எண்ணாய் சர்வ ஜாக்கிரதையுடன் தொட்டான். எந் நேரமும் போன் இணைப்பைத் துண்டிக்கத் தயாராய் விரல்களை வைத்துக் கொண்டான்.

சரியான நம்பர் ஒளிர்ந்தது. ஆயினும் எதிர் முனையில் எடுக்கவில்லை.

மூன்றாம் முயற்சியில் பாபுவுக்கு வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

''மெகாலே இண்டியா...'' சின்னக் குழந்தையைப் போல பெண் குரல் கேட்டது.

''ஹலோ சீஃப் கெமிஸ்ட் சீனுவாசன் இருக்காரா...?'' பின்னணியில் ரேடியோ சானல் சங்கீதம் துல்லியமாய்க் கேட்டது.

''ஒன் மினிட்...'' தொடர்ந்து ஏதோ ஓசைகள்... வேறு இடத்தில் சீனுவாசன் இருக்கிறான் போலிருக்கிறது. அப்பனே.. கிடைத்தாயா இப்போதாவது... பாபுவுக்கு அபத்தமாய் ஒரு சந்தோஷத் துளிர் கிளை விட்டது.

''எஸ்.. சீனுவாசன் ஹியர்...''

''ஹலோ... மாயவரத்துலேர்ந்து பேசறேன். உங்கப்பா காலமாயிட்டார். இன்னிக்கு விடிகாலை. சுந்தரமூர்த்தி மாமா...'' அட சட்... தொடர்பில்லாமல் ஏன் பேசுகிறோம். எப்படியோ செய்தி சொல்லி விட்டேன். சீனுவாசா... அறிமுகமில்லாத என் நண்பனே... தாங்கிக் கொள்.. விசித்திரமான சூழலில் நாம் இருவரும் யாரென்றே தெரியாமல் அறிமுகமாகிறோம்.

''அதுக்கு என்ன இப்போ.. எப்போ பிள்ளையில்லை போடா வெளியிலன்னு சொன்னாரோ, அப்பவே நான் விட்டுட்டேன். மெனக்கெட்டு போன் பண்ணணுமா...?''

சட்டென்று தொடர்பு அறுந்து பில்லுக்கான இயந்திரம் அமைதியைக் கலைத்தது.

நலந்தானா? நலநிதிகள் நலந்தானா?

சமீப காலமாக ஏராளமான நலநிதிகளின் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. இவை பொது மக்களிடமிருந்து டெபாஸிட்டுகளைக் கோரி, அதற்கு 21 சதவீதம் வரை கூட வட்டி தருவதாக அறிவிக்கின்றன. 'அடேயப்பா!' என்று வியக்க வைக்கும் இத்தகைய வட்டி விகிதத்துடன் சென்னையின் மூலை முடுக்குகளிலெல்லாம் கூட புதிய நலநிதிகள் தொடங்கப்படுவதைக் காண்கிறோம். சில பழைமையான நிறுவனங்களும் உண்டு.

பொதுவாக மக்களுக்குக் கூடுதல் வட்டி என்றாலே ஒரு நப்பாசை இருக்கிறது. ஆனால் டெபாஸிட் செய்யப்படும் பணம் பத்திரமாக இருக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். நலநிதிகள் தங்கள் அங்கத்தினர்களிடமிருந்தேதான் பணம் பெறுகின்றன; அங்கத்தினர்களுக்கு மட்டுமே கடனும் தருகின்றன - உண்மை. ஆயினும் அங்கத்தினராகக் கட்டணம், பல நலநிதி நிறுவனங்களில் ரூபாய் ஒன்று மட்டுமே என்பதையும் கவனிக்க வேண்டும்.

நலநிதிகள் பொது மக்களுக்கு மகத்தான சேவை செய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஒருவருக்கு அவசரமாகப் பணம் தேவைப்படும் போது நகைகளை அடகுவைத்தால் கூட வங்கிகளில் சுலபத்தில் கடன் கிடைத்து விடாது. அடகுக் கடைக்குப் போனால் உடனே கடன் கிடைக்கும். ஆனால் வட்டி விகிதம் ஆளை விழுங்கி விடும். இந்தச் சூழலில்தான் நலநிதிகள் இத்தகைய மக்களுக்கு உதவிக்கு வருகின்றன. ஒரு வங்கி, கடன் தவணைகளை ஒழுங்காகச் செலுத்தி விடும் தனது முதல்தர வாடிக்கையாளரிடம் கூட இன்று 24 சதவீதம் வட்டி வசூலிக்கிறது என்பதைப் பார்க்கும் போது நலநிதிகள் நகைக் கடனுக்கு முப்பது சதவீதம் வட்டி வசூலிப்பதை அதிகம் என்று கூற முடியாது.

ஆனால் நலநிதிகள் மீது அரசாங்கமோ ரிஸர்வ் வங்கியோ ஏதாவது கட்டுப்பாடு வைத்திருக்கிறதா, மேலாதிக்கம் செலுத்துகிறதா என்றால், ''இல்லை'' என்றே கூற வேண்டும். வங்கிகள், நிதி நிறுவனங்கள், மற்றும் தொழில்-வர்த்தகக் கம்பெனிகள் டெபாஸிட் பெற்றால் இத்தனை சதவீதம்தான் வட்டி தரலாம் என்ற கட்டுப்பாட்டை ரிஸர்வ் வங்கி விதிக்கிறது. தவிர, பெறப்படும் டெபாஸிட்டின் ஒரு பகுதியை அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்ற விதிமுறையும் உண்டு. வாங்கிய டெபாஸிட் மொத்தத்தையும் வியாபார - வர்த்தகத்துக்கு அல்லது கடன் தருவதற்குப் பயன்படுத்தி விட முடியாது. இத்தகைய கட்டுப்பாடுகள் எதுவும் நலநிதிகள் விஷயத்தில் கிடையாது. எனவே இவை போட்டா போட்டியில் இறங்கி டெபாஸிட்கள் மீதான வட்டி விகிதத்தை அதிகரித்துக் கொண்டே போகின்றன. இது, நிதித் துறையில் நிலவும் பொதுவான, ஆரோக்கியமான வட்டி விகிதங்களுடன் ஒப்பிடத்தக்கதாக இல்லை.

''நாங்கள் கொடுக்கும் கடன்களெல்லாம் பாதுகாப்பானவை; ஏனெனில் அடகுக்குத்தான் கடன் தருகிறோம்; அதனால் பயமில்லை'' என்று நலநிதிகள் கூறலாம். ஆனாலும் ஏராளமான கண்காணிப்பு உள்ள வங்கிகளிலேயே குற்றங்களும் தவறுகளும் நிகழும் போது, மேலிடத்துக் கண்காணிப்பு ஏதுமற்ற நலநிதிகள் சிலவற்றில் குற்றங் குறைகள் மலிவதற்கு வாய்ப்பில்லை என்று கூறி விட முடியாது.

எனவே, ரிஸர்வ் வங்கி இந்த விஷயத்தைக் கவனித்து, நலநிதிகள் சம்பந்தப்பட்ட தன் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்துவது நல்லது. இவை பெறும் டெபாஸிட்கள் குறித்தும் அதற்குத் தரப்படும் உயர்ந்த வட்டி விகிதம் குறித்தும் தனது கருத்தை ரிஸர்வ் வங்கி வெளியிட வேண்டும்.

இப்படி கூறுவது நலநிதிகளின் நலன் கருதியே. அவை கடன் கோரும் மக்களுக்குச் சிறந்த சேவை செய்யும்போதே, டெபாஸிட்தாரர்களும் தங்கள் பணம் பத்திரமாக உள்ளது என்ற மனநிறைவைப் பெற வேண்டும் அல்லவா?

- வி. கோபாலன்

நில்,
கவனி,
வெற்றி கொள்!

'அரைக் காசு உத்யோகம் வாழும் அரசாங்க உத்யோகம்...' - இப்படி நினைப்பவர்கள்தான் உலகத்தில் அதிகம்.

ஆனால் சாரதாவுக்கு இதில் உடன்பாடு இல்லை.

எம்.பி.பி.எஸ்., எம்.டி. படித்தால் வீட்டு வாசலில், தெருமுனையில் பெயர்ப் பலகையின் கீழ் 'கன்சல்டிங் அவர்ஸ்!' என்று சில மணி நேரங்களை அறிவித்து, வைத்தியம் பார்த்து, வருவாய் பெருக்கி, சொந்த வீடு, கார், சொந்த கிளினிக் என்று விரைவில் வளர்ந்து விடுவோர்தான் அதிகம்...

ஆனால் டாக்டர் சாரதாவுக்கு இதிலும் நம்பிக்கை இல்லை.

''பணமும் பதவியும் முக்கியம்னு நான் நினைக்கல்லை... செய்கிற வேலை சம்பளம் மட்டும் இன்றி மன நிறைவையும் தரணும். அதனால்தான் நான் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் பணியில் சேர விண்ணப்பித்தேன்...'' என்கிறார் டாக்டர் சாரதா.

''வேலூர் சி.எம்.சி. ஒரு 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனை. ஆனால் அதன் தலையாய சிறப்பு அங்கு பணியாற்றும் டாக்டர்களின் உள்ளார்ந்த ஈடுபாடுதான். அத்தகையவர்களிடையே வேலை செய்ய எனக்கு மிகவும் பிடித்தது. மூன்று ஆண்டுகள் காஸ்ட்ரோ என்டராலஜி பிரிவிலும் பின்னர் பாதாலஜி பிரிவிலும் வேலை பார்த்தேன்...''

மிகவும் பிடித்த ஒரு வேலையை யாராவது விட்டு விட்டு வேறு புதிய துறைக்குள் புக நினைப்பார்களா...?

டாக்டர் சாரதா முன்வந்தார். கேரளாவில் சொந்த பந்தங்களை விட்டு விட்டு வந்து பணியாற்றியதில் மனநிறைவு பெற்றவர், அந்த பிடித்தமான சூழலிலிருந்து பிரியவும் தயங்கவில்லை.

மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியாவைச் சேர்ந்த அதிகாரிகள் வேலூர் சி.எம்.சி.யில் ஒரு தடய மருத்துவ இயல் (இதை மெடிகல் ஜுரிஸ்ப்ருடென்ஸ் அல்லது ஃபொரன்சிக் மெடிசன் என்பர்) பிரிவை ஆரம்பிக்க வேண்டும் என்று சில வருடங்களாகவே சொல்லி வந்தார்கள். ஆனால் அதற்கான பயிற்சியை மேற்கொண்டு அப்படியொரு பிரிவை அங்கு நிறுவ யாரும் முன்வரவில்லை. கேள்விப்பட்டதும் சாரதா தாம் அப்பொறுப்பை ஏற்பதாகக் கூறினார்.

அவருடைய முடிவைத் 'தவறு' என்று வர்ணிக்காதவர்களே இல்லை.

'பேஜார் பிடித்த வேலை... காவல் துறை, நீதித் துறை என்று பல பக்கங்களில் பொறுப்பு... உனக்கு ஏன் இந்த வம்பு...'



'எம்.டி. படிச்சிருக்கே, வீட்லேயிருந்தபடியே 'பிராக்டிஸ்' பண்ணி சம்பாதிக்கலாம் - இப்போ போய் புதுசா ஏதோ கத்துக்கறேன்றியே... இதில் என்ன லாபம்? என்னத்தைச் சாதிக்கப் போறே...?'

'கற்பழிப்பு, கத்திக் குத்து, தற்கொலை கேஸ்கள்னு எப்பப்பாரு அவலமான சூழ்நிலை. பிணங்களை அறுக்கணும், ஆராயணும்.. இது ஒரு வேலையா..? சமாளிக்க முடியுமா உன்னால்...?'

“

பொறுப்புகளைக் கண்டு ஏன் பயந்து ஓட வேண்டும்? தக்க உதவி பெற்று அவற்றுக்கு என்னை நானே தயார் செய்து கொள்வேன்.

புதுசா கத்துக்கறதுக்கு வயசு தடையில்லை... கத்துக்கற புது விஷயமே லாபம் என்கிற போது, வேறு ஆதாயம் என்ன வேண்டும்! நான் சாதிக்காமல் போகலாம். ஆனால் அதற்கான முயற்சியைச் செய்யாமல் இருக்க மாட்டேன்...

இந்தத் துறை சட்டத்துக்கும் மருத்துவத்துக்கும் இடையே பாலம் போன்ற துறை. இதை அருவருப்பாக ஏன் எண்ண வேண்டும். அப்படி நினைத்தால் மருத்துவத் துறையே அருவருப்பானதுதானே...

”

- எல்லாக் கேள்விகளுக்கும் சாரதாவிடம் பதில் இருக்கது.

தான் இயல்பு...''

''எது...?''

''வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பத்தையும் சந்தோஷமாக அணுகுவது. சிக்கல்கள், பிரச்னைகள், சவால்கள்... எல்லாவற்றையும் பார்த்து முதலில் சிரித்து விடுவேன்... அப்புறம் எப்படி கோபம் வரும்...''

''யார் கற்றுத் தந்தார்கள் இந்த வாழ்க்கை ரகசியத்தை...?''

''அப்பா...! தாயில்லாக் குழந்தையாக வளர்ந்தேன். There were no 'nos' in my life. 'இதைச் செய்யாதே அதைச் செய்யாதே' என்ற வழக்கமான அறிவுரைகளை நான் பெற்றதே இல்லை. அதுவே என் சிந்தனையை, வாழ்க்கையை அணுகும் முறையை உருவாக்கியிருக்க வேண்டும். எனது பிறவி ஊனம் அப்பாவுக்கு என்னைக் குறித்து சற்றே கவலை அளித்தது போலும்... அதனால்தான் மற்றவர்களின்று வேறுபட்டிருப்பது தவறில்லை என் பதை என் அஸ்திவார சிந்தனையாக்கி

சவால்களை வரவேற்கும் சாரதா!

கூடவே, நமக்கு வாசலைத் திறந்து விட்ட ஸ்தாபனமான சி.எம்.சி.யின் வளர்ச்சிக்கு நாமும் ஏதேனும் ஒரு வகையில் உதவ வேண்டும் என்கிற இலட்சிய நோக்கும் இருந்தது.

சாரதா சென்னை வந்தார். சென்னை மருத்துவக் கல்லூரியின் 'ஃபொரன்ஸிக் மெடிசன்' துறையில் சேர்ந்தார். வீடு பிடித்துத் தனியாகத் தங்கி, பயிற்சிக்குப் போக ஆரம்பித்தார்.

பிணங்களின் வாடை, சின்னாபின்னமான உடல்கள், காவல் துறையினரின் 'சரக் சரக்' காலணி சப்தம்... சராசரிகளை அச்சுறுத்தும் இந்தச் சூழலில் இன்று புன்னகையுடன் பயிற்சியைத் தொடர்கிறார். அத் துறையின் தலைவர் அம்ரித் பட்நாயக்கின் வழிகாட்டலை நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

''எப்படி முடிகிறது சாரதா...?'' நாம் ஆச்சரியத்துடன் கேட்டால், ''எனக்கு இது

வார்....''

'ஊனமா...?' கண்களில் கேள்வியுடன் பார்க்கும் நம்மைப் புரிந்து கொண்டு சாரதா சொல்கிறார்.

''என் தோள் பகுதி அமைப்பு வித்தியாசமாக இருப்பதை நீங்கள் கவனிக்கவில்லை போலும்...''

அவரே அதைப் பொருட்படுத்தாமல் பிரகாசமான கண்களுடன் பேசும் போது, நமக்கு அது புலப்படாமலேதான் போகிறது!

– ஸ்ரீதர்

படம் : கோபிநாத்

(அடுத்த வாரம் : புதிய யுக்தி; குவியும் வெற்றி!)

அடுத்த இதழில்....



●● பிரதமர் நரசிம்மராவ் எழுதிய "மாண்புமிகு அமைச்சர்"

- சிறுகதை!

●● தற்காப்புக்குக் கராத்தே!

- கவர் ஸ்டோரி



நீங்கள் கேட்டவை - தராசு

இன்றையச் சூழலில் தமிழக முதல்வராகத் தகுதி உள்ளவர் யார்?

● வி. சிவா, அரசரடி.

? ''அரசியல் சட்டத்துக்கு வலிமையையும் ஸ்திரத் தன்மையையும் அளிக்கும் ஆணி வேர்தான் கவர்னர் பதவி'' என்று தமிழக கவர்னர் கூறியிருப்பது பற்றி...?

! கவர்னர் பதவிதான் அப்படிப்பட்டதே தவிர, கவர்னர்கள் எல்லாரும் அப்படிப் பட்டவர்கள் என்று சொல்லி விட முடியாது!

● சாமா, சீர்காழி.

? நெய்வேலியிலிருந்து உங்க ஊருக்குக் குடிநீரை ரயில் மூலம் கொண்டு வந்த தமிழக முதல்வரை நீங்க ஏன் பாராட்டக் கூடாது?

! குறைந்த செலவில் நிரந்தர ஏற்பாடுகள் செய்ய வாய்ப்புக்கள் இருக்கின்ற போது, தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறாரே என்பதால்தான்.

● மு. ரவிச்சந்திரன், சேலம்.

? தி.மு.க.வின் ரயில் நிறுத்தப் போராட்டம் வெற்றி என்கிறாரே கலைஞர்?

! வன்முறைகளைத் தவிர்க்க ரயில்வே, சர்வீஸை நிறுத்திக் கொண்டு விட்டதைக் கலைஞர் தம் வெற்றியாகக் கருதலாம்; ஆனால் அன்று எஸ்.எஸ்.எல்.ஸி. பொதுத் தேர்வு எழுத வேண்டிய மாணவர்கள், மற்றும் அவசரக் காரியங்கள் தடைப்படத் தவித்தவர்கள் எல்லோரும் தேர்தலில் அவர் தோல்வியையே விரும்புவார்கள்.

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? தமிழகத்தின் எதிர்காலம் யார் கையில்?

! பருவ மழை கையில். தற்சமயம் கோடை மழை கையில்.

● மூக்ஸ், நாரேந்தல்.

? தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு பட்டிமன்றத் தலைப்பு?

! பா.ம.க. ஆதரவைப் பிரதமர் வரவேற்கிறாரா? வெறுக்கிறாரா?

● சி. முருகேசன், திருமருகல்.

? ஏப்ரல் 25 யெல்ட்சின் தலை தப்புமா?

! தலை, தலைமை இரண்டுமே தப்பி விட்டன. ஆனாலும் தமது புதிய கொள்கைகள் விஷயத்தில் முன்னளவு தீவிரம் காட்ட மாட்டார் என்பது அரசியல் நோக்காளர் கருத்து.

● எஸ்.பி. மருதாசலம், விஜயமங்கலம்.

? சஞ்சய் தத் மேமனுடன் தொடர்பு வைத்திருந்ததாக தடா சட்டத்தில் கைதானது பற்றி?

! தடா சட்டம் தடங்கலின்றித் தடாலென்று பாயக் கூடியது. ஆனால் AK-56 வாங்கியதாக ஒப்புக் கொள்வதை வைத்து மட்டுமே தொடர் குண்டு வெடிப்புடன் தொடர்பிருப்பதாகத் தீர்மானிக்க முடியாது. அதற்கு மேலும் சாட்சியம் தேவை. துப்பாக்கிகளை ஒரு 'கிக்'குக்காகக் கூட சினி ஹீரோ வாங்கியிருக்கலாமே!

● எச். மோகன், மன்னார்குடி.

? தற்போதைய சூழலில் தமிழக முதல்வராகத் தகுதியுள்ளவர் யார்?

! அப்போ, ஜெக்கு தகுதி இல்லை என்கிறீரா? கரெக்டுதான் சார் நீங்க நினைப்பது. ராணிப்பேட்டை தேர்தல் ரத்து, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பற்றிய உயர்நீதி மன்றத் தீர்ப்பு இரண்டுமே அவரது ராஜினாமாவைக் கோரக்கூடிய அளவில் பெரிய குற்றங்கள் நடந்திருப்பதைத்தான் உறுதிப்படுத்துகின்றன; கண்டிக்கின்றன.

● தென்றல் கார்த்தி, நாட்டரசன்கோட்டை.

? ''தி.மு.க. - அ.தி.மு.க. என்ற இரு குதிரைகள் மீதும் சவாரி செய்ய மாட்டோம்'' என்று மூப்பனார் கூறுகிறாரே?

! அவர் சொல்லி என்ன, வாழப்பாடியார் பா.ம.க. குதிரை மீது தாவி ஏறத் துடிக்கிறாரே? அது கீழே தள்ளிக் குழியையும் பறிக்காமல் இருக்கணும்! சட்டமன்றத்தில் ஏற்கெனவே கிண்டலடித்து விட்டார் ஜெ. பதிலுக்கு வாழப்பாடியாரின் சமாளிப்புகள் எல்லாம் சாரமற்று 'சப்'பென்றுதான் உள்ளன.

* ''ஆணிவேர்!''



● ஆர். விஜி, அரகண்டநல்லூர்.

? பத்திரிகைகள் எழுதுவன எந்த அளவுக்கு ஆட்சியாளர்களால் மதிக்கப்படுவதாக உணருகிறீர்கள்?

! 'தூக்கி எறியப்படுவீர்கள்' என்று நிருபர்களை மிரட்டும்



✱ பாராட்டக்கூடாதா? ✱ போராட்டம் வெற்றியா? ✱ சவாரி இல்லை ✱ சாரமற்ற சமாளிப்பு ✱ பம்ப் முடுக்கு விழா

அளவுக்கும்; அவ்வப்போது புகைப்படக் காரர்களின் கால்களை உடைக்குமளவுக் கும்; செய்தி பிரசுரமாகு முன்னரே 'அவதூறு வழக்குக்கு உள்ளாவீர்கள்' என்று பத்தி ரிகை ஆசிரியர்களுக்குக் கடுக்காய் கொடுக் குமளவுக்கும்.

● எஸ்.கே. சாமி, சென்னை.

? ஜாதிப் பெயர்களை சென்னையின் தெருக்களிலிருந்து அகற்றிய அரசு, ஏன் மாவட்டங்களின் பெயர்களில் ஜாதிப் பெயர்களை இணைக்கிறது?

! அரசியலும் ஜாதியும், அரசியல்வாதியும் ஊழலும் போல இணை பிரியாதவை.

● சி. மகேஷ், மதுரை.

? அமெரிக்காவில் ஒருவன் தன்னை ஏசுவின் வாரிசு என்று கூறிக் கொண்டு மக்களை அடிமைப்படுத்தி உயிரோடு கொளுத்திய செய்தி பற்றி...?

! அறிவியலில் எவ்வளவோ முன்னேறிய நாட்டில் கூட அப்பாவி மக்களை இப்படி முட்டாளடிக்க முடியும் என்றால், நமது தேச மக்களின் பரிதாப நிலையை எண்ணிப் பார்க்க வைக்கும் நிகழ்ச்சி.

● ராதா கிருஷ்ணன், அரக்கோணம்.

? திருட்டுப் பொருட்களைத் திருப்பிக் கொடுக்க ஒரு விழா: அதில் முதல்வர் பங் கேற்பு! முதல்வருக்கு வேறு வேலையே இல்லையா?

! இருக்கே! நெய்வேலியிலிருந்து வந்த ரயில் தண்ணீரின் குழாயைத் திருப்பி விடும் வேலை; அதற்கு ஒரு விழா. அழகு திருநாவுக்கரசுக்கு லாரியில் நீரேற்றும் பம்ப்பை முடுக்கி விடும் வேலை; அதற்கு ஒரு விழா. நாளைக் குப் பாருங்கள், சாலை யோர அடி பம்புகளின் அங்குரார்ப்பண விழாக்க ளும் அமைச்சர்களின் பங்கேற்புடன் நிக ழும்!

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? கலைஞர் எம்.எல்.ஏ. பதவியை ராஜி னாமா செய்யாமலிருந்திருக்க வேண்டும் என இப்போதும் கூறுவீர்களா?

! சொல்வேன். ரயில் ஓடாது என்று தெரிந்து தண்டவாளத்தில் தலைவைத்துப் படுக்கத் தைரியம் வேண்டாம்; இதற்குத் தான் தேவை. யார் கண்டது, கலைஞர் ஒருவேளை ஒரு ஆரோக்கியச் சூழலைக் கூட (மனம் வைத்தால்) உருவாக்கியிருக்கக் கூடும். அந்த ஆற்றல் அவருக்கு இல்லை என்று நம்ப நான் தயாரில்லை.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? ஒரே மேடையில், ஒரே மாலையில் மூப்பனார், வாழப்பாடி இணைந்து விட்டது பற்றி?

! தொட்டில் குழந்தைகள் மரணம் மூன்றி லிருந்து பத்தாக உயர்ந்ததற்கு அடுத்தபடி யாக, 'ஜெ' அரசின் சாதனைப் பட்டியலில் இடம்பெற வேண்டிய ஒன்று!

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? இலங்கையில் அதுலத் முதலி படு கொலை குறித்து?

! பயங்கரவாத வேலை இல்லை; அரசியல் விரோதம் காரணம் என்று கருதப்படுவ தானது, ஜனநாயகம் எந்த அளவுக்குச் சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. சீரழிவிலிருந்து காப்பாற்று வார் யார், என்பதுதான் புரியவில்லை!

● அப்துள் ரமேஷ், வலங்கைமான். ❑

? விளம்பரங்கள் மூலம் டி.வி. வருமானம் இருபது சதம் உயர்ந்தும் நிகழ்ச்சிகளின் தரம் உயரவில்லையே?

! "நமது நிகழ்ச்சிகளின் தரம் உயரவில்லை என்றுதான் வருத்தப்படுகிறார் இந்த நேயர். 'தரமே இல்லை' என்று சாடாமல், ஏதோ ஓர் அளவில் தரம் இருப்பதாக ஒப்புக் கொள்கிறாரே, அதற்கு நன்றி சொல்லி, அடுத்த கேள்விக்குப் போகலாம்... படிங் கம்மா..."

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
அப்துள் ரமேஷ்,
5, பஸ் ஸ்டாண்டு,
வலங்கைமான் - 612 804.



35. பரதனுடைய உறுதி

பரதன் வந்து விட்டான் என்கிற சமாசாரம் அந்தப்புரமெல்லாம் பரவி விட்டது. தன் துக்கத்தைத் தீர்த்துக் கொள்ள வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த கௌசல்யை இதைக் கேட்டதும், ''பரதனிடம் போகலாம் வா!'' என்று சுமித்திரையையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். அவர்கள் இரண்டு அடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டார்கள், அதற்குள் பரதனே, உன்மத்த கோலத்தில் ராமனுடைய தாயிடம் சரணம் அடைய வந்து விட்டான்.

கௌசல்யை எண்ணினாள், ராஜ்யம் எளிதில் தனக்குக் கிடைத்து விட்ட களிப்பில் மூழ்கி, பட்டாபிஷேகம் செய்து கொள்ள பரதன் அவசரமாகவே கேகய நாட்டிலிருந்து வந்து விட்டான் என்று. எவ்வளவு பிசகு!

வசிஷ்டர் தலைமையில் மந்திரிகளும் சபை கூடி, இறந்து போன மன்னனுக்குப் பரதனைக் கொண்டு உத்தரகிரியைகளை நடத்தி விட்டு, அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து விட வேண்டுமென்று முடிவு செய்திருந்தார்கள் அல்லவா? ஆகையால் பரதனைக் கண்டதும் வீர புருஷனையும் அருமை மகனையும் இழந்த கௌசல்யை தீனஸ்வரத்தில் இவ்வாறு சொன்னாள் :

''பரதனே, யாதொரு இடையூறும் பயமும் இல்லாமல் செய்யப்பட்ட ராஜ்ய பதவி உனக்காக இதோ, காத்திருக்கிறது. கைகேயி சம்பாதித்து உனக்குக் தந்திருக்கிறாள். பெற்றுக் கொண்டு சுகமாக ஆள்வாயாக. தந்தைக்காக நீ மூட்டும் தீயில் நானும் விழுந்து, மன்னன் சென்ற உலகத்துக்குப் போய் விடுகிறேன்'' என்றாள்.

கொடிய விஷம் போன்ற இந்த மொழிகளைக் கேட்ட பரதன் கீழே விழுந்து அவள் பாதங்களைப் பிடித்துக் கொண்டு பேச முடியாதவனாகக் கிடந்தான்.

''பரதனே, நீயே என்னை அழைத்துப் போய் என் வீர குமாரன் எங்கே தவ வாழ்க்கை நடத்துகிறானோ அங்கே கொண்டு போய் விட்டு விடு'' என்றாள் கௌசல்யை.

தாய் கௌசல்யையின் கொடிய மொழிகளைக் கேட்டு வேதனை தாங்காமல் மூர்ச்சையடைந்த பரதன், சற்று நேரம் கழித்துக் கொஞ்சம் தெளிந்ததும் எழுந்து, ''தாயே, ஒரு பாவமும் அறியாத என்னை ஏன் இப்படியெல்லாம் துன்பப்படுத்துகிறாய்? வெகு தூரத்தில் ஒரு விஷயமும் தெரியாதவனாக இருந்தேன் என்பது உனக்குத் தெரியாதா? இங்கே நடந்த சூழ்ச்சியும் பாவமும் எனக்கு ஏதும் தெரியாது. அண்ணன் ராமனிடம் நான் வைத்துள்ள அன்பு உனக்குத் தெரியாதா? இந்தக் கொடுமையை நான் அவனுக்குச் செய்திருப்பேனா? இது உனக்குத் தெரியாதா? நான் அடைந்த சகல அறிவும், பெற்ற



ஞான சம்பத்தும் எல்லாம் நாசமாகப் போகட்டும். இந்தத் தீச் செயலில் எள்ளளவாவது எனக்குப் பங்கிருக்குமானால் உலகத்தில் யார் எந்தப் பெரும் பாவம் செய்து அதன் பயனை அனுபவிக்கிறார்களோ, அந்தப் பாவமும் கர்ம பலனும் எனக்கு வந்து சேரட்டும். சத்தியம் செய்கிறேன், தாயே! ஒரு நாளும் இந்த விஷயத்தில் நான் கலந்தவன் அல்ல; ஆசைப்பட்டவன் அல்ல!''

இரு கைகளையும் உயரத் தூக்கி துஷ்ட மனிதன் செய்யக்கூடிய சகலவித பாவங்களையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கூறி அந்தப் பாவம் தன் மேல் விடியக் கடவது, இந்தச் சூழ்ச்சிக்கு, தான் சம்மதித்திருந்தால், என்று கோர சபதம் செய்தான்.

தன்னைப் பெற்ற தாய் செய்த சூழ்ச்சியின் பயனாகப் பெரிய லாபத்தைப் பெற்ற ஒரு மகன் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று நிரூபிப்பது அந்தக் காலத்திலும் கடினமாகத்தான் இருந்தது. இந்த நிலையில் அப்பாவியான பரதன் சபதங்கள் செய்து அலறி அலறி அழுதான். அரசு இழப்பதை விடவும், வனம் போவதை விடவும் இவ்வளவு நாட்கள் பிரியமாயிருந்த தாயான கௌசல்யை சாட்டிய பழி, குற்றமற்ற பரதனுக்குப் பயங்கர நரக வேதனையைத் தந்தது. ராமனுக்குச் செய்யப்பட்ட அநீதியினால் ராமன் துக்கப்படவில்லை. பரதனுக்குச் செய்த அநீதி மிகப் பெரிது.

பரதனுடைய உள்ளத்தை இப்போது கௌசல்யை கண்டாள். தான் எண்ணியது தவறு என்று உணர்ந்தாள். தன் மடியின் மீது அவன் தலையை எடுத்து வைத்து, ''அன்புக்குரிய மகனே! உன் தூய உள்ளத்தில் உண்டாகியிருக்கும் துக்கத்தைப் பார்த்து என் சோகம் இரு மடங்காகப் பொங்குகிறது. நாம் என்ன செய்ய முடியும், குழந்தாய்? விதியின் வசப்பட்டவர்களாக இருக்கிறோம். புண்ணியவான்களுக்குரிய பதவிகளெல்லாம் உனக்கு இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் உண்டாகக் கடவது'' என்று ஆசீர்வதித்து ஆறுதல் அடைந்தாள்.

முதலில் சந்தேகப்பட்டாள் - சூழ்ச்சியில் பரதனும் கலந்திருப்பான் என்று அல்ல - பரதனுடைய மனத்தில் ஆசையிருந்திருக்கும், அதை அடைந்ததில் பரதனுக்குத் திருப்தி இருக்கும் என்று. பின்னர் பரதனுடைய உள்ளத்தின் கல்மஷமற்ற பான்மையைக் கண்டு இரு மடங்கு திருப்தியடைந்தாள். ஒரு மகன் காட்டுக்குப் போனாலும் இத்தகைய ஒரு மகன் கிடைத்தான் என்று மகிழ்ச்சியடைந்தாள். இந்த இடத்தில் கம்பர் மிக அழகாகச் சொல்லுகிறார் :

தூய வாசகம்
சொன்ன தோன்றலை
தீய கானகம்
திருவின் நீங்கி, முன்
போயி னான்தன்முன்
போந்து ளான்என
ஆய காதலால்
அழுது புல்லினாள்.

பட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, காட்டுக்குப் போன ராமனே திரும்பி வந்து அவனைக் கட்டித் தழுவிக் கொள்வதாகவே எண்ணிக் கோசலை பரதனை எடுத்து, ஆனந்தக் கண்ணீர் விட்டு, அணைத்துக் கொண்டாள்.

மக்களின் உள்ளத்தில் ஏற்படும் பலவித உணர்ச்சிகளைக் கவிஞர்கள் தான் காண்பார்கள். அவற்றைப் பளிச் சென்று காண்பிக்கத் தகுந்த மொழிகளையும் அவர்கள்தான் காண்பார்கள்.

''உன் முன்னோர்கள் பலர் அரசு புரிந்து பெரும்புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அரசு வேண்டாம் என்று சொல்லும் உனக்குச் சமானமானவர்

ராஜாஜி

அவர்களில் ஒருவருமே இல்லை. நீதான் மன்னர்களுக்குள் மன்னன், பரதனே!'' என்று சொல்லி, கோசலை விம்மி விம்மி அழுதாள்.

முன்னை நும்குல
முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே
நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவா!
என்று வாழ்த்தினாள்
உன்ன உன்னநைந்(து)
உருகி விம்முவாள்.

கம்பர் கண்ட கோசலையும் பரதனும் பாரத நாட்டு மக்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்து வாழ்க! அந்தப் பண்பும் நீடூழி வாழ்க!

இறந்து போன மன்னனுக்கு வழக்கப்படி செய்ய வேண்டிய உத்தரக்கிரியைகள் கிரமமாகச் செய்து முடித்தார்கள். ஆறாத துக்கத்தில் மூழ்கிய பரத சத்ருக்னர்களை வசிஷ்டர் முதலான அறிஞர்கள் சமாதானப்படுத்திக் கொண்டு வந்தார்கள்.

மன்னன் இறந்த பதினான்காவது நாள் மந்திரிகள் முதலியவர்கள் சபை கூட்டி பரதனை வணங்கி, ''நம்முடைய பெருந்தகை மன்னன் சுவர்க்கம் சென்று விட்டான். ராம லக்ஷ்மணர்கள் ராஜ்யத்தை விட்டு விட்டுப் போய் வனத்திலிருக்கிறார்கள். நாயகனற்ற இந்த ராஜ்யத்தின் தலைமையை இந்தச் சந்தர்ப்பத்தில் தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆகவே ஒப்புக் கொண்டு எங்கள் அரசனாகப் புகழ்பெற்று விளங்குவீராக! மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய எல்லா மங்களப் பொருள்களைச் சேர்த்து வைத்தும், மற்ற சகல ஏற்பாடுகள் செய்தும், நகரத்துப் பிரமுகர்களும் ராஜ குலத்தவர்களும் காத்திருக்கிறார்கள். ராஜ்யத்தை ஏற்றுக் கொள்வீராக! இது உம்முடைய முன்னோர்களின் ராஜ்யம். அபிஷேகம் செய்து கொண்டு எங்களைக் காப்பாற்றுவீராக!'' என்றார்கள்.

இதைக் கேட்ட பரதன் பட்டாபிஷேகத்துக்காக வைக்கப்பட்டிருந்த சாமக்கிரியைகளையெல்லாம் வலம் செய்து கைகூப்பி வணங்கி விட்டு, அவ்விடம் கூடியிருந்த மகாஜனங்களுக்குச் சொன்னான் :

''மூத்த குமாரனுக்கு உரிமையான ராஜ்யத்தை என்னை ஒப்புக் கொள்ளும் படி குல வழக்கத்துக்கு விரோதமாக நீங்கள் விரும்புவது நியாயமில்லை. உங்களுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகுக. ராமசந்திரன் எனக்கு மூத்தவன். அவன் இருக்கும் அரண்யத்துக்கு நான் சென்று அவனுக்கு அங்கேயே ராஜ்யாபிஷேகம் செய்து வைத்து, ராம லக்ஷ்மணர்களை அயோத்தியைக்கு அழைத்து வரத் தீர்மானித்திருக்கிறேன். இதற்கு வேண்டிய பரிவாரங்களைத் திரட்டி எல்லா ஏற்பாடுகளையும் செய்வீர்களாக. இவ்விடமிருந்து வனத்துக்குப் போகப் பாதை சீராக அமைக்க வேண்டும். எல்லாத் தொழிலாளர்களையும் திரட்டுங்கள். நான் அபிஷேகம் செய்து கொள்ள மாட்டேன். இது என் பிரதிக்ஞை'' என்றான்.

ராஜகுமாரன் சொன்னதைக் கேட்டு, சபையில் கூடியிருந்தவர்கள் எல்லோரும் தங்களையும் அறியாமல் பெருமகிழ்ச்சியடைந்து ஆரவாரம் செய்தார்கள்.

எல்லோரும் பரதனுடைய யோசனையை ஒப்புக் கொண்டு, பெரும் படை பரிவாரத்தோடு ராஜகுமாரன் வனம் சென்று ராமனைச் சந்திக்க எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள்.

வனப் பிரதேசத்தை நன்றாய் அறிந்தவர்கள், கிணறு, வாய்க்கால் வெட்டுகிறவர்கள், சுரங்கம் போடுகிறவர்கள், தெப்பம், படகு முதலிய வற்றைக் கட்டத் தெரிந்தவர்கள், தச்சர்கள், யந்திரம் செய்பவர்கள், சீக்கிரமாகப் பெரு மரங்களை வெட்டத் தெரிந்தவர்கள், மேடு பள்ளங்களை ஒழுங்குபடுத்தத் தெரிந்தவர்கள், சுண்ணாம்பு வேலைக்காரர்கள், காட்டு வழியில் செல்லப் பயிற்சி பெற்றவர்கள், இன்னும் இத்தகையோர் பலரும் கூடிய ஒரு பெரிய தொழிலாளர் கூட்டம் வேண்டிய ஆயுதங்களோடு முன்னால் சென்று எல்லா வேலைகளும் வெகு துரிதமாகச் செய்தார்கள். 'ராமனை அழைத்து வருவோம்' என்று எல்லா வேலையாட்களுக்கும் உற்சாகம். வெகு வேகமாகப் பாலங்கள் கட்டப்பட்டு வந்தன. மரங்கள் வெட்டப்பட்டன. வெகு துரிதமாகச் சேனையோடு ராஜகுமாரன் போவதற்குத் தகுந்த பாதை



தயார் செய்யப்பட்டது. அங்கங்கே மேடு பள்ளம் சமப்படுத்தி, ஈரப் பிரதேசங்களில் ஜலம் வற்ற வெட்டிவிட்டு, வழியில் பெரும் படை தங்குவதற்கு விடுதிகளும் குடிக்கும் தண்ணீர் வசதிகளும் எல்லா வித சவுகரியங்களும் அமைத்து விட்டார்கள்.

இவ்விதம் வனம் செல்ல எல்லா ஏற்பாடுகளும் பரதன் சொல்லியபடி நடந்து கொண்டிருந்தாலும், வசிஷ்டரும் மந்திரிகளும் முறைப்படி பெரிய சபை கூட்டினார்கள். கூட்டி பரதனுடைய மாளிகைக்குத் தூதர்களை அனுப்பி அவனை அழைத்தார்கள். அழைப்புக்கு வந்த பரிவாரத்தின் நாத கோஷங்களைக் கேட்டு பரதன் மிகவும் வருந்தினான். ''அதை நிறுத்துங்கள்'' என்று சொல்லியனுப்பி விட்டு, தம்பி சத்ருக்னனைப் பார்த்து, ''ராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விட்ட என்னை இவ்விதம் துன்புறுத்துகிறார்களே, தாய் செய்த சூழ்ச்சியின் பயனைப் பார்! இந்தப் பழியைச் சுமக்க என்னைத் தனியே விட்டு விட்டு, தந்தை தசரதர் சுவர்க்கம் போய் விட்டாரே. இந்த ராஜ்யம் அரசனில்லாமல் தவிக்கிறது. மாலுமியில்லாத கப்பலைப் போல் அலைந்து ஆடுகிறது'' என்று சொல்லித் துக்கப்பட்டான்.

களங்கமற்ற பரதன் வருகிறான் என்று மிக்க ஆவலுடனும் சந்தோஷ ஆரவாரத்துடனும் சபையில் எல்லாரும் வாயிலைப் பார்த்தவண்ணமாக இருந்தார்கள். சந்திரோதயமானாற்போல் பரதன் சபையில் பிரவேசித்தான். கூடியிருந்த பெரியோர்களை நமஸ்கரித்து, பரதன் தனது ஆசனத்தில் போய் அமர்ந்தான்.

''மேன்மை பெற்ற மகாராஜாவான தந்தையும் உங்கள் சகோதரன் ராமசந்திரனும் உங்களுக்கென்று தந்திருக்கும் ராஜ்யத்தை ஒப்புக்கொண்டு முறைப்படி எங்களை ரட்சிப்பீர்களாக'' என்று வசிஷ்டர் சொன்னதைக் கேட்டதும், பரதன் உள்ளம் ராமனிருக்குமிடம் சென்று விட்டது. அவன் கண்களிலின்று கண்ணீர் பெருகிற்று.

வாலிபனான பரதன் சபை நடுவில் உரக்க அழுது விட்டு, வசிஷ்டரைப் பார்த்து நிந்தித்துப் பேசினான் :

''நான் நல்ல முறையில் வளர்க்கப்பட்டவன். குலத்துக்குரிய பண்பாட்டையும் பெற்றவன். எனக்கு உரிமையற்ற பொருளை நான் எப்படி அபகரிப்பேன்? தகாத காரியத்தைச் செய்யச் சொல்லுகிறீர்களே, இது வியப்பாக இருக்கிறது. தசரதனுடைய புத்திரன் ஒருவன் இதைச் செய்ய ஒப்புக் கொள்ளுவானா? இந்த ராஜ்யம் ராமனுடையது. மூத்தவன், மேலானவன், தர்மாத்மா, திலீபன் நஹுஷன் ஆகியவர்களுக்குச் சமானமானவன். அவனல்லவோ இந்த ராஜ்யத்துக்கு உரிய அரசன்? ஆரியனுக்குத் தகாத ஒரு காரியத்தை என்னைச் செய்யச் சொல்லுவது சரியல்ல. இங்கிருந்து வனத்திலிருக்கும் ராமனுக்குக் கைகூப்பி வணங்குகிறேன். அவனே அரசன், அவனே அரசனாகத்தக்கவன், நானல்ல!''

இந்தப் பேச்சைக் கேட்ட சபையோர் இவனல்லவோ பெருந்தகை என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

மீண்டும் பரதன் சொன்னான் : ''அரசனான ராமனை என் பேச்சால் சம்மதிக்கும்படி செய்ய முடியாவிட்டால் நான் அங்கேயே வனத்திலிருந்து தவமிருப்பேன். நீங்கள் பெரியோர்கள் எல்லோரும் எப்படியோ சகல உபாயங்களையும் உபயோகித்து பலவந்தமாக வேனும் ராமனை அயோத்திக்குக் கொண்டு வந்து பட்டம் சூட்ட வேண்டியது உங்கள் கடமை.''

இப்படிச் சொல்லி விட்டு அருகிலிருந்த சுமந்திரனைப் பார்த்து வனம் போவதற்குத் துரிதமாக எல்லா ஏற்பாடுகளும் செய்யும்படி கட்டளை விட்டான். நகரமெல்லாம் ஆரவாரித்து மகிழ்ந்தது. ராமன் வந்தே விட்டான் என்கிற உணர்ச்சி பெற்று மகிழ்ந்தார்கள். பரதன் எப்படியாவது ராமனை அழைத்து வருவான் என்று நம்பினார்கள்.

(தொடரும்)



''நேத்து அந்தத் திருடனைத் துரத்தித் துரத்திப் பிடிச்ச...''
''பலே! திருட்டுப் பொருள்களையெல்லாம் மீட்டுட்டீங்களா?''
''ஊகூம்... மாமூலை மட்டும் கண்டிஷனா பேசி வாங்கிட்டு வந்திட்டேன்!'' - கச்சி மதிராஜ்



பறக்காமலே சிரிக்கலாம்!



நன்றி : "பிளேன் பானிக்" (விமானம் சம்பந்தப்பட்ட ஜோக்குகள் மட்டுமே கொண்ட புத்தகம்)

ரசித்தவர் : ஜூலி

சினிமாவிலிருந்து நாடக உலகுக்கு!

நவரஸ நினைவுகள் - 16

வீட்டுக்குச் செல்லும் வழியில், என்னுடன் வந்த மேக் அப் உதவியாளர் லட்சுமியும், ஹேர் ஸ்டைலிஸ்ட் ஜோஸஃபீனும் குழம்பியபடி வந்தார்கள்.

''உங்களிடம் நவீன உடை எதுவும் இல்லையே...!'' என்றார் லட்சுமி.

ஒரு பிரபல ரெடிமேட் ஆடைகள் கடையின் பெயரைச் சொல்லி ''அங்கே போய் ஏதாவது தேர்ந்தெடுக்கலாமா....?'' என்றார் ஜோஸஃபீன்.



''இல்லையில்லை; என் வீட்டுக்கே போகலாம்'' என்ற நான் அங்கு போய்ச் சேர்ந்ததும் பீரோவைத் திறந்து ஒரு புடைவையை எடுத்தேன். கறுப்பு நிறத்தில், தாமரைப் பூ வடிவ ஜிகினா வேலைப்பாடுகளுடன் கூடிய அந்தப் புடைவையை ஹாங்காங் சென்ற போது 'இந்தியா ஸாரி ஸ்டோரில்' வாங்கியிருந்தேன். இரவு வானத்தைப் போல் பிரகாசித்த அந்தப் புடைவையை எடுத்துக் கொண்டு ஸ்டூடியோவுக்குத் திரும்பினோம். லட்சுமி, ஜோஸஃபீனின் உதவியுடன் அந்தப் புடைவையை நவீன முறையில் உடலைச் சுற்றிக் கட்டிக் கொண்டேன். ஒரு சில இடங்களில் என் கைத் திறனையும் காட்டியதன் விளைவு எனக்கே அளவெடுத்துத் தைத்தது போல் அந்த உடை அமைந்துவிட்டது!

தயாராகி செட்டுக்கு வந்ததும் சிவாஜி கணேசனுக்கு ஒரே ஆச்சரியம். ''எங்கேம்மா ஜானகி இந்த மாதிரி 'சிக்'குனு ஒரு டிரஸ்ஸை பிடிச்சே...?'' என்றார். வெறும் புடைவையைத்தான் இப்படி உடுத்திக் கொண்டிருக்கிறேன் என்றதும் மேலும் அதிசயப்பட்டு ''இதுதான்மா நாங்க எதிர்பார்த்தது....'' என்றார். டைரக்டரும் ''கச்சிதமாய் இருக்கு....'' என்று பாராட்ட, முதல் ஷாட் எடுக்கத் தயாரானார்கள்.

கையில் மைக் பிடித்து, கம்பீரமாக அதே சமயம் ஒயிலாக நடந்து மேடையில் நான் நுழைய வேண்டிய காட்சி. முதல் டேக்கிலேயே ஷாட் ஓ.கே. ஆக, 'பார்த்த ஞாபகம் இல்லையோ' என்று தொடங்கும் பாடல் காட்சி மளமளவென்று எடுத்து முடிக்கப்பட்டது.

நான் 'விக்' வைத்துக் கொண்டு நடித்த முதல் படம் புதிய பறவைதான். என் உயரத்தைக் கூட்டிக் காட்ட வித்தியாசமான ஹேர் ஸ்டைல் செய்து கொண்டதோடு, ஹைஹீல் செருப்பு வேறு அணிந்திருந்தேன்.

பாடல் காட்சியின் ரஷஸ் பார்த்த தாதா மிராஸிக்குப் பரம திருப்தி. சிவாஜி கணேசனுக்கும் சந்தோஷம். காரியம் இவ்வளவு சுலபமாக முடிந்ததே என்று எனக்கு ஆச்சர்யம்.

''இனிமேல் ஜானகியின் உடைகளை அவரே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். அவரை விட பொருத்தமாக, பிரமாதமாக யாராலும் தேர்வு செய்ய முடியாது....'' என்று சொல்லி விட்டார் சிவாஜி சார்!

தாதா மிராஸியின் உதவியுடன் 'புதிய பறவை' படத்தில், என் கதாபாத்திரத்தின் குணாதிசயங்களை மிகக் கவனமாக வெளிப்படுத்தினேன். குடிப் பழக்கம் உள்ள பெண்; போதையில் இருக்கும் போது தன் கணவரிடம் வேறொரு ஆடவரை நண்பராக அறிமுகப்படுத்துபவள்... இத்தகைய ஒருத்தியைத் திரையில் பார்க்கும் போது ரசிகர்களுக்கு வெறுப்பு வரக்கூடாது... கம்பி மேல் நடக்கிற இந்த வித்தையை வெற்றிகரமாகச் செய்து காட்டியதால் என் திரையுலக வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையே ஏற்பட்டது....

✱ மேஜர் சுந்தர்ராஜன்

சௌகார் ஜானகி



'புதிய பறவை' வெளியானதும் பலதரப்பட்ட ரசிகர்களிட மிருந்து பாராட்டும் வாழ்த்துக்களும் வந்தன. சிங்கப்பூர் ஹாங்காங் போன்ற வெளி நாடுகளில் இந்தப் படம் வெளியான பிறகு, நான் ஒருமுறை சிங்கப்பூர் சென்றேன். அந்தப் பயணத்தின் போது கோவிலுக்குப் போனாலும் சரி, ஹோட்டலுக்குப் போனாலும் சரி, ரசிகர்கள் என்னை ஆட்டோகிராஃப் கேட்க ஆரம்பித்தார்கள். அது மாதிரியான வரவேற்பை நான் அதுவரை பெற்றதேயில்லை.

சினிமா உலகில் நான் புகழ்பெற்ற கால கட்டத்தில் என்னைப் பார்ப்பதற்காக ஒருவர் சைக்கிளில் வந்தார். கம்பீரமான தோற்றம் உடையவர்.

''என் பெயர் சுந்தர்ராஜன் 'மேஜர்' சுந்தர்ராஜன். மேஜர் சந்திரகாந்த் என்ற மேடை நாடகத்தில் மேஜராக நடித்ததால் இந்தப் பெயர்....'' என்று தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

''ஒரு காரியமாகத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்....'' என்று அவர் சொன்ன போது, ஏதோ மேடை நாடகத்துக்குத் தலைமைதாங்க அழைப்பதற்குத்தான் வந்திருக்கிறார் போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

''ராகினி ரிக்ரியேஷன்ஸ் என்பது எங்கள் நாடகக் குழுவின் பெயர். எங்கள் நாடகத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்...'' என்று அவர் சர்வ சாதாரணமாய்ச் சொன்னதைக் கேட்டு எனக்கு இலேசான அதிர்ச்சி.

'ஏதடா, நாடக மேடைப் பக்கமே எட்டிப் பார்க்காமல் சினிமாவில் நுழைந்து, மேடு பள்ளங்களைக் கடந்து எனக்கென்று ஒரு நிலையான இடத்தை இப்பத்தான் கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்டிருக்கிறேன்.... என்னைப் போய் நாடகத்தில் நடிக்க அழைக்கிறாரே...' என்று எனக்குத் தோன்றியது.

''சாரி சார்! எனக்கு மேடை நடிப்பில் ஆர்வம் இல்லை; அதனால உங்க யோசனை 'ஒர்க் அவுட்' ஆகாது....'' என்று சொல்லி விட்டேன்.

ஆனால் மேஜர் சுந்தர்ராஜன் என்னை இலேசில் விடவில்லை.... ''எங்கள் குழுவில் கே. பாலசந்தர் என்று ஒருவர் இருக்கிறார் - நாடகாசிரியர்; மிகச் சிறந்த நடிகரும் கூட. இப்போது நான் நடித்துவரும் சிடையர்ட் ராணுவ மேஜர் பாத்திரத்தில் முதலில் அவர்தான் நடித்துக் கொண்டிருந்தார். அவரை நீங்கள் அவசியம் சந்திக்க வேண்டும். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்னார். சொன்ன படியே சந்திப்புக்கு ஏற்பாடும் செய்தார்.

பாலசந்தர் தமது அடுத்த நாடகத்தின் கதை என்ன என்று என்னிடம் கூறினார். விபத்துக்கு உள்ளாகும் ஒருவன், மூளை பாதிக்கப்படுவதால் தன் காதலியைத் தன்னுடைய அம்மாவாகவே எண்ணுவான். காதலுக்குப் பதிலாக அவள் மீது அவனுக்கு ஒரு மகனின் பாசமே மேலிடும். 'அம்மா, அம்மா' என்றே அவளை அழைப்பான். காதலியும் அவன் நிலைக்கு இரங்கி, அவனைத் தன் மகன் போலவே பாவிக்கத் தொடங்கி விடுவாள்.

இது ரொம்ப புரட்சிகரமான கதையாக எனக்குத் தோன்றியது. ஆனால் சினிமாவில் பிரபலமடைந்த பிறகு மேடை நாடகத்தில் நடிக்க ஒப்புக்கொள்வதா என்ற குழப்பம் இருந்தது. 'சினிமா ரசிகர்கள் நான் நாடகத்தில் நடிப்பதை விரும்புவார்களா? மேடையில் நடித்தால் என் சினிமா வாய்ப்புகள் பாதிக்கப்படுமா?'' போன்ற கேள்விகள் என் மனத்துள் துளைத்தெடுத்தன.

ஆனால் பாலசந்தர் தம் பேச்சால் அவற்றையெல்லாம் ஓரங்கட்டி விட்டார்.

''உங்கள் திறமையைப் பற்றி உங்களுக்கே தெரியவில்லை' உங்களால் மேடையில் நன்றாக நடிக்க முடியும். சினிமாவில் பெற்றதைப் போலவே நாடகத்திலும் ரசிகர், பத்திரிகையாளரின் பாராட்டைப் பெறுவீர்கள்'' என்று உற்சாகம் ஊட்டினார்.

மெழுகுவர்த்தி - இதுதான் அந்த நாடகத்தின் பெயர். பதினைந்து நாட்கள் ஒத்திகை நடந்தது. வசனம் பேசும் முறை; மிகைப்படுத்தாத நடிப்பு... எல்லாவற்றையும் நுணுக்கமாகச் சொல்லித் தந்தார் பாலசந்தர். ஒவ்வொரு நாள் ஒத்திகையின் போதும் என்னால் மேடையில் சிறப்பாக நடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை எனக்குள் வளர்ந்து வந்தது.

அரங்கேற்ற தினமும் வந்தது. மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் நடக்கவிருந்த அந்த முதல் நாடகக் காட்சிக்கு எம்.ஜி.ஆர். தலைமை வகிக்க அழைக்கப்பட்டிருந்தார். அன்று காலை முதலே எனக்குள் டென்ஷன் பெருக ஆரம்பித்தது. 'நாடகம் என்பது சினிமா மாதிரி இல்லையே... ஏதேனும் தவறு செய்து விட்டால் 'ரீ - டேக்'கா எடுக்க முடியும்....?'

(தொடரும்)

டி.கே.ஸி.

கொஞ்ச நாளாக ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரைச் சிலர் வெகு கோபமாகத் தாக்கி வருகிறார்கள் என்று தெரிகிறது. தமிழ் என்றால் என்ன, கவிதை என்றால் என்ன என்பதை எனக்கு ஓரளவு புகட்டிய ஆசிரியரிடத்தில் எனக்கு வரம்பற்ற அன்பும் பட்சபாதமும் இருக்கத்தான் செய்யும். ஆகையால் நான் அவருக்காகப் பரிந்து பேசினால் அதற்கு ஒருவேளை மதிப்பு இராது. ஆயினும் என் பேச்சல்ல, நானே ஒரு அத்தாட்சியாவேன் - டி.கே.ஸி. யின் தமிழ்ப் பணிக்கும், பெருமைக்கும், பேச்சை விடப் பொருட்சான்றே வலியதாகும். என்னைப் போன்ற ஒருவனையுங் கூடத் தமிழாசை கொள்ளச் செய்தவர் டி.கே.ஸி.தான். இதை இப்போது பலர் அறியச் சொல்லுகிறேன்; உபசாரமல்ல - உண்மை.



என்னைத் தள்ளுங்கள் ; -தமிழ் நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரச் சேனை சேருமாறு இக் காலத்தில் ஊக்கம் உண்டாக்கியவர் டி.கே.ஸி. என்றே சொல்லுவேன். பலர் பல அரிய பணிகள் செய்திருக்கிறார்கள், செய்தும் வருகிறார்கள். ஆனால் டி.கே. ஸி.யின் தமிழ்ப்பணி ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதை வேறு யாரும் செய்த தில்லை. இதயத் தத்துவமும் கவிதையின் தனிப் பண்பும் அறிந்து பெரும் பணி செய்பவர் டி.கே.ஸி.

மகனைப் பலிகொடுத்ததையும் உடல் நோயையும் ஆத்ம சக்தியைக் கொண்டு மறந்து, துக்கங்களுக்கும் துன்பங்களுக் குமிடையில் யோகியைப் போல் நின்று தமிழ்ப் பணி செய்து வருகிறார். அவர் மனது புண்படச் செய்வது வீரியமல்ல; தமிழ்ப் பணியுமல்ல, சுத்த அறியாமை.


எந்த அபிப்பிராய பேதத்தைக் கொண்டு அவர் இப்போது தாக்கப்படுகிறார்? டி.கே.ஸிக்குக் கம்பர் எவ்விதக் குற்றமும் குறையுமில்லாமல் விளங்கும் தெய்வீக அறிவும் உணர்ச்சியும் சிருஷ்டி சக்தியும் கொண்ட ஒரு கவியாவார். ஆகை யால் அவருக்கு எது அழகாகத் தோன்ற வில்லையோ, எது பூரண ஒளியின்றி மங்கி விளங்குகிறதோ, அதை அவர் கம்பர் எழுத்தல்ல என்று நீக்கி விடுகிறார். அவசரத்தில் அல்ல. நிதானமாக ஆராய்ந்தே இவ்வாறு செய்யத் துணிகிறார். ஏட்டில் பக்தி வைக்காமல் தாம் கண்ட கம்பரின் மேல் அபார பக்தி வைத்துப் பாட்டுகளைத் திரட்டுகிறார். இது இஷ்ட தேவதை பூஜைக் கிரமம். ''அவரவர் தமதம தறிவறி வகை வகை'' என்று ஆழ்வார் பாடிய முறையில் பக்தியுடன் ஆராதிப்பவர் ஒருவரை யாரும் தாக்குதல் கூடாது.

அச்சியந்திரமும் காகித ஏடுகளும் இல்லாத பழைய காலத்தில் ஒரு பெரிய காவியம் எவ்வாறு மக்களிடை வழங்கி வந்தது என்பதை இந்தக் காலத்தில் கற்பனை செய்து கொள்ளுவது கஷ்டம். கற்பனை செய்து சாந்தமாக ஆராய்பவர்களுக்கு டி.கே.ஸி. சொல்லும் அபிப்பிராயங்களில் எதும் வியப்புத் தோன்றாது.

- சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

புத்தகப் பரிசு

மேடையில் உட்கார்ந்திருப்பவர் தற்காலத்தில் ''தமிழ்நாட்டின் சிறந்த கவி'' என்று பாராட்டப்படும் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை; அவர் அளிக்கும் கவிதைப் புத்தகப் பரிசை அவ்வளவு



அடக்க ஒடுக்கத்துடன் வாங்கிக் கொள்கிறவர், பதினாயிரக் கணக்கான தமிழ் மக்களைத் தமது ஹாஸ்ய நடிப்பினால் மகிழ்வித்து வரும் ஸ்ரீமதி டி.ஏ. மதுரம். ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை தருந்த பாத்திரத்துக்குத் தான் பரிசு அளித்தார் என்பது சுபாநு வருஷப் பிறப்பு தினத்தில் தெரிய வந்தது. அன்று இரவு ரேடியோவில் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனும், ஸ்ரீமதி டி.ஏ. மதுரமும் நடத்திய கச்சேரியில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையின் அழகான பாடல்கள் சிலவற்றை ஆனந்தமாகப் பாடினார்கள். முக்கியமாக, ''பாட்டுக் கொரு புலவன் பாரதியடா!'' என்று தொடங்கும் பட்டிக்காட்டான் பாட்டு, மிகவும் நன்றா யிருந்தது. ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் தம்பதிகள் நிரைக் காதலர்கள் மட்டுமல்ல - தமிழ்க் காதலர் களுங்கூட - என்பது அன்றைய தினம் வெளியாயிற்று.

– அட்டைப்பட விளக்கம்

ரூஸ்வெல்ட்டுடன் போட்டி

உலகத்திலுள்ள நூலாசிரியர்களுக்கெல்லாம் நாக்கில் ஜலம் ஊறும்படியான ஒரு செய்தி சில நாளைக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்தது. அங்கே ஒருவர் ஒரு புத்தகம் போட்டாராம். போட்ட மூன்று வாரங்களில் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனையாயினவாம்! அந்த அதிசய ஆசிரியரின் பெயர் வெண்டல் வில்கி. சென்ற அமெரிக்கத் தேர்தலில் பிரஸிடெண்ட் ஸ்தானத்துக்கு ஸ்ரீ ரூஸ்வெல்ட்டுடன் போட்டியிட்டவர். ஸ்ரீ வில்கி அப்படி அந்தப் புத்தகத்தில் எழுதியிருப்பதுதான் என்னவென்றால், சமீபத்தில் அவர் செய்த உலகப் பிரயாணத்தின் வரலாறுதான். வில்கி நமது பிரயாணத்தில் இந்தியாவுக்கு வராவிட்டாலும், எகிப்திலிருந்து அலாஸ்கா வரையில் அவரை அநேகர், ''இந்தியா விஷயம் என்ன?'' என்று கேட்டுக் கொண்டிருந்தார்களாம். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை வில்கி மேற்படி புத்தகத்தில் பலமாக ஆதரிக்கிறாராம். ஆமாம்; வில்கி இவ்வளவு சரியான அபிப்பிராயம் கொண்டிருப்பதின் காரணம் என்னவாயிருக்கலாம்? - ஒருவேளை, ''கல்கி''க்குப் பிராஸமாய் ''வில்கி'' என்ற பெயர் அமைந்திருப்பது தானோ!



– அட்டைப்பட விளக்கம்

குஷி; குஷி இல்லை!



– நிகழ்ச்சிச் சித்திரம் – உம்மன்

வட்டமேஜை

மயங்கியது மயில் மட்டுமல்ல!

◆ 'காட்டு வீரப்பனும் வீட்டு வீரப்பன்களும்!' தலையங்கம் பொது மக்களின் பொருமல்களையே படம் பிடித்துக் காட்டியிருந்தது. முதலில் அவனுக்கு உதவும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அடையாளம் காணப்படுவதுதான் அவன் அழிவுக்கு அஸ்திவாரம் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. கன கச்சிதமான தலையங்கம்.
காட்டூர்,
எஸ். அருள்மொழி.

◆ ஏன் சார்! முதல்வருக்குள்ள பல பொறுப்புகளுக்கு மத்தியில், சட்டசபையில் தாமரைக் கனி யாரை அடிக்கிறார் என்றெல்லாம் கவனித்துத் தடுத்துக் கொண்டிருக்க முடியுமா? தாக்குப் பின்னால் ஆயிரம் கார்கள் பவனி வருகின்றனவா? கூட்டங்களுக்கு விண்ணைத் தொடும் கட்-அவுட்டுகள் இருக்கின்றனவா? ஆடம்பர மாளிகை கட்டப்பட்டிருக்கிறதா? என்பதைக் கவனிக்கவே நேரம் சரியாயிருக்குமே!
புதுக்கோட்டை,
என். ராஜபாக்கியம்.

◆ தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களை ஞாபகம் கொள்ளும் அரசியல்வாதிகள் மத்தியில், மணிசங்கர ஐயர் விடாப்பிடி உச்சிக்கே செல்கிறார். மனம் நம்ப மறுக்கிறது அவருடைய தொகுதி உழைப்பை! அரசியலுக்கே இவர் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.
திருச்சி, தி. மா. தமிழ்முகன்.



◆ 'தொகுதி முன்னேற்றம்' என்ற முயற்சியில் செயல்படும் மணிசங்கர ஐயரின் போக்கு, வித்தியாசம் காட்டுகிறது; மகிழ்ச்சியைத் தருகிறது. 'மணி'யின் ஓசைக்கு மயில் மட்டுமல்ல; நாங்களும் மயங்கி நின்றோம்.
திருச்சி - 17, பி. பப்லுபரத்வாஜ்.

◆ 'புரிதல்' சிறுகதையில் இரண்டு உள்ளங்களின் போராட்டம் மனதில் பதியும்படியும் மீண்டும் மீண்டும் படிக்கும் வகையிலும் இருக்கிறது.
விழுப்புரம்,
டானிபென்னட்.

◆ சபாஷ்! பாராட்டுக்கள். எதனாலே? 'எதனாலே? எதனாலே?' என்று விஞ்ஞானக் கேள்விகளுக்கான பதிலை வெளியிட்டதாலே!
தூத்துக்குடி,
எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ ஐம்பது வருடங்களுக்கு முன் (1943) 'கல்கி' எழுதிய தீரர் சத்தியமூர்த்தி கட்டுரை - ஒரு தனி மதிப்பீட்டையும் சிலிர்ப்பையும் தந்தது...
பள்ளிபாளையம்,
கே. இரஞ்சனிப்பிரியன்.

◆ தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் இப்படியொரு கற்றுலாத் தலமா என பலரை வியப்பில் ஆழ்த்தி விட்டது, "தவழும் அலைகளில் தரங்கம்பாடி" என்ற கட்டுரை. கட்டுரைக்கான படங்களும் அந்த இயற்கை எழில் கொஞ்சும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடத்தை எப்போது பார்ப்போம் என்ற ஏக்கத்தை ஏற்படுத்தும்படியிருந்தது குறிப்பிடத்தக்கது.
தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

◆ "இந்தச் சமுதாயத்தின் எல்லா இடத்திலும் ஊழலும், லஞ்சமும் மலிந்து விட்டது என்பதை மிக அருமையாக எடுத்துக்காட்டியுள்ளது "உயிர் மூச்சு" சிறுகதை.
வயலோகம், எஸ். குருசேகர்.

◆ முதல் மலைவாழ்சாதி முதல்வர் தாரத் தேவ் கடந்து வந்த அரசியல் பாதைகள் வியக்க வைத்தன. நமக்கும் இப்படி ஒருவர் முதல்வர் கிடைப்பாரா என ஆதங்கப்படவும் வைத்து விட்டது கட்டுரை.
சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ கல்கி '93 தொழில் மலரில் 'அட்டி உங்கள் வீட்டிலே' என்ற கட்டுரையில், எங்கள் Black Rose நிறுவனத்தைப் பன்னீர்செல்வம்தான் 1975 முதல் என்னுடனும் பழனிவேலுவுடனும் சேர்ந்து நிர்வகித்து வருகிறார் என்பதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது சரியல்ல. Black Rose நிறுவனத்தை 1976 இல் தொடங்கியவன் நான்தான். 1981 ஆம் ஆண்டில்தான் எனது பார்ட்னராகத் தொழிலில் நுழைந்தார் பன்னீர்செல்வம்.
சென்னை - 17, சேகர் ஜேம்ஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.


பல தேசப்
பெருமைகளை
முகத்திலே பிரதிபலிக்கும்
பேரெழில் பெண்மணி
குட்டிகூராவின் மூன்று இன்டர்நேஷனல் பியூட்டி டாலக்குகள். உலகின் சிறந்த நறுமணங்கள் நிரம்பியவை. பட்டுப்போன்று மென்மை யானவை. உங்கள் முகத்திற்குப் பேரெழில் சேர்ப்பவை. பல தேசங் களின் பெருமைகளின் சிறப்பை உங்கள் முகத்தில் பிரதிபலிக்கச் செய்பவை.
Cuticura Lavender Mist
Cuticura Springfresh
Cuticura Classic
Cuticura
International
BEAUTY TALCS

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka